# தொல்காப்பியர்

# பொருட்படலப் புத்துரை

[புறத்திணையியல்]

MADURAI UNIVERSITY LIBRARY
Dr. T. P. MEENAKSHISUNDARAN LIBRARY
Madurai Kamaraj University.
MADURAI-625 021.

கணக்காயர், டாக்டர்

நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., D.Litt.

நாவலர் புத்தக நிலையம்,
நூல் வெளியீட்டாளர்கள்-விற்பனையாளர்கள்
48, மேலமாசி வீதி, மதுரை-1.

விற்பனை உரிமை:

நாவலர் புத்த[illegible] நிலையம்
நூல் வெளியீட்டாளர்கள்—விற்பனையாளர்கள்
பசுமலை :: மதுரை-4.

அறப்பணிக் குழு வெளியீடு: 3.
முதற் பதிப்பு—நவம்பர் 1942.
இரண்டாம் பதிப்பு—சூன் 1965.

வெளியீடு:
நாவலர் சோமசுந்தர பாரதியார்
கல்வி அறப்பணிக் குழு,
'நாவலர் இல்லம்', பசுமலை, மதுரை-4.

[அனைத்துரிமையும் அறப்பணிக் குழுவிற்கே]

# THOLKAPPIAR PORUTPADALAP PUTHURAI

## PURATHINAI IYAL

[All Rights Reserved]

*Published by:*

Navalar Somasundara Bharathiar
Education Charity Trust,
*'Navalar Illam', Pasumalai, Madurai-4.*

குறிப்பு:— அறப்பணிக் குழுவிடமிருந்தும் நூல் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூ 5—00

# முன்னுரை

தமிழ்நாட்டில், பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பவர்க்கும், தமிழ், தமிழ்ப் பண்பாடு முதலியன பற்றி ஆய்வியல் நடத்துபவர்க்கும் உதவித்தொகையோ, பரிசோ அளித்தல்; அரிய தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடல்; தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய எல்லா வழிவகைகளையும் மேற்கோடல்; நாவலர் ச. சோ. பாரதியாருக்குத் தக்கவாறு நினைவடையாளம் ஏற்படுத்தல்— ஆகிய நோக்கங்களைக் கொண்டு, **''நாவலர் சோமசுந்தர பாரதியார் கல்வி அறப்பணிக் குழு''** ஒன்று தோற்றுவிக்கப் பெற்று 1963-இல் பதிவும் செய்யப்பெற்றுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள் விவரம் வருமாறு:—

1) திருமதி. வசுமதி பாரதியார், 2) டாக்டர் திரு. சோ. இராசாராம் பாரதியார், L. M. P.; 3) திருமதி. கி. இலக்குமி பாரதியார், 4) திரு சோ. இலக்குமிரதன் பாரதியார், M. A. B. L.; 5) திருமதி. ந. மீனாட்சி அம்மையார், M. A.; 6) டாக்டர் திருமதி. லலிதா காமேசுவரன், M.B.B.S., Ph.D. (London); 7) திரு. கி. பழநியப்பன் (செயலர், செந்தமிழ்க் கல்லூரி; புரவலர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்); 8) பைந்தமிழ்ப் பாவலர் திரு. அ. கி. பரந்தாமனார், M.A., (தமிழ்த்துறை, தியாகராசர்கல்லூரி, மதுரை); 9) பண்டித வித்துவான் திரு. ச. சாம்பசிவன் (தமிழாசிரியர், நகரவை உயர்பள்ளி, மதுரை);

10) புலவர் திரு. க. வெள்ளைவாரணனார் (தமிழ் ஆராய்ச்சித் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்); 11) டாக்டர் திரு. மு. வரதராசனார், M. A. Ph. D., (தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை).

எம் அருமைத் தந்தையார் நாவலர் பாரதியார் எழுதிய நூல்களை மறுபதிப்பாகக்கொணரவும், அச்சிலேற்றப் படாதவற்றை நூல் வடிவிற் கொணரவும் திட்டமிட்டுள்ளோம். நாவலர் எழுதிய திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாய முறை, சேரர் பேரூர் ஆகிய இந் நான்கையும் ஒன்றாகத் தொகுத்து 'ஆராய்ச்சி நூல்கள்' என்ற பெயரில் இக்குழுவின் முதல் வெளியீடாக வெளியிட்டோம். இரண்டாவது வெளியீடாகத் 'தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை' (அகத்திணையியல்) வெளியிட்டுள்ளோம். இப்போது மூன்றாவதாகத் 'தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை' (புறத்திணையியல்) வெளியிட்டுள்ளோம். எஞ்சியன அடுத்தடுத்து வெளியிடப்படும். இந் நூல் வெளியீட்டிற் கிடைக்கும் வருவாயனைத்தும் மேற்காட்டிய நோக்கங்களை நிறைவேற்றற்கே பயன்படுத்தப்பெறும்.

**நாவலர் பாரதியார் எழுதியன அனைத்தும் இக் குழுவுக்கே உரிமையுடையன. ஆதலின் அவர் எழுதிய எந்த ஒரு பகுதியையும் இதன் ஒப்புதலின்றி எவரும் வெளியிடக் கூடாதென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

இவ் அறப்பணிக்குழு வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவி செய்துவரும் எம் அன்னையார் திருமதி. வசுமதி பாரதியாரவர்கட்கும், உடனிருந் து ஆக்கவேலைகளைக்

கவனித்து வரும் அறப்பணிக்குழுச் செயலர் பண்டித வித்துவான் திரு. சாம்பசிவன் அவர்கட்கும், அவ்வப்போது அரிய கருத்துரைகளை வழங்கிவரும் ஏனைய உறுப்பினர்கட்கும் எம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். புறத்திணையியற் புத்துரைக்கோர் அறிமுகம் எழுதி உதவிய நண்பர் வித்துவான் திரு. நா. இராமையா பிள்ளை M. A., அவர்கட்கும், இதனை விற்பனை செய்துதர உடன்பட்ட மீனாட்சி புத்தக நிலையத்தாருக்கும் எம் நன்றி உரியது.

தமிழ்ப் பெருமக்கள் இந் நன்முயற்சிக்குப்பேராதரவு நல்குவார்களென நம்புகின்றோம்.

**சோ. இராசாராம் பாரதி,**
**ஆட்சியாளர்,**
நாவலர் சோமசுந்தர பாரதியார்
**கல்வி அறப்பணிக் குழு.**

பசுமலை
16—6—1965

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | நாவலர் பாரதியார் | 1 |
| 2 | புறத்திணையியற் புத்துரை அறிமுகம் | 11 |
| 3 | புறத்திணையியற் புத்துரை | 27 |
| 4 | சூத்திர முதற்குறிப்பகராதி | 236 |
| 5 | மேற்கோள் நூற்பெயரகராதி | 237 |
| 6 | பிற்சேர்க்கை | 238 |



நாவலர் - கணக்காயர் - டாக்டர்

**ச. சோமசுந்தர பாரதியார்** M. A., B. L., D. Litt.

தோற்றம் : 27—7—1879   மறைவு : 14—12—1959

UNIVERSITY LIBRAR

# நாவலர் பாரதியார்

பண்டித வித்துவான் திரு. ச. சாம்பசிவன், செயலர்,
நாவலர் ச. சோ. பாரதியார் கல்வி அறப்பணிக்குழு, பசுமலை.

பழமையாற் பெயர் பெற்றது பாண்டி நாடு; அதன் தென்பாலமைந்தது 'தென்பாண்டிநாடு'. தமிழ்மணத்திற்கும் தெய்வமணத்திற்கும் திருவிடமாய்த் திகழ்வது இது. 'பொன் திணிந்த புனல்பெருகும் பொருனையெனும்' பெருநதி இந்நாட்டை அணிசெய்கிறது. இவ் யாற்றின் கரையிலமைந்த கவினுறு நகரங்களில் திக்கெலாம்புகழும் திருநெல்வேலியும் ஒன்றாம்!

அந்நகரில் ஒருநாள் மாலைவேளை; யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தமிழ்ப்புலவர் ஒருவர் கல்லூரிஒன்றில்அமர்ந்திருந்தார்; அவரைச்சூழப் புலவர் திரண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தார், வேடிக்கைக்காக, ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் அமைத்துத் தருமாறு ஏனையோரை வேண்டினர்; உடனே ஒவ்வொருவரும் அம்முயற்சியில் ஈடுபடலாயினர்.

இதற்கிடையில் இளைஞர் இருவர் ஓடிவந்தனர்; இருதாள்களை யாழ்ப்பாணத்தாரிடம் நீட்டினர்; அவரும்கனிவுடன் வாங்கிக்கருத்துடன்படித்தார். 'என்ன அழகு! என்ன இனிமை!' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். அதன் பிறகு, புலவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பாடல்களை

எழுதித் தந்தனர். எல்லாவற்றினும், மேலானவையாக அவ்விளைஞர் இருவர் அளித்த பாடல்களையே கொண்டார் யாழ்ப்பாணத்தார்; பிறரும் அவர்கருத்தைஒப்பினர். இளமையில் புலமை நலம் பெற்ற அவ்விரு இளைஞர்க்கும் 'பாரதி' என்னும் பாங்குறுபட்டத்தைப் புலவர்குழாத்தினர் பெருவிருப்புடன் அளித்தனர். அன்று முதல் அவ்விரு இளைஞரும் தம் பெயர்களுடன் 'பாரதி' என்பதனையும் சேர்த்துக்கொண்டனர்.

இளமையிலேயே இத்தகு புலமைபெற்ற பெரியாருள் ஒருவரே நாவலர்-ச. சோமசுந்தர பாரதியாராவர்!

## பிறப்பும் படிப்பும்:

நெல்லை மாவட்டத்தில், 'இளசை நன்னகர்' என்று போற்றப்படும் எட்டையபுரம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்க்கு 'எட்டப்பர்' என்ற பட்டப்பெயர் உண்டு. இம் மன்னர்களரண்மனையில் சுப்பிரமணிய நாயகர் என்பார், உள்படு கருமத்தலைவர் பணியை மேற்கொண்டிருந்தார். எட்டப்ப அரசர் மீது அளவற்ற அன்புடைய அவர், 'எட்டப்ப பிள்ளை' எனத் தம் பெயரை மாற்றிவைத்துக் கொண்டார் அரண்மனையில் வளர்ந்த முத்தம்மாள் என்னும் மாதரசியைத் தம் துணைவியாகக் கொண்டு இல்லற வாழ்வை இனிது நடத்தி வந்தார். இவ்விருவருக்கும் நன்மக்கள் நால்வர் தோன்றினர். அவருள் மூத்தவரே நாவலர் ச. சோ. பாரதியாராவர். அடுத்துத் தோன்றியவர்கள், முத்துலக்குமி, கமலாம்பாள், ஞானம்பாள் என்ற பெண் மக்களாவர்.

நாவலர் தோன்றிய நாள், கி.பி. 1879-ஜூலை-27 ஆகும். இவரது இயற்பெயர் 'சத்தியானந்தசோமசுந்தரன்' என்பது. அரண்மனை அரசியாரால் நன்முறையில் வளர்க்கப் பெற்ற நாவலர், ஐந்தாம் அகவையில் அவ்வூர்த் திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பெற்றார். ஆனால், சேர்க்கப்பெற்ற அன்றே, மாணவரைக் கொடுமைப்படுத்திய பள்ளி ஆசிரியர் செயலையறிந்து, பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டார் நாவலர். அவ்வாறு, பதினொரு வயதுவரை இவர் பள்ளி செல்லாமல் வீணே பொழுது போக்கினார். பின்னர்த் தம் தந்தையின் தூண்டுதலால் பள்ளி சென்றார்; எட்டாம் வகுப்புவரை படித்தார்.

பின்னர் மேற்படிப்புக்காகத் திருநெல்வேலி சென்று, சர்ச்மிசன் உயர் பள்ளியிற்பயின்று, அப்பள்ளியுடன் இணைந்திருந்த கல்லூரியில் இடைக்கலை வகுப்பை முடித்தார் நாவலர். அதன் பிறகு சென்னை சென்று கிறித்தவக் கல்லூரியில் படித்து இளங்கலை வகுப்பில் தேறினார்; சட்டக் கல்லூரியிற்சேர்ந்து கி. பி. 1905-இல் சட்டத்தேர்வை எழுதி வெற்றி பெற்றார். கி. பி. 1913-இல், தாமே அரிதின் முயன்று படித்து, எம். ஏ. தேர்வு எழுதி அதிலும் வெற்றிபெற்றார் நாவலர்!

**வழக்கறிஞர் நாவலர்:**

நாவலர் படிக்குங் காலத்தில் பொருளாதார நெருக்கடியால் பெருந்தொல்லைக்குள்ளானார். தமக்கு எட்டயபுரத்தரசியார் அளித்த பன்னிரண்டு ஏக்கர் நிலத்தை விற்றுப் படிப்பை முடித்தார். சட்டப்படிப்புத் தேர்வு முடிவு வெளியாகச் சில திங்களாகுமென அறிந்து,

அதுகாறும் வீணே காலங்கழிக்க விரும்பாமல், சென்னையி லேயே அரசினர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணி புரிந்தார். தேர்வின்முடிவு வெளியாயிற்று; வெற்றிபெற்ற நாவலர் அவ்வெழுத்தர் பணியினின்றும் விலகி, வழக்கறி ஞர் தொழிலை மேற்கொள்ளத் தூத்துக்குடி சென்றார். எவரிடமும் பயிற்சிபெற விரும்பாமல், தாமாகவே வழக் கறிஞர் தொழிலை நடாத்தத் துணிந்தார் எனின், இவர் தம் துணிவை என்னென்பது?

வழக்கறிஞர் தொழிலில் நாவலர் மேற்கொண்ட வழிகள் ஏனையோரும் பின்பற்றத்தக்கன. தம்பால் வரும் வழக்கு நேரிது எனத் தெரிந்தாலன்றி எவ்வழக்கினையும் எடுத்துக்கொள்ளமாட்டார்; வழக்குச் சிறிதாயினும்பெரி தாயினும் கவலைகொள்ளார்; பெருந்தொகை பெற்றே வழக்காடுவார்; வழக்காடும்போதும். அளந்து சொல்லும் சொல்லால், எடுத்துரைக்கும் திறத்தால். நா நலத்தால், நடுவர்களும் ஏத்துமாறு நடந்துகொள்வார்; சட்டத்தின் திட்ப நுட்பத்தால் நடுவர்களைக்கூட நடுங்கவைத்து விடு வார்; காலங் கடவாமல் கடமைகளைச் செய்வார். இன்னோ ரன்ன இயல்புகளால் நாவலர் புகழை நாட்டவர் தெரிய லாயினர்; எனவே வழக்குகள் பல இவரை நாடிவந்தன; பொருள் வருவாயும் பெருகுவதாயிற்று! 1905-ஆம் ஆண் டில் தூத்துக்குடி சென்ற நாவலர், 1920-வரை ஆங்கி ருந்து, பின்னர் மதுரைக்கு வந்து தம் தொழிலை நடத் தினர்.

**நாவலர் நண்பர்கள்:**

நாவலருடன் நெருங்கிப்பழகிய நண்பர் பலராவர். அவருள் மிகவும் அணுக்கத்தொடர்புடையார் இருவரை

ஈண்டுக் குறிப்பிடலாம். ஒருவர், 'பாட்டுக்கொரு புலவ ராம்' பாரதியார்; மற்ருெருவர், செக்கிழுத்த செம்மலாம் சிதம்பரனூர்.

சுப்பிரமணிய பாரதிக்கும் நாவலருக்கும் இளமை முதலே நட்பு ஏற்படலாயிற்று. ஏனெனில் இவ்விருவரும் ஓரே ஊரிற் பிறந்து, படித்து வளர்ந்தவர்கள். நாவலர் வீட்டின் பின்புறம் பாரதி வீடு இருந்தமையின் இருவரும் நன்கு பழகுதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. இளமையி லேயே தமிழ்ப்பற்றுடைய இவர்கள், பெற்ரோரறியாமல் பெருமாள் கோயில் வாகனங்களுக்கிடையே அமர்ந்து கொண்டு அருமைத் தமிழைப்படிப்பர்; மாலை வேளையில் மலர்வனம் சென்று பொழுதுபோக்குவர்; அரண்மனை சென்று அவைக்களப் புலவர்களுடன் அளவளாவுவர்!

தம்மைவிடத் தம் நண்பர் பாரதியார், பாவன்மையில் மேலோங்கி நிற்பவரென்பதை அன்றே உணர்ந்திருந்தார் நாவலர். படிப்பினுல்மட்டும் பாவன்மை வாராது. கவிகள் பிறப்பிலேயே அமையவேண்டும்! என்பதை நாவலர் சொல்லி மகிழ்ந்திருக்கிருர். பாரதியார், புதுவையில் வாழ்ந்தபோது, அவர்தம் கவித்திறனை மெச்சி ஆங்கில இதழில் 'வாழும் மிகப்பெருங்கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினுர் நாவலர். புதுவையினின்றும் வெளி யேறிய பாரதியாருக்கு, அரசினரால் உண்டாய இடை யூற்றினைத் தக்கமுறையில் தீர்த்துவைத்துள்ளார் நாவலர்! ''பாரதியார் கவிதை நலம் பண்ணேறி விண்ணு யர்ந்து உலவுவதாகும். எனைத்தானும் தற்காலத் தமிழுல கில் இவரொத்தாரைக் காண்பரிது; மிக்கார் இலராவர்!'' என்று தம் நண்பரை நாவாரப்போற்றியுள்ளார் நாவலர்!

இவ்வாறே செம்மல் சிதம்பரனருடனும் நாவலர் நட்புக்கொண்டிருந்தார். தூத்துக்குடியிலிருந்த காலத்து நாவலரும் சிதம்பரனரும் நெருங்கிப் பழகினர். ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினரல்லவா சிதம்பரனர்? அப்போது அக்கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பைச் சிலகாலம் ஏற்று நடத்தினர் நாவலர். கம்பெனியைவிட்டு விலகிவிட்டால் பெரியதோர் அரசாங்கப் பதவியைத் தருவதாக ஆங்கிலேயர் கூறியபோதும், நம் நாவலர் உடன்பட்டாரிலர்! எனவே நாவலர் பெயரையும் அரசினர் ஐயப்பட்டியலிற் சேர்த்துக்கொண்டனர்!

அக்கால அரசியலில் நாவலரும், சிதம்பரனரும் பெரும் பங்கு கொண்டு, நாட்டுரிமைக்குப் பாடுபட்டுள்ளனர். இவ்விருவரும் சேர்ந்து பேசிய அரசியற்கூட்டங்கள் பலவாகும். 1933-இல், உசிலங்குளம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்டோருக்கெனத் தொடக்கப்பள்ளிஒன்றை நாவலர் திறந்தார்; அவ்விழாவில் சிதம்பரனரும் பங்குகொண்டு சொற்பெருக்காற்றியுள்ளார். அதேபோல், 1935 இல் எட்டயபுரத்தில் 'தமிழகம்' என்னும் பெயருடைய தம் இல்லத் திறப்புவிழாவிற்குச் சிதம்பரனரை அழைத்திருந்தார் நாவலர்!

### அரசியல் நாவலர்

நாவலர் பாரதியார் அக்காலத்து அரசியலிற்சேர்ந்து அரும்பணியாற்றியுள்ளமையை மறந்துவிடுதல்முடியாது. நெல்லையில் மாநிலக்காங்கிரசு மாநாட்டைக் கூட்டி அதன் செயலாளராக இருந்து, சீனிவாச சாத்திரியார், சத்தியமூர்த்தி, அன்னிபெசண்ட் அம்மை ஆகியோரை வர

வழைத்துள்ளார் நாவலர்; மதுரைக்கு வந்தபின்பும்,காங்கிரசுமாநாட்டைக் கூட்டியுள்ளார். காந்தியடிகளைத் தூத்துக்குடிக்கும், அண்ணாமலை நகருக்கும் வரவழைத்துச் சிறப்புச் செய்த பெருமை நாவலருக்கு உண்டு!

சாதியை ஒழிக்கப் பாடுபட்டுள்ளார்; சாதி ஒழிப்பு மாநாடுகள் இயக்கத் தலைவராயிருந்துள்ளார். தாய்மொழியாம் தமிழ்மொழியினைக் காத்தற்கென நாவலர் போராடிய போராட்டங்கள் பலவாகும்; அவற்றால் 'தமிழ்காக்கும் தண்டமிழ்த் தலைவர்' என்னும் பெருஞ் சிறப்பைப் பெற்றார்!

**பேராசிரியர் நாவலர்:**

மதுரையில், திங்கள் ஒன்றுக்கு ஈராயிரம் ரூபாய் வருமானம் பெற்றுவந்தபோது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைமைப்பொறுப்பையேற்குமாறு கொடை வள்ளல் அண்ணாமலையரசர் நாவலரை வேண்டினார். தமிழின்பால் கொண்ட தணியாக்காதலால்,நாவலர் அப்பொறுப்பை ஏற்று, 1933 முதல் 1938 வரை, செவ்வனே செய்துவந்தார்.மாணவர்கட்கு நாவலர்கற்குமுறை போற்றத்தகுவதாயமைந்தது. மாணவர்க்கு நிகழும் ஐயத்தை மறுக்கவேண்டிய இடங்களில் மறுத்தலும், மாணவர் அறிவைத் தூண்டிப் புத்தம்புதிய கருத்துக்கள் காணுமாறு செய்தலும் ஆகிய தன்மைகள் மாணவரைப் பெரிதும் ஈர்த்தன. எனவே மாணவருலகு நாவலரைப்பெருமளவில் மதித்துப் போற்றியதில் வியப்பில்லை! நாவலரிடம் பயின்ற மாணவர்களிற் பலர், இன்று தமிழ் காக்கும் வீரர்களாகவும், தமிழ்த்துறைத் தலைவர்களாக

வும், பேராசிரியர்களாகவும், தமிழாசிரியர்களாகவும் இருந்து தமிழ்ப்பணி புரிகின்றனர்!

பல்கலைக் கழகத்திலிருந்தபோது, நாவலர் பண்ணொடு புரிந்த தேவாரத்தையும் திருப்புகழையும் மாணவர்கள் கற்க வகுப்புகளை ஏற்படுத்தினார்; தீண்டாமையை ஒழித்தார்; இசையரங்குகளில் நிகழ்ந்த சிலதவறான செயல்களைக் கண்டித்துத் திருத்தினார்!

**நூலாசிரியர் நாவலர்:**

'நாநலம் என்னும் நலனுடைமை' நாவலரிடத்தே இயல்பாய் அமைந்தவொன்று! அவர் அவ்வப்போது பேசிய பேச்சுக்கள் சில நூல்களாக வெளிவந்துள்ளன. அவை 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்'; 'திருவள்ளுவர்' என்பன ஆகும். இவை தவிரத் 'தொல்காப்பியர் பொருட்படலமும் புதியஉரையும்', 'சேரர் பேரூர்' 'சேரர் தாயமுறை', 'மங்கலக்குறிச்சிப் பொங்கல்நிகழ்ச்சி', 'மாரி வாயில்' என்ற நூல்களையும் இவரெழுதியுள்ளார். இவரெழுதிய பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பு நூல்களாக 'நற்றமிழ்', 'பழந் தமிழ்நாடு' முதலியன வெளிவந்துள்ளன. 'திருவள்ளுவர்', 'சேரர் பேரூர்', சேரர்தாயமுறை' முதலியவற்றை ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளார் நாவலர். இந்நூல்களைப் படித்துணர்வார், நாவலரிடத்தமைந்துள்ள கலைபயில் தெளிவு, கட்டுரைவன்மை, ஆங்கில அறிவு முதலியன கண்டின்புறுவர்!

**புகழொடு பிறந்த நாவலர்:**

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்றார் பொய்யில் புலவர். இவ்வுரைக்கேற்ப நாவலர் வாழ்ந்தாரென

இறுமாந்து இயம்பலாம். நாவலர் நற்றிறம் உணர்ந்த ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் 1944-இல் நாவலரைத் தம்பால் அழைத்து, 'நாவலர்' எனும் பட்டத்தை நானிலம் போற்ற வழங்கியது. 'திருக்குறட்பணியே தெய்வப் பணி' எனக் கொண்டு, நாளும் நற்றமிழுக்குப் பாடு பட்டுவரும், மதுரைத் திருவள்ளுவர் கழகம் 1954-இல் 'கணக்காயர்' எனுங் கவினுறு பட்டத்தை நாவலருக்கு நல்கிப் பொன்னுடை போர்த்திப் பெருமைப்படுத்தியது. தமிழகத்தின் கண்மணெனத் திகழும் 'அண்ணாமலைப் பல் கலைக்கழகம்', 1955-இல், பட்டமளிப்பு விழாவின்போது, நாவலரை வரவழைத்து 'டாக்டர்' எனும் பட்டத்தைத் தந்து சிறப்பித்தது. 1957-இல், சென்னைத் தமிழ் எழுத் தாளர் சங்கம் நாவலருக்குக் 'கேடயம்' அளித்தது; 1959-இல், மதுரைத் தமிழன்பர் குழாம் 'நாவலர் எண்ப தாவதாண்டு நிறைவு விழா' வைச் சிறப்புறக் கொண் டாடி, 'வெள்ளிக்கலம்' ஒன்றை நாவலருக்குக் கொடுத் தது. இவ்வாறு, உயிருள்ளகாலத்தே பெரும் புகழ்ச்செல் வராக விளங்கிய பெருமை நம் நாவலருக்கு உண்டு!

**நல்லறம் கொண்ட நாவலர்:**

நாவலர், தம் பதினைந்தாம் வயதிலேயே மீனாட்சி என்னும் அம்மையாரை மணந்துகொண்டார். இம்மைமை யாரிடத்தே தோன்றியவர்கள் இராசாராம் பாரதியார், இலக்குமிரதன் பாரதியார், இலட்சுமி பாரதியார் ஆகி யோராவர். மீனாட்சியம்மையார் நோய்வாய்ப்பட்டமை யின், வசுமதி அம்மையார் என்னும் மாதரசியை இரண் டாம் மனைவியாகக் கொண்டார் நாவலர். இவ்வம்மையா

ரிடத்தே, மீனாட்சி அம்மையார், லலிதா அம்மையார் ஆகிய பெண்மக்கள் இருவர் தோன்றினர். தம்மக்கள் அனைவரையும் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்தோராக ஆக்கியுள்ளார் நாவலர்.

நாவலரிடம் மிக்கிருந்த குணங்களுள் குறிப்பிடத் தக்கவை, அஞ்சாதுரைக்கும் ஆண்மை, வாய்மையே உரைக்கும் சீர்மை, காலந்தவறாமற் கடனாற்றுந் தன்மை சிறு நன்றியையும் மறவாப் பெருந்தன்மை, நாட்டிற்காக —மொழிக்காக— இனத்திற்காகப் போராடும் பேராண்மை, மெய்யான கடவுட்பற்று முதலியனவாகும்.

இத்தகைய பெரும் புலவர்—உழைப்பால் உயர்ந்த உரவோர்—தமிழருக்குக் கேடு எனின் தலைதனையுங் கொடுக்கும் தறுகணாளர் — அஞ்சாநெஞ்சினர் — நாநலம் பெற்ற நாவலர்—கணக்காயர்—டாக்டர்—ச. சோமசுந்தர பாரதியார், தமிழகம் வருந்தப் பசுமலையிலுள்ள தம் இல்லத்தில் 1959-டிசம்பர் 14-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்!

அவர் மறைந்தார்; எனினும் அவர் புகழ் என்றும் நின்று நிலவும்!

**வாழ்க நாவலர் புகழ்!**

# புறத்திணையியற் புத்துரை

## அறிமுகம்

வித்துவான் திரு. நா. இராமையா பிள்ளை, எம். ஏ., மதுரை.

நாவலர் பாரதியாரின் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலுக்கு அறிமுகவுரை என்ற ஒன்று இன்றியமையாததா என்னும் கேள்வி என் மனத்தில் எழாமலில்லை. இற்றைய நாளில் தமிழார்வம் கற்றோர் முதல் கல்லார் வரை, சிறுவர் முதல் முதியோர் வரை, அரசியலறிஞர் முதல் சுயநலமிக்கார் வரை, யாவர் மாட்டும் நிலவியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியெனினும் தமிழ்மொழியின் நடை நலிந்துவருவது வருந்தற்குரிய செய்தியாயுள்ளது. முன்னைய நாளில் தமிழில் நல்ல நடை எழுதும் சான்றோரை யாண்டும் காணலாம். இன்று தெளிவான தமிழ்நடை எழுதுவாரை அருகியே காண முடிகிறது. செய்தித்தாள், மாத இதழ், வார இதழ் முதலிய யாவற்றிலும் நல்ல மொழிநடையைக் காண்டலரிது. பேசுவது போலவே எழுதல் வேண்டுமெனப் பிடிவாதம் கொள்வாரையும்காணலாம். தூய தமிழ்நடை எழுதவேண்டுமென்ற விருப்பம் இற்றையநாளில் சிலரிடம் இருப்பினும், தமிழ்க் கல்வியின் குறைவாலும், இளமையிற் பயின்ற சொற்கள் போட்டி போட்டு முன்வருவதாலும், அவற்றை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைக் காண்டல் சிறிது துன்பமாக இருப்பதாலும், துன்பத்தைப் பொருட்படுத்தாமல் முயன்றால் கருத்துப்போக்குக்

குத் தடையேற்படுகிறது என்ற காரணத்தாலும்·வாளா வந்த நடையை எழுதிவிடுகின்றனர். இவ்வாறு தமிழ் நடையை நன்குபேணமுடியாமற்போகிறது.எனவே நாள் தோறும் தமிழ்நடை நலிந்துகொண்டு வருகிறது. இதன் காரணமாகப் பண்டைய நூல்களிலுள்ள தமிழ்நடை பலருக்கு விளக்காமற்போகிறது. அப்போது விளக்கம் தேவைப்படுகிறது. இப்படி நூல்களின் உரைக்கு, உரை தேவைப்படுகிற காலமாக இக்காலம் மாறிவருகிறது. இந்த வகையில் சேர்ந்ததன்று நாவலர் பாரதியாரின் புத்துரை. நாவலர் பாரதியாரின் நல்லுரை தொல்காப்பியத்திற்கு ஏற்பட்டிருந்த முன்னைய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்னும் இருசான்றோர்களின் உரைகளிலுள்ள பொருந்தாக் கொள்கைகளையும், அடிப்பட்ட தமிழ் முன்னோர்களின் கருத்துக்களுக்கு மாறானவற்றையும் நீக்கிப் பொருந்தும் கொள்கைகள் இவைதாம் எனக்காட்டி, பண்டைத்தமிழ் நூல்களிலிருந்து அவற்றிற்குச் சான்றும் காட்டி நிறுவுவதேயாகும். நாவலர் பெருமானின் இப்புத்துரை நூலை, பொருள் நோக்கோடு பார்ப்போமானால், தொல்காப்பியம் கற்றோர் மட்டுமே நன்கு உணர்ந்துகொள்ள முடியும். மற்றையார் இதைக் கற்க விழையார். நாவலர் பாரதியாரின் புறத்திணையியற் புத்துரை நூலின் உரைநடை பண்டைய உரையாசிரியர்களின் நடையை ஒப்ப விளங்குகிறது. இதனை, கற்றோர் தவிர மற்றோர் புரிந்துகொள்ள முடியாதெனின், கற்றோருக்கு அறிமுகம் வேண்டுவதில்லை; மற்றோருக்கு இந்நூல் கற்க விழைவில்லாத காரணத்தால் அவருக்கும் அறிமுகம் வேண்டுவதில்லை. எனவே இவ்வறி

முகம் தேவையற்றவொன்று எனின் இதை நான் எழுதக் காரணம் கூறுவன்.

நாவலர் பாரதியார் இல்லறத்தின் நல்லறத் துணைவியாய் விளங்கிய உயர்திருவாட்டி ச. சோ. வசுமதி பாரதியார் அவர்கள் ''ஐயா அவர்களின் நூலுக்கு ஒரு அறிமுகம் எழுதவேண்டும்'' என்று எனக்கிட்ட ஆணை என்னால் மறுக்க முடியாதது முதற் காரணம் இப்புத்துரை நூல் 1942-இல் அச்சாகி வெளிவருதற்கு முன்பு இதனை நாவலர் பெருமான் ஆய்ந்து வாய்மொழியாகக் கூறக் கேட்டு நான் எழுதிவந்த ஆசைத் தொடர்பு இரண்டாவது காரணம். பலமுறை இந்நூலைப் படித்திருந்தாலும் மற்றுமொருமுறை படிக்க வாய்ப்பேற்படுகிறதே என்ற மகிழ்ச்சி மூன்றாவது காரணம். இவ்வறிமுகம் எழுதும் போது இதன் பெருமையை எடுத்துக்கூற வாய்ப்பேற்படுகிறதே என்பது நான்காவது காரணம். இன்ன பல காரணங்களாலேயே எழுதத் துணிந்தேன். இவற்றைத் தவிர இவ்வறிமுகம் எழுதுவதற்கு எனக்கு எவ்வித தகுதியுமில்லை.

இனி, நாவலர் பாரதியாரின் உரைநலம்பற்றி நோக்குவோம். தொல்காப்பியர் பொருட்படலம், புறத்திணையியலில் முதன்முதலில் அவர்கள் தொகுப்பாக, புறத்திணை பற்றிஎழுதுவதையாவரும் ஊன்றிப்படித்து உணரவேண்டும் ஏனெனின் தொல்காப்பியர் புறத்திணை ஏழு என்று சொல்லியிருக்க,பிற்காலத்தவர் ஏழுக்குமேற்பட்டவற்றை புறத்திணையில் கூறுகின்றனர் இரு கூற்றையும் கண்டு, அதையதை அப்படியப்படியே கொண்டு வாழ்வாரும்

உண்டு. பண்டைத் தமிழர் கொண்ட கொள்கை எது எனச் சிந்தியாமல், சிந்தனையுள்ள தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டாமல் வாழும் தமிழறிஞர் பேதைமையைச் சுட்டிக்காட்டி, எழுதிணையின் இறந்தவை பழுதுற்ற கொள்கை எனக் காட்டியிருக்கும் நாவலரின் நல்லுரை, தமிழ்மொழியின் மாட்டும் தமிழறக்கொள்கை களின் மாட்டும், தொல்காப்பியர் மாட்டும் ஈடுபாடுடைய சான்றோர்களுக்கு இன்பமாய் இருக்கும். பசுக்கூட்டத் தைக் கவர்ந்துசெல்வாரிடமிருந்து மீட்கமுயல்வார் செயல் வெட்சியுள் அடங்காது கரந்தை என்னும் திணையில் அடங்குமென வேறொரு திணை உண்டாக்கிக்கூறும் பிற் காலத்தார் கொள்கை தொல்காப்பியரால் ஒப்பமுடிந்த தன்று என்று நாவலர் பாரதியார் விளக்கிக்காட்டுவதை நயன்தெரிந்த நல்லோர் பயன் நிறைந்த கூற்று எனக் கொள்வர்.

1940-ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் பெரும்போர் நடந்துகொண்டிருக்கும் காலம். யான் நாவலர் பாரதி யாரோடு இருந்து இப்புத்துரையின் உரையை எழுதிக் கொண்டிருக்குங் காலம். நல்ல நாவன்மையுடைய நல்லார் ஒருவர் பசுமலையில் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் அடிக்கடி நாவலர் பாரதியார் இல்லம் வந்து உரையாடிக் கொண்டிருப்பார். நல்ல தமிழ் நூல்களின் கருத்தை நாவலர் பாரதியார் நவில செவிவாயாகக்கொண்டு நெஞ்சு களனாக அவர் ஏற்றுக்கொள்வார். அவை அவரின் சொற் பொழிவுகளுக்கு உதவும் என்பது அவர் கருத்து. பூவொடு சேர்ந்தநாரும் மணம் பெறும் என்பதற்கிணங்க நாவலர் பாரதியாரோடு இருந்த என்னை அவர் நன்கு மதித்தார்; உயர்வாகப் போற்றினார். உயர்ந்த தொல்காப்பியர் நூல்

களை நாவலர் பாரதியாரோடு இருந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கிருக்கிறது என்று பாராட்டினார். ஆகவே என்னை எங்குக் கண்டாலும், யாரோடு கண்டாலும் எனக்கு அவர் மரியாதை செலுத்துவதோடு பிறருக்கும் என்னை உயர்வாக அறிமுகப்படுத்தி வைப்பார். இதன்காரணமாக அவர்பால் எனக்கு இயல்பாக அன்பு எழுந்தது. நானும் சில வேளைகளில் அவர் இல்லத்திற்குச் சென்று உரையாடிக்கொண்டிருப்பது வழக்கம்.

ஒருநாள் மாலை நான்கு மணியிருக்கும் நானும் அவரும் அவரது இல்லத்தில் உரையாடிக்கொண்டிருந்தோம். தொல்காப்பியத்தில் ஒன்று கூறுமாறு என்னிடம்வேண்டினார். ''வெறியறி சிறப்பின் வெவ்வாய்வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும்'' என்ற தொல்காப்பியர் வெட்சித் திணைச் சூத்திரத்தைக் கூறினேன். பொருள்கூறச் சொன்னார்.''குறித்தபோரில்கொற்றம்கருதிச்'செறுமிகுசேயா'ன முருகனை முதலில் பரவி, அவனுக்குரிய களியாட்டில் குறியுணர்ந்துகூறும் சிறப்பினையுடைய விரும்பத்தகும் வாய்ப் புணர்த்தும் வேலன் ஆடும் காந்தளும்'' என்ற நாவலர் பாரதியாரின் நயவுரையைக் கூறினேன். அது கேட்ட அவர், தொல்காப்பியத்தின் பெருமையையும் நாவலர் பாரதியாரின் நயவுரையையும் நானிலமறியும் நன்னாளே தமிழ்நாட்டின் பொன்னாளாம் எனக் கூறி மகிழ்ந்தார்.

இனி, வெட்சித்திணையில், ''படையியங்கரவம்'' என்று தொடங்கும் சூத்திரத்தில் **நுவல் வழித்தோற்றம்** என்னும் துறை வருகிறது. நுவல்வழித்தோற்றம் என்

பதுகளவில் ஆனிரைகொண்டு தம்மவர் புகழும்படி வெட்சியார் மீளும் பொலிவு எனப்பொருள்படும். இத்துறைக்கு நாவலர் பாரதியார் சான்று தேடிக்கொண்டிருக்கும்போது நான் கீழ்வரும் பாடலைக் காட்டினேன்,

ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉம் என்னைக்கு
உழையோர், தன்னினும் பெருஞ்சாயலரே.

நாவலர் பாரதியார் இதனையே ஏற்று அமைத்துக்கொண்டார்கள். நான் அன்று துறையின் பொருளறிந்து எடுத்துக் காட்டினேன் என்று சொல்லமுடியாது. ஏதோ காட்டினேன். அமைந்துகொண்டது. இதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. இது என் நினைவிலிருந்து மாறவில்லை.

இனி, நாவலர் பாரதியாரின் கூர்த்தமதியைக் காணக் கீழ்வருவது ஒரு சான்று.

மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.

என்னும் புறத்திணையியல் நான்காம் சூத்திரத்தின் ஈற்றயற்சீரில் வரும் அகரச்சுட்டிற்குக் கூறும் விளக்கம் நனி சிறந்ததோடு அறிவின் கூர்மைக்கு அடையாளமாக விளங்கி நூல்நயம் நுகர்வார்க்கு இன்பவிருந்தாய் அமைகிறது.

"அகரச்சுட்டு. 'புறன்' என்னும் குறிப்பால் வெட்சிக்கு அகமாக முதற்சூத்திரத்தில்குறித்த குறிஞ்சியையே குறிக்கும். அகரச்சுட்டு வெட்சித்திணையைக் குறிப்பதாகக்கொண்டு, துடிநிலையும் கொற்றவை நிலையும்

வெட்சிக்குப் புறனும் என்பர் நச்சினர்க்கினியர். வெட்சியே புறனுதலானும், பொதுவியல்பாடாண் முதலி யவற்றைப் புறப்புறமென வகுத்த வெண்பாமாலை முத லிய பின்னூலாரும் 'துடிநிலை' 'கொற்றவை நிலை'களைப் புறப்புறமென்னுது வெட்சியின் துறைகளாய் அடக்கின ராதலானும், இச்சூத்திரத்தின் அகரச்சுட்டு வெட்சிக்கு அகமாகிய குறிஞ்சியையே குறிப்பது தேற்றம்'' என்பர் நாவலர் பாரதியார்.

மேற்காட்டிய நான்காம் சூத்திரம் ஈரடியாலானது. முதலடியிலுள்ள 'துடிநிலை' என்னும் பாடம் நச்சினர்க் கினியர் கொண்டது. ஆனால் இளம்பூரணர் 'குடிநிலை' என்று பாடங்கொண்டார். இக்'குடிநிலை' என்னும் பாடம் பொருத்தமாய் இல்லை என்று நாவலர் பாரதியார் தெரிவிக்கிருர். **'ஆகோள்' 'கொற்றவை நிலை'களைப்போல 'குடி நிலை' போர்த்தொடக்கத்திற்கு இன்றியமையாததன்று-** என்று காட்டுகிருர் நாவலர் பாரதியார்.

அவ்வாருயின் 'துடிநிலை' என்னும் பாடம் சிறந்த தல்லவா எனலாம். சிறந்தது எனக் கொள்ளுதற்கில்லை; 'கொடிநிலை' என்பதாக இருக்க வேண்டுமென்று நாவலர் பாரதியார் ஆய்வுரை காட்டியிருக்கிருர். இது தொல் காப்பியத்தில் ஈடுபாடுள்ளவர்க்கு அறுசுவை உண்டி போல அறிவுக்கு விருந்தாயிருக்கும்.

இனி, தும்பைத் திணை பற்றிக் கூறுமிடத்து கீழ்வரும் சூத்திரத்திற்கு நாவலர் பாரதியார் நயம்பட உரை கூறு

கிறார். முன்னிரு உரையாசிரியர்கள் கூறிய பொருந்தாத் தன்மைகளைக் காரணம் காட்டி மறுத்து பொருந்தும் தன்மைகளைக் காட்டுகிறார்.

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

இளம்பூரணர் உரை:—கணையும் வேலும் படைத் துணையாக்கொண்டு பொருதல் காரணமாகச் சென்ற உயிரின் நின்றயாக்கை, நீர் அட்டை காலவயப்பட்டு உடலினின்று உயிர் பிரிக்கப்படுமாறு, இருபாற்படுக்கப் படும் அற்றதுண்டம் இணைந்தது போன்று ஆடலொத்த பண்பினையுடையது. (இருநிலம் தீண்டா அரு=நீருட் கிடக்கும் அட்டை)

நச்சினார்க்கினியர் உரை:—பலரும் ஒருவனை அணுகிப் பொருதற்கஞ்சி அகல நின்று அம்பானெய்தும் வேல் கொண்டெறிந்தும் போர்செய்ய, அவ்வம்பும் வேலும் ஒன்றோடொன்று துணையாகத் தீண்டுமாறு செறிதலின், சிறிதொழியத் தேய்ந்த உயிரானே துளங்காது நிலைநின்ற உடம்பு, வாளும் திகிரியும் முதலியவற்றால் ஏறுண்ட தலையேயாயினும் உடலேயாயினும் பெரிய நிலத்தைத் தீண்டாதெழுந்து ஆடும் உடம்பினது பெறற்கரும் நிலையுடைத்தாகிய கூறுபாட்டோடே கூடி இரண்டு கூறுபட்ட ஒரு சிறப்பிலக்கணத்தை யுடைத்து முற்கூறிய தும்பைத் திணை என்றவாறு.

''எனவே, முற்கூறியமைந்து பொருளாகப் பொருதலினும் நின்றயாக்கை சிறத்தலும் இருநிலந் தீண்டா யாக்கை அதனிற் சிறத்தலும் கூறினர். இது திணைச் சிறப்புக் கூறியது. 'மொய்த்தலின்' என்றது யாக்கை யற்று ஆடவேண்டுதலிற் கணையும் வேலுமன்றி வாள் முதலியன ஏதுவாகக் கொள்க. பிற்கூறியதற்கு அட்டை அற்றுழியும் ஊருமாறுபோல் அற்றுழியும் உடம்பாடுதலின் அட்டையாடல் எனவும் இதனைக் கூறுப'' என மேலும் விளக்கினர் நச்சினார்க்கினியர்.

நாவலர் பாரதியார் உரை:—அளவிறந்த அம்பும் வேலும் செறிந்து அடர்தலின், பிரிந்த உயிரினின்றும் நீங்கிய பின்னும் வீழாது நின்ற உடலின் அரிய நிலைப்பரிசு (அறுபட்ட தலை முதலிய உறுப்புக்கள்) பெருநிலம் படியாது முறுகிய இகல் முனைப்பால் துடித்தியங்கும் அரிய நிலைமையாகிய பரிசுடன் இவ்விரண்டு கூறுபட்ட ஒப்பற்ற சிறப்பினையுடைத்து தும்பைத் திணை.

''முறுகிய தறுகண் முனைப்பால் உயிரிழந்த உடல் வீழாது நிற்றலும், துணிக்கப்பட்ட தலை முதலிய உறுப்புக்கள் நிலந்தோயாமல் துடித்தியங்கலும் ஆகிய இருவகை அரிய நிலையைச் சிறப்பாக உடையது தும்பைத்திணை.

'' இருநிலந் தீண்டாததிது எனக் குறியாமை, சிறப்பாகத் தலைதுடிப்பதுடன் இற்றஉறுப்பெதுவும்துடிக்கும் இயல்பிற்றாகலின் சுட்டிக்கூறல் வேண்டாமைபற்றி அமைந்தது.

'' அன்றியும், 'சென்ற உயிரின் நின்றயாக்கை' எனப் பிரித்து, ''இருநிலந்தீண்டா அருநிலை வகையோடு, இருபாற்பட்ட ஒரு சிறப்பின்று'' எனக் காட்டியதால், யாக்கையும் அதன் அறுபட்ட உறுப்பும் தனித்தனி சுட்டுங் கருத்துத்தெளியப்படும். [இங்கு, 'அரு' என்பதை அட்டை எனக்கொண்டு, அதன் பின்வரும் ''இருபாற்பட்ட'' எனுந் தொடரை அவ்வட்டைக்கு அடையாக்கி, இரு கூறுபட்ட அட்டைப் பகுதிகள் தனித்தனி ஊர்ந்து இயங்குவது போலத் துணிக்கப்பட்ட தலையும் உடலும் தனித்தனி துடிக்கும் எனப் பொருள் கூறுவர் பழைய உரைகாரர். இரண்டின் மேற்பட வெட்டுண்ட அட்டைத் துண்டுகளும் துடிப்பதியல்பாதலால், இருபாற்பட்ட என்பது பொருளற்றதாகும். அன்றியும் ஊர்ந்து செல்லுதல் நிலமிசையேயாம் ஆதலால் இருநிலந் தீண்டா அருநிலை எனற்கும் அமையாது. அதனுல், இருபாற்பட்ட என்னும் தொடர் அதையடுத்துவரும் ''ஒரு சிறப்புக்கே'' அடையாதல் தேற்றம்.] நின்றயாக்கை, நிலந்தீண்டா உறுப்பு அருநிலை, என முறையே இருதிறப்பட்ட ஒரு சிறப்பாதல் காண்க''. இந் நாவலர் பாரதியாரின் உரையில் மறுப்பும் விளக்கமும் தெளிவும் சிறப்பும் மிளிர்ந்து காணப்படுவது காண்க.

இனி, ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்'' என்னும் புறத்திணையியல் 20-வது சூத்திரத்திற்கு நாவலர் பாரதியார் ஆய்ந்துகூறும் அரிய உரைப்பகுதிகள் தமிழ்நாட்டார் கற்றுத் தெளியவேண்டியவையாகும். இச்சூத்திர உரைப்பகுதியில் பழந்தமிழ் மரபுகள் யாவை

என்பனவற்றை அறிந்துகொள்ள முடியும். தொல்காப்பியர் சுட்டும் செம்பொருள் யாது என்று தெளிந்துகொள்ள முடியும்.

நாவலர் பாரதியார் 21-வது சூத்திரத்திற்கு வாகைத் திணைத்துறை மறவகை ஒன்பதும் அறவகை ஒன்பதும் பதினெட்டு என்பதை எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகிறார் என்பது கற்றோர் கண்டு களிபேருவகை கொள்ளவேண்டியதாகும்.

''அமரர்கண் முடியும் அறுவகையானும்'' என்ற 26-வது சூத்திரத்திற்கு நாவலர் பாரதியார் தந்த புத்துரை என்னல் எளிமைப்படுத்தப்பட்டு மதுரைமாவட்டத் தமிழாசிரியர் மன்றத்தார் 16-10-64ல் வெளியிட்டுள்ள ஆண்டுமலரில் வெளியிடப்பட்டுள்ளது காண்க.

இனி, ''ஊரொடுதோற்றமு முரித்தென மொழிப'' என்பதை ஒரு தனிச்சூத்திரமாக்கி நச்சினார்க்கினியர், ''ஊரில்பொது மகளிரோடுகூடிவந்த விளக்கமும்பாடாண் திணைக்குரித்து'' எனக்கூறுகிறார். இதை நாவலர் பாரதியார் கடுமையாக மறுக்கிறார் இப் புதுப்பொருள் தமிழ் அறமும் பழ மரபும் அழிய வரும் இழுக்காகும். பரத்தை ஒருத்தியே யன்றிப் பலரொடும் வாழ்வார் இருக்கலாம். அன்னரும் அவ்வாழ்வை நாணுமல் ஊரறியக்காட்டி அதைப் பாராட்டும் உயர் ஒழுக்கமாகக் கருதும் பேதைமைக்குஆளாகார் அவ்வளவு நாணற்ற கீழ்மக்கள் உளராயின், அவர் கயமையைப் பாடாண் திணைக்கு உரித்தெனப் புலவர்தலைவரான தொல்காப்பியர்கொள்ளார்.அக்கயவர்

வாழ்வு திருநீக்கப்பட்டார் தொடர்பாக வெறுக்கப்படு வதே தமிழ் அற மரபாகும்''. இவ்வாறு தமிழ் மரபு கூறி நாவலர் பாரதியார் நச்சினார்க்கினியரின் தவறான உரை யைப்போக்கித் தக்கவுரைகூறித் தமிழ் மக்கள் அறப்பாங் கைப் பாதுகாக்கின்றார் ' வழக்கொடு சிவணிய வகையை யான'' என்றவரியையும் சேர்த்து ஈரடிச்சூத்திரமாக்கிப் பாரதியார் உரைகூறுகிறார். எனவே அச்சூத்திரம் வரு மாறு. அதன் எண். 30.

ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகையை யான.

பொருள்:— தலைமக்களின் ஊர்ச்சிறப்பும் உயர்குடிப் பிறப்பும் பாடாண் திணையில் பாராட்டுக்குரிய எனக் கூறுவர் புறநாற்புலவர், அப்பாராட்டு புலனெறி வழக் கொடு பொருந்தும் பகுதிகளில்.

இனி, 32-வது சூத்திரத்திற்கு நாவலர் பாரதியார் கண்ட ஆராய்ச்சி பொன்னேபோற் போற்றும் தன்மை யுடையது. அச்சூத்திரம்:

கொடிநிலை காந்தள் வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

இதன் முதலடியில் காந்தள் என்ற இடத்தில் ' கந்தழி'' என்ற சொல் இருக்கும். ''கந்தழி'' என்றே இளம்பூரண ரும், நச்சினார்க்கினியரும் பாடங்கொண்டு வெவ்வேறு பொருள் கூறுகின்றனர். இதுபொருந்தாது என்று

நாவலர் பாரதியார் ஆய்ந்து உரை தருகிறார். இந்த ஆய்வுரை தஞ்சாவூரையடுத்த கரந்தட்டாங்குடியிலிருக்கும் கரந்தைத்தமிழ்ச்சங்க வெளியீடான சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளது. இந்த ஆராய்ச்சி ஒன்றுக்கே தமிழ் நாட்டுமக்கள் நாவலர் பாரதியாருக்குக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

நாவலர் பாரதியார் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து தமிழ் அற மரபுபேணி உரை வகுத்தார் என்றும், உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியரின் தவறான உரையை மறுப்பதற்கு அஞ்சாமல் மறுத்து தக்க உரை கூறினார் என்றும் இதுவரை கண்டோம். அவற்றோடு சொற்பொருள் கருதி ஆய்ந்து விளக்கந்தரும் நயத்தையும் இனிக் காண்போம்.

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**
**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**.....................................................................**

என 35-வது சூத்திரம் கூறுகிறது. இதனில் கூறப்படும் கூத்தர், பாணர், பொருநர், விறலி எனப்படுவார் பற்றிய நாவலர் பாரதியார் விளக்கத்தைக் காண்க.

கூத்தர்— பிறர் ஒப்புக் கருதாது, பேசாமல் பாடாமல் மெய்ப்பாட்டால் அவிநயித்து ஆடுபவர்.

பாணர்—இசைபாடுவோர், இவர்தம் 'பாட்டும் கையாளும் இசைக்கருவியும் கருதி இசைப்பாணர்-யாழ்ப்

பாணர்—துடிப்பாணர் அதாவது மண்டைப்பாணர்—எனப் பலதிறப்படுவர். யாழ்ப்பாணர் தம் யாழ்பற்றிச் சிறியாழ்ப்பாணர் அல்லது சிறுபாணர்— பெரியாழ்ப் பாணர் அல்லது பெரும்பாணர் என்றிருவகையினராவர்.

பொருநர்:—நாடகத்தில் குறித்த ஒருவரைப் போல நடிப்பவர். (பொருந் = ஒப்பு)

விறலி:—இசைக்கேற்ப ஆடுபவன். (விறல் = உள்ளுணர்வை மெய்ப்படக் காட்டுந் திறன். அத்திறனுடையார் விறலியர்)

இவ்வாறு ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியர் நூலுக்கு நாவலர் பாரதியார் நவிலும் நயவுரைகள் நானில முள்ளளவும் நிலவி நிற்கும். ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு நூற்பாவையும் அறிவெனும் நாவால் அசைத்துச் சுவைத்து முன்னைய உரையாசிரியர்களால் எழுந்த பொருத்தமற்ற உரைகளைப் போக்கி நல்லவைகளை ஆக்கி நானில மக்களுக்கு நயத்தொடு நல்கியுள்ளார். அக்கடமைப்பாட்டில் முன்னைய உரையாசிரியர்கள் தவற்றைத் துணிந்து மறுத்தும் நயவுரைகளைப் போற்றியும் அமைத்துக்கொண்ட அருமைகள் பெரிதும் பாராட்டிப் போற்றற்குரியன. இந்தத் துணிவு தொல்காப்பியர் நூல் தோன்றி உரை வகுக்கப்பட்ட காலத்திற்குப் பின்பு எண்ணூறுண்டுகளாக எவருக்கும் தோன்றுமல் நாவலர் பாரதியாரிடமட்டுமே தோன்றியுள்ளதாகும். துணிவு என்பது ஏதாவதொன்று கூறி விடுவதென்பதன்று. சொல்லப்பட்ட செய்தி மறுக்கமுடியாதிருக்க வேண்டும்.

அதுவே துணிபாகும். நாவலர் பாரதியார் தொல்காப்பியப் புறத்திணையியல் ஆராய்ச்சியுரை தமிழ்நாட்டில் வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாயிற்று. இதுவரை இவ்வுரையை மறுத்தார் எவருமில்லை. பொதுவாக, நாவலர் பாரதியார் ஆராய்ச்சிக் கருத்து எதனையும் இது வரை மறுத்தாரில்லை. மறுக்க முடியாததாக அமைவதே நாவலர் பாரதியாரின் ஆராய்ச்சியாக இருக்கும். மறுக்கக் கூடிய ஆராய்ச்சியை ஆராய்ச்சி எனலாமா? பொறாமையின் காரணமாக ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். அது மறுத்ததாகாது.

இவ்வாறான ஆராய்ச்சியைக் கைம்மாறு கருதாது நல்கிய நாவலர் பாரதியாருக்கு நன்றி செலுத்தி அடியிலிருந்து முடியும் வரைத் தமிழ்மக்கள் நுகர்வார்களாக.

—O—

# தொல்காப்பியர்

## பொருட்படலம்: புறத்திணையியல்

ஒழுக்கமொன்றே கருதற்குரிய விழுப்பொருளாகக் கொண்டவர் பழையதமிழர். மக்களின் வாழ்க்கைச் செயலெல்லாம் திணையா (ஒழுக்கமா) யடங்கும். எல்லாச் சொற்களுக்கும் அவற்றின் பொருள்பற்றியே திணையும் பாலும் வகுக்கும் தமிழ்மரபு இதற்குச் சான்றுபகரும். 'உயிரினும் ஓம்பப்படும்—ஒழுக்கம்'பேணி, அதனை ஓம்பற்குரிய மக்கட்டன்மை சுட்டுவனமட்டே உயர்திணையெனவும், ஒழுக்கமே கருதொணாப்பிற எதனையும் குறிக்கும் சொற்களனைத்தும் அல்திணை-(திணையல்லாதன)எனவும் தொல்காப்பியர்போன்றபண்டைத்தமிழ்ப்புலவர்வகுத்த முறை இப்பழைய தமிழ் மரபுபற்றி யெழுந்ததாகும். "தீதொரீஇ நன்றின்பா" லுய்க்கும் அறிவு நெறி கடைப்பிடித்தொழுகாது, உருவத்தால் மக்களே போல்பவராயினும் மேவன செய்து திரியுங் கயவரையும், விரும்பியாங்கொழுகும் நரகரொடு தேவரையும், அறிவற்றபிற அனைத்தையும் ஒருங்கே அல்திணையாக் கொண்டாண்ட பழந்

தமிழ்மரபு உயர்வுள்ளும் தமிழர் ஒழுக்க நிலையையும் விழுப்பநோக்கையும் வலியுறுத்தும். மக்கள் வாழ்வில் தூய கற்புறுகாதல் கண்ணிய மனையறவொழுக்கம்பற்றிய அனைத்தும் அகமெனப்பட்டன. பிறர்தொடர் பின்றியமையா இற்புறவாழ்வோடியைபுடையவெல்லாம் புறமெனப்பட்டன. தனிச்சிறப்புடைய இத்தமிழ்மரபு பேணித் தொல்காப்பியர் தம் நூற் பொருட்பகுதியில், காதல் கண்ணிய அகத்திணையாமவற்றின் பொதுவியல்புகளைத் தொகுத்து அகத்திணையியல் என்னும் பேரால் முதலிற் கூறினார். அவ்வகவொழுக்கின் சிறப்பியல்களைக் 'களவு'—'கற்பு' எனுங்கைகோளிரண்டன்கீழ் வகுத்து விரிக்குமுன், பொருளை அகம்புறமென நிறுத்தமுறையானே, பொருளிடையீடாய். ஒருவாறகத் திணைகளுக்குத் தொடர்புடைய மற்றைப்புறவொழுக்க வியல்களையுஞ் சுட்டவேண்டி அவற்றை இவ்வியலில் விளக்குகின்றார்; ஆதலின், இது புறத்திணையியல் எனும் பெயர்கொண்டது.

காதலறவொழுக்கங்களைத் தொகுத்து ஏழு திணையாகக்கொண்டதற்கேற்ப, மக்களின் புறவொழுக்கங்களையும், 'மறனுடை மரபின்' ஏழேயாகக் கொள்ளும் பழைய தமிழ் முறையைத் தழுவி வெட்சி முதலாப் பாடாண் ஈறாப் புறத்திணை ஏழும் அவற்றின் இயல் துறை வகைகளும் இப்புறத்திணை யியலிற் கூறப்படுகின்றன. பழங்காலத்தில் ஆடவர்க்குரிய சிறந்த சால்புகளான 'பெருமையும் உரனும்' பெரிதும் மறத்தின் வீறுயமைதலின், புறவொழுக்கமெல்லாம் 'அமர்கொள் மரபின்' திணைகளாயின.

அவற்றை நிரலே முதலில் அகத் திணை ஒவ்வொன்றற்கும் ஏற்புடைப் புறனுயமையும் திணைவகையும் அதன் பெயரும் குறித்தல், அதையடுத்துடனே அப்புறத்திணையியல்விளக்கல், பிறகு அதன் துறைவகை தொகுத்தல், என முத்திறம்பட முறை பிறழாமல் விளக்குவர் தொல்காப்பியர். அவ்வத்திணைத் துறைகளின் தொகையெண் முதலிற்றிணைப் பெயரோடேனும், ஈற்றில் துறைவகையோடேனும் கூறப்பெறுகின்றது. எனவே ஒவ்வொரு புறத்திணைக்கும் குறைந்த அளவு மூன்றும், திணைதுறைகளின் சிறப்பியல்புகள் பெருகுமிடத்து மூன்றின் மிக்கும் சூத்திரங்கள் கூறப்படுகின்றன.

புறத்திணை ஏழும் முறையே, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் பெயர் பெறும். இவை நிரலே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்னும் அகத்திணைகளுக்கு இயலியையுபுடைமை கருதி அவ்வவற்றிற்குப் புறமாயமைவனவாய்க் கொள்ளப்பட்டுள. அவ்வமைதி அவ்வத்திணைச் சூத்திரத்தின் கீழ் விளக்கப்படும். அகத்திற்போலப் புறத்தும் திணைகளை ஏற்ப அவ்வவ்வொழுக்கத்திற் சூடும் மாலை அல்லது அடையாளப் பூவாற் பெயரிட்டழைப்பது அடிப்பட்ட தமிழ் நூன்மரபாகும். இம்முறையே இவ்வியலில் முதல் மூன்று சூத்திரங்களில் ஆகோளாம்வெட்சித் திணைவகையும் நான்கு, ஐந்து-ஆம் சூத்திரங்களில் ஆகோளைப்போலவே குறிஞ்சிப் புறனுய்ப் போர்துவக்கும் வெட்சியொழுக்கமாகும் கொடிநிலை—கொற்றவைநிலை—என்பனவும் பிறவெட்சித் துறைகளும் கூறப்படுகின்றன. வெட்சி, போர்துவங்குமுன் பகைவர்க்

கறிவிப்பதுபோல் அது பகைவர்நாட்டு ஆனிரைகளைக் களவிற் கொள்ளும் ஒழுக்கமாகும். போர் துவங்கிய பின் ஆகோள் கொண்டியாவதன்றி வெட்சியாகாது. அடைய லர்க்கு அமர்க்குறிப் பறிவித்துப் படைதொடச் செய்து அவர்மேற் செல்வதே போரறமாதலின், அமரறிவிப்பான் பகைப்புலத்து ஆகோடலைப் போர் தொடங்கும் மரபாக் கொண்டனர், பண்டைத் தமிழரும் பிறரும் பண்டைக் காலத்தில்.

களவில் ஆகொளவரும் முனைஞரைத் தடுத்து நிரை காவலர் மீட்க முயல்வதும், அவரொடு நிரைகொள்வார் பொருவதும் வேறு திணையாகாமல் ஆகோளின் இடை நிகழ்ச்சிகளாயடங்கும் இயல்கருதி அவற்றை "அனைக்குரி மரபிற் கரந்தை" என வெட்சித் துறைகளில் அடக்குவர் தொல்காப்பியர். அதுபோலவே போர்த் தொடக்கமாம் கொடிநிலை, கொற்றவை நிலைபோல்வனவற்றையும் பிற பல துறைகளையும் வெட்சியி லடக்கிக் கூறினர். அவ்வாறு போர்துவக்கும் ஒழுக்கவகைக ளனைத்தும் வெட்சி யெனப்பட்டு, மறனுடைமரபின் அமரறத்தொகுப்பாம் புறத்திணை வகையுள் முதற்கண் கூறப்படுகின்றன.

பிறகு, பகையடப் படையொடுமேற் செல்லும் வஞ் சித் திணையை அதன்வகை துறைகளொடு சூ-முதல் அ- வரை யுள்ள சூத்திரங்கள் விளக்குகின்றன.

அதையடுத்து. வேற்றுப்புலத்துப் படைகொடு செல் வோர் மாற்றலர் இருக்கையையெய்தி மலையுமுன் தம் ஆற் றிடை அகநாட்டுப் படையரண்களை எறிதல் அல்லது

அகப்படுத்தல் அமர் வென்று தாம் மீள இன்றியமையா தாகலானும், அடையலரின் இடையரண்களை முற்றிஎறித லும் கோடலும் அவர்கட்கு வேண்டப்படுமாகலானும், அவ்வொழுக்கமாய உழிஞைத்திணையும் அதன் வகை துறைகளும் இவ்வியலில், கூ-முதல் கஉ-வரையுள்ள சூத் திரங்களால் தெளிக்கப்படுகின்றன. முற்றுவோர் முயற் சியை அரண்காவலர் முரணுது தடுப்பதும். அக்காவலர் எதிர்ப்பைக் கடந்தடக்கியன்றி அரண் எறிதல் கூடாமை யும் இயல்பாகும். முற்றுவாரின்றி மதில்காவற்போர் நிகழுமாறில்லை யாகலானும். முற்றியெறிவாரின்றி வாளா அரண்காத்திருத்தல் நொச்சியெனக் கருதப்படாதாக லானும், அரண் எறிமுறையின் ஒருதிறனு அடங்கும் முற் றெதிர்ப்பைப் பிற்காலத்தவர்போல வேறு பிரித்து நொச்சியெனத் தனித்திணையாக்காமல்,செந்தமிழியற்கை சிவணிய நிலத்துப் பழைய முறை பேணி முற்றுகை பற்றிய உழிஞைத் திணையிலடக்குவர் தொல்காப்பியர்.

அவற்றின் பின், பகைமேற் சென்றுரைத் தகைத்து நின்றுரெதிருன்ற, தானையிரண்டும் தம்முள் தலைமயங்கி மலைதலாகும் தும்பைத் திணையையும்,அதன் வகை துறை களையும் ௰ச-முதல் ௰எ-வரையுள்ள சூத்திரங்கள் தெரி விக்கின்றன. படையெழுச்சியை மட்டும் வஞ்சியென வகுப்பதும், சென்றுரை நின்றுரெதிர்ப்பதைக் காஞ்சி யெனத் தனியொரு திணையாப் பிரிப்பதும், எதிர்த் திரு படையும் அதர்ப்பட மலைதலைத் தும்பையென வேருர் திணையாக் கூறுவதும் பிற்கால வழக்கு. சென்றுரை நின்றுரெதிர்ப்பது போராய்த் தும்பையிலடங்குதலா னும், பொருதலற்ற எதிர்ப்பெதுவுங் கருதல் கூடாமை

யானும். பண்டைத் தமிழ் நூலோர். சென்ற பகையெதிர் நின்றுதகையும் எதிர்ப்பும், இறதிறப்படையும் ஒருதலை மலையும் போரும் உடனமையத் 'தும்பை' யென வொரு திணையே கொண்டார்; தொல்காப்பியரும் அப்பழமரபே பேணிக்கூறுவர்

போர்க்கூறுகும் தும்பைத் திணைக்குப்பின். பொருது வென்றோர் வீறுகூறும் வாகைத்திணையும் அதன் துறை களும் ௰அ-முதல் ௨க-வரையுள்ள சூத்திரங்களில் தெளிக் கப்படுகின்றன. அமர் வெற்றியுடன், அதற்கியைபுடைய தாய்ப் பிறதுறைகளில் இகலிவென்றோர் வீறும் கூட்டி, ஒப்பக்கூறல் ஒன்றெனமுடித்தல் தன்னினமுடித்தல் எனு முறையில். பாராட்டுக்குரிய வெற்றியனைத்தும் இவ்வா கைத் திணைவகையிலடக்கிக் கூறப்படுகின்றன.

அதையடுத்து. 'அமர்கொள்மரபின்' தும்பையும் வாகையுமான போரும் வெற்றியுமொழிய, மற்றைய விழுப்பமும் விழுமமும் விளக்கும் ''பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லாவுலகம் புல்லியநெறித்'' தாய பிற வொழுக்கத் தொகையாம் காஞ்சித்திணையும்அதன் துறை களும் ௨௨-முதல் ௨௪-வரையுள்ள சூத்திரங்களாற் கூறப் படுகின்றன.

இவ்வியல் ஈற்றில், இகலில் மிக்கார் வெற்றிமட்டு மன்றி, எனைத்துவகையானும் மேதக்காரை மீக்கூறலாய் அவர் பீடும்வீறும் புகழும்பாடாண்டிணையும் அதன் பொதுச் சிறப்பியல்புகளும் வகைதுறைகளும் விரிக்கப் படுகின்றன.

இப்பழைய முறையினைத் தழுவாமல்,பன்னிருபடலம், வெண்பாமாலை முதலிய பிற்கால நூல்கள் புறத்திணைகளைப் பன்னிரண்டாக்கிக் கொண்டன. பன்னிருபடலம் பிற்கால நூலாதல் தேற்றம், அதிற் கூறப்படும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி முதலிய பலதிணையியலும் அவற்றின் துறைவகையும் தொல்காப்பியர் கொள்கையொடு மாறுபடுதல் கண்கூடாதலின், முரணுமிவ்விரண்டும் ஒரே கணக்காயரிடம் இத்திணைகளை ஒருங்கு கேட்டோர் கூற்றாதல் கூடாமை ஒருதலை.பன்னிருபடலத்தின் வெட்சிப்படலம் தொல்காப்பியரால் அவரிவ்வியலிற் கூறுவதற்கு மாறாக இயற்றப்பட்ட தென்பதொன்றே பன்னிருபடலமாக்கியோர் காலம்பற்றிய கதையின் பொய்ம்மையைத் தெளிப்பதாகும். ''பன்னிருபடலத்தில் வெட்சிப் படலம், தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது'' என்று இளம்பூரணர் இவ்வியல் வெட்சி கூறும் சூத்திரவுரைக் கீழ் விளக்கியுள்ளார். புறத்திணைத் துறைகளைப்பலவாறு பிற்காலத்தே பிறழக்கூறியோர் தம் பெயரொடு கூறத் துணியாமல், தம் நூலுக் குடன்பாடும் ஆட்சியும் பெறவேண்டிப் பண்டைப்பெரியோர் பெயரோடதனை வெளிப்படுத்தியது வியப்பில்லை. ஞானவெட்டியை வள்ளுவருக்கும், புலமையற்ற பல பிற்காலச் சோதிட மருத்துவச் செய்யுட்களை அகத்தியருக்கும் சுமத்தியது போலவே, காலத்தால் மிகப்பிந்திய பன்னிருபடலத்தைத் தமிழகத்துப் ''புலந் தொகுத்தோனெனத் தன்பெயர் நிறீஇய'' தொல்காப்பியருக்கும், அவரோடொருபள்ளி மாணவராகக் கருதப்பெற்ற பழம்புலவருக்கும் சுமத்தியுள்ளாரெனத் தெளிதல் எளிதாம். இனி இப் ''பன்னிரு

படலம் முதனூலாக (அதன்) வழி நூலே ......வெண்பா மாலை'' யாதலால், பின்னது முன்னதன் முறையையே முழுதுந்தழுவி நடப்பதாகும். இவ்வுண்மை தேறாமல், இவற்றின் புதுமுறையே பழைய தொல்காப்பியமுங் கூறு மெனக் கருதிப் பிற்காலப் புலவர் சிலர் அப்பண்டைநூற் சூத்திரங்களுக்குப் பின்னூற் கருத்துக்களையேற்றிப் பல விடங்களில் பிறழ உரைகூறி யிடர்ப்படுதலறிந்து பிழை விலக்கி மெய்ப்பொருள் காணமுயலுவது நம்மனோர் கடமையாகும்.

எழுதிணை யென்னும் முந்துநூன் முறைபிறழப் பிந்தியோர் கொண்ட புறத்திணை பன்னிரண்டும் வருமாறு:— (1) போர்த்துவக்கமாம் ஆகோள்வெற்றியும், (2) அதற்கு மறுதலையாய், வெட்சியோர் கவராமல் நிரை மீட்க முயலும் காவலர் எதிர்ப்பாம் கரந்தையும், (3) பகைவரின் நாடுகொள்ள வெழும் படைச் செலவு வஞ்சியும் (4) அதற்கு மறுதலையாய், மலையவந்த பகைவரை நின்றூர் எதிருன்றித்தகைவது காஞ்சியும், (5) மதிலை வளைத்துக் கொள்ளுதல் உழிஞையும், (6) அதற்கு மறுதலையாய் அகத்தோர் தம் மதில்காத்தல் நொச்சியும், (7) சென்ற பகையோரும் நின்று தகைவாரும் தம்முட் பொருதல் தும்பையும், (8) போரில் வெல்லுதல் வாகையும், (9) எவ்வாற்றானும் புகழப்படுதல் பாடாணும், (10) இத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளவை பொதுவியலும், (11) இரு மருங்கொவ்வா ஒருதலைக்காதல், கைக்கிளையும், (12) பொருந்தாக் காமம் பெருந்திணையும், ஆகப் பன்னிரு புறத்திணை பகரப்படுவன.

இன்னும் இப்பின்னூலோர் இவற்றுள் முதலன ஏழே புறத்திணையெனவும், ஈற்றுறுமிரண்டும் அகப்புறமெனவும், இடைப்படு மூன்றும் புறப்புறமெனவும், தொகை பன்னிரண்டும் வகைபெறுமென்பர். காலத்தொடுபட்டு மரபு பிறழாமல் ஏற்புழி வழக்கொடு பொருந்தப் புகும் புதியதும், கடிதலின்றிப் போற்றற்சூரியவாதல் கூடும். எனில், மிகையாகும் இப்புதிய புறத்திணைவகை பழைய தமிழ் முறையோடு முரணுவதுமட்டுமன்று; இது செவ்விய வகுப்புமுறை யெதுவுமின்றித் தடை பலவற்றிற் கிடமும் தருகின்றது. முதற்கண், மேற்காட்டியாங்கு கரந்தை வெட்சியிலும் நொச்சி உழிஞையிலும் இப்பின்னூற் காஞ்சி தும்பையிலும் முறையே அதனதன் பகுதியாயடங்கியமைதலானும், எதிர்ப்பற்ற வெட்சி வஞ்சி உழிஞை தும்பைகள் கருதொணுமைகண்கூடாதலானும், இவ்வாறு கூறுவன வேறும் திணைகளெனப் பிரித்து வகுப்பதற்கிடமும், அதிற் சிறப்பும் காணற்கில்லை.

இனி, திணையனைத்தும் ஒன்றிலொன்றடங்கா அகமும் புறமுமா யிருவேறு வகையா மெனக்கொண்ட பிறகு, திணை எதுவும் ஒன்று அகத்தது அன்றேல் புறத்தது எனப்படுதலன்றி, அகப்புறமாமென்ருேர் புதுவகைப் படுத்தெண்ணுவது, பொய் பொய்யே யாவதன்றி, தனிப்பொய், பொய்ப்பொய், மெய்ப்பொய் என முத்திறப்படுமெனல் போல், பொருளொடு பொருந்தாப் போலி முறையேயாகும். புறமெதுவும் அகவகையாகாதது போலவே, அகமெதுவும் எனைத்து வகையானும் புறனுகாமையும் ஒருதலையாத் தேறப்படும். அகத்தில் தனியகம்

அகத்தகம் புறத்தகம் எனும் பாகுபாடின்மையால், புறத்துள்ளும் புறமேயன்றிப் புறப்புறமும் அகப்புறமும் வேறு கோடலமையாமையறிக. மெய்ப்பொய்—ஒளியிருள்—பகலிரா என்பன போலவே; அகப்புறத்திணையொன்று கருதுமாறில்லை. இயல் வேறுபட்ட இருவகைத் திணைகளைப் புணர்த்து அகப்புறமெனப் ப.துவதோர் விரவுத்திணை வகுத்ததோடமையாமல், புறப்புறமென வொரு வகைகோடல் எற்றுக்கு? அகத்தின் வேறு புறமாதல் போலப் புறத்தின் வேறுபடுவது அகமேயாகும். மற்றைய புறப்புறமென்பது பொருளில் கூற்றும். "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய் ஏழனையும் அகமென்றலின், அவ்வகத்திற்குப் புறனவதன்றிப் புறப்புறமெனல் ஆகாமை யுணர்க" எனக் காஞ்சிச் சூத்திரவுரையில் இம்முறையல்லா முறையை நச்சினார்க்கினியரும் மறுத்துரைக்கின்றார். பொருவோரிருவருள் ஒருவர் வெல்லுதல் போரினியல்முடிபாகும். இதில் போராம் தும்பையைப் புறனக்கிப், போரில் வேறலாம் வாகையைப் புறப்புறமென வேறுபடுத்துவதேன்? தனிவேறியல்புடைய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பைகளையெல்லாம் அகத்தின் வேறும் பொதுவியல்கொண்டு புறமெனு மொருவகையாக்குவோர், அவற்றோடியலியைபுடைய வாகை பாடாண்களையும் புறமாகக் கொள்ளாமல் வேறுவகையாக்கி மாறுபடுவானேன்? அன்றியும் 'பொதுவியல்' என்பன புறத்திணைகளுக்குப் பொதுவாம் துறைகளேயாதலின், அவையொருதனி வேறு திணையாமாறில்லையே. "பொதுவியலென்றோர் திணைப் பெயராகாமை யுணர்க" என நச்சினார்க்கினியரும் இதை மதுரைக்காஞ்சியுரையில் மறுப்பதறிக.

மேலும் தொல்காப்பியர் போலவே கைக்கிளை பெருந் திணைகளைப் பிற்காலத்தும் அகவகையாகவேகொண்டாள் வது, நம்பியகப் பொருளானும் அகத்துறைக் கோவைக ளானும் இனிது விளங்கும். அப்படியிருக்க, அவற்றையே மீட்டும் புறத்திணை வகையுள்ளும் கூட்டி அத்திணைத் தொகை யெண்ணை மிகுப்பானேன்? இன்னும் புறத்திணை கள் காலமிடங் கருதாமல் ஒழுக்க நெறியில் ஒவ்வோ ரகத்திணைக்கும் புறனுதல் வேண்டுமென்ற நன்முறை யிறந்து, புறத்திணைத் தொகையைப் பெருக்கி ஒழுக்க வேறுபாடின்றி எண்ணுக்குப் பன்னிரண்டாக்கி, அவற் றிற்கு அகத்திணை யேழனொடுந் தொடர்பறுத்துக்காணும் பயன்தானென்ன? பிந்திய நூல்கள் புறத்திணை யொவ் வொன்றன் துறைகள் இவை எனத் தொகுப்பதல்லால், தொல்காப்பியத்துட்போல அவ்வத்திணையின் செவ்வியல் விளக்காமையொன்றே புறம்பன்னிரண்டென வகுத்தற் குரிய இயல் வேறுபாடு காணாமையையும், அத் தொகைவகை முந்துநூல் முறையொடு முரணிப்புலனெறி வழக்காகாமையையும் வலியுறுத்தும். எனவே தொல் காப்பியரின் புறத்திணை வகுப்புமுறையே இயல்பொடு பொருந்தும் நயமுடைத்தாய்த் தொன்றுதொட்டு என் றும் நின்று வழங்கற்குரிய முன்னைத்தமிழக நன்முறையா மென்பது கண்டு தெளிக.

இனி, அகத்திணையிய லுரைமுகத்துக் கூறியாங்குத் தொல்காப்பியர் நூலுள் இப்புறப்பகுதியிலும் பிறண்டும் பிறர்கோள் பேசுவன தவிர மற்றையவனைத்தும் 'வண் புகழ்மூவர் தண்பொழில்வரைப்பின் அகத்தவர்வழங்குந் தமிழ்ப்பழமரபுகளே' கூறப்பெறுகின்றன என்பதனை

மறக்கொணாது. இவ்வுண்மையை மறந்து உரைகாரர் பிற வடநூற்கொள்கைகளை இத்தமிழ் நூல் கூறுவதாகக் கொண்டதனால் பல சூத்திரங்களுக்குத் தொல்காப்பியர் நோக்குக்கும் அவர் சூத்திரச் சொற்போக்குக்கும் பொருந்தாப் பொருள்கூறி இடர்ப்படலாயினர். **"தமிழ் கூறுநல் லுலகத்து எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி, செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல்கண்டு முறைப் படவெண்ணிப் புலம் தொகுத்த" தொல்காப்பியரின் கருத்தைப்பேணி**, அகப்புறத் தமிழ்ப்பழஞ்செய்யுண் மரபுகளுடன் முரணுவாறு, தமிழர் ஒழுக்கமுறை கூறும் இந்நூற் சூத்திரங்களின் உண்மைப்பொருள், அவ்வவற்றின்சொற் ஜெடரோடு அமைவுபெற நடுநிலையி லாய்ந்தறிய முயலுபவருக்குத் தெளிதல் எளிதாம். இதற்கு மாறாகத் 'தமிழகத்தின் புறத்தவர்' வழக்கவொழுக்கங்களைப் புகுத்தித் தமிழர்பொருளியற் கூற்றுக்களுக்கு விளக்கம்காண முயல்வது, 'கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇயற்' றாய், பிழையொடு பிழை விளைப்பதாகும்.

# தொல்காப்பியர்-பொருட்படலம்

## புறத்திணையியல்

### உரைப் பகுதி

சூத்திரம்:—1.

*அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்*
*புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்,*
*வெட்சி தானே குறிஞ்சியது புறனே;*
*உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே.*

கருத்து:—இது, குறிஞ்சிக்குப் புறனாவது வெட்சி யென்பதையும், அதன் துறைவகை இனைத்து இத் துணைத்து என்பதையும் கூறுகிறது.

பொருள்:—அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந் தோர்=முற்கூறிய அகவொழுக்கம் பற்றிய இயல் வகை முறைகளைப் பிழையற நன்கறிந்தோர்; புறத்திணை இலக் கணந் திறப்படக் கிளப்பின்=புற ஒழுக்க இயல் வகை முறைகளைத் தெளிவுபட வகுத்துரைப்பின்; வெட்சி தானே குறிஞ்சியது புறனே=வெட்சித் திணை குறிஞ்சி யெனும் அகத்திணைக்குப் புறனாகும்; உட்குவரத் தோன் றும் ஈரேழ் துறைத்தே=அவ்வெட்சித்திணை அச்சம் விளைக்கும் தோற்றமுடைய பதினான்கு துறைவகை கொள்ளும்.

குறிப்பு:—இதில், ஏகார மூன்றனுள், முதலது, வெட்சியைப் புறத்திணை ஏழில் பிறவற்றினின்றும் பிரித்து விலக்குதலால், பிரிநிலையாம்; பின்னிரண்டும் தேற்றம்; அசையுமாம். 'அரில்தப உணர்ந்தோர்... இளப்பின்' என்ற எச்சக்குறிப்பால், அகத்திணைகளி னியல்பை ஐயந்திரிபுகெட அறிந்தார்க்கன்றி, மற்றவர்க்கு அத்திணைகளொடு தனித்தனி யியைபுடைய புறத்திணை களினியல் திறம்படக்கிளத்தல் கூடாமை சுட்டப்பட்டது. எனவே, புறத்திணைகளெல்லாம் முறையே ஒவ்வோர் அகத்திணைக் கியைபுடையவாதலும், அதனல் அகத்திற் போலவே புறத்திலும் திணை ஏழா யமைதலும் மரபென் பதும் வலியுறுத்தப்பட்டது.

இனி, வெட்சி குறிஞ்சிக்குப் புறனுமாறு:— காதல் கண்ணிய அனைத்தக வொழுக்கங்களுக்கும் குறிஞ்சி முதலாதல் போல, 'அமர்கொள்மரபின்' புறத்திணைக ளெல்லாம் வெட்சியைக்கொண்டு துவங்குதலானும், குறிஞ்சியும், வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வ வாதலா னும். ஒழுக்க முறையால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனு யிற்று. இனி, நிரை மேயும் மலைச்சார்பு களவிற் கூடும் குறிஞ்சிக்கும் களவில் ஆதந்தோம்பும் வெட்சிக்கும் சிறந் துரியதாகலும், நள்ளிரா இவ்வீரொழுக்கங்களுக்கும் ஏற் புடைத்தாகலும், இடத்தானும் காலத்தானும் இவற் றிடை ஒரு புடையியைபுடைமை எய்துவித்தலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனுயமையும்.

இன்னும், மக்களின் அக ஒழுக்கம் ஏழாதல் போல, அவற்றிற்கு இயலியைபுடைய அவர்தம் புறவொழுக்கமும் எழுதிணை யென வகைபெற வைப்பதே பழைய மரபாத லின், அகத்திணை யியல்வகைகளை நன்கறிந்தார்க்கன்றி,

புறத்திணைகளும் அவற்றின் துறைமுறைகளும் இனிது விளங்கா எனற்கு, 'அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர் புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்' என்றிப் புறத்திணை முதற் சூத்திரத் துவக்கத்திற் கூறப்பட்டது எனவே, இவ்வாறு அகத்திணை ஏழொடு புறத்திணை யேழும் யாப்புற வுடையதாகக் கொள்ளுவதே அடிப்பட்ட தமிழ்மரபெனத் தெளியவைப்பதால், அத் தொடர்பு தொலைத்துப் புறத்திணைகள் பன்னிரண்டென் னும் பிற்காலக் கொள்கை பழவழக்கொடு முரணுமிழுக் காதல் தேறப்படும்.

வெட்சியின் துறைகள், 'வேந்து விடு முனைஞ' ரால் 'மறனுடை மரபில்' நிகழ்தலின், போர் பயிலாத நிரை காக்கும் ஆயரும் அயலாரும் அஞ்சுதல் இயல்பாம். ஆத லான், வெட்சித் துறைகள் 'உட்குவரத் தோன்றும்' எனப்பட்டன. (ந)

சூத்திரம்:— 2.

**வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந் தோம்பல் மேவற் றாகும்.**

கருத்து:— இது வெட்சித்திணையின் இயல் விளக்கு கிறது.

பொருள்:— வேந்துவிடு முனைஞர் = மன்னரா லேவப் பெற்ற படை மறவர்; களவின் வேற்றுப்புல ஆதந்தோம் பல் = கரவால் பிறர் நிலத்து நிரை கவர்ந்து போந்து புரந்

6

தருதலை; மேவற்றாகும் = (அவ்வெட்சி) விரும்புந்தன்மைத் தாம்.

குறிப்பு:—கொண்ட பொருட் குறிப்பால் அவாய் நிலையாய் 'அவ் வெட்சி' யென்பது கொள்ளப்பட்டது.

இனி, 'வெட்சி' மறனுடை மரபில் அமர் துவக்கும் ஒழுக்கமாதலின், போர் விரும்பும் மன்னரேவலால் அது நிகழ்தற்பாற்று. பிற நாட்டொடு போர் தொடங்குதல் இறைமை முறையாய் மன்னர் பாலதே யாதலால், இப் போர்த் தொடக்கத்தினை அவராணைவழித்தாதல் ஒருதலை. அன்றியும், அது போர்க்குறி யாதலால், மன்னரேயினும், பொருந ரல்லாப் பிறர் மேற்கொள்ளற்பாற்றன்று. பிறர் நிரைகவர்தல் போர்த்தொடக்கம் குறியாமல் திருட்டாய்க் கருதப் பெறுமாகலின், இத்திணைக்கு மன்னர் பிறரை விலக்கித் தம் படைமறவரையே ஏவற்பாலர். மேலும், முனைஞரும் மன்ன ரேவலின்றித் தாம் விரும்பியாங்குப் போர் தொடங்கல் கூடாதாகலின், போர்த் தொடக்கமாம் ஆகோளும் வேந்தராணையில்வழி அவர்க்கொவ்வாத் தவறாகும். இத் தமிழ்ப் பேரறம் விளக்கவேண்டி, ஆனிரை கொள்ள 'வேந்து விட' லும் அவ்வாறு விடப்படுவார் 'முனைஞரே' யாதலும் வெட்சித் திணைக்கின்றியமையாமை சுட்டி 'வேந்துவிடு முனைஞர்' எனக் கூறப்பட்டது.

இன்னும், கவர விரும்பும் பிற நாட்டு நிரையும்போர் நிகழாக் காலத்து மன்னறக் காவல் துன்னித் தங்நிலத் துய்க்கப்பெற்றுழிக் கவரப்படுதல் முறை திறம்பி அற மழிப்பதாமாகலின், போர் துவக்குவோர் தமதல்லாப்

பகை நிலத்தில் நிரைகவரற்பாலரெனற்கு 'வேற்றுப் புல'த்து என விளக்கப்பட்டது. போராகாமல் போர்க் குறியறிவிப்பாய் நிரைகொள்ளலே இத்திணை யாதலால் பகைப் படையின் எதிர்ப்பும் போரும் வேண்டாது பகைவர் நிலத்து அவரறியாமல் கரவில் கைப்பற்றும் முயற்சியே வெட்சியும், வெளிப்படையாய்ப் பகைவரை அறைகூவி நிரைகவர்தல் தும்பைப்பாற் கொண்டியுமாமென்பது தோன்றக் 'களவின்' எனக் கூறப்பட்டது. நிரைகவரக் கருதிச் சென்றோர் எதிர்பாராத காவலர் எதிர்ப்பிற்கிடைந்து நிரை கவராதேனும் கவர்ந்தாங்கே மீட்க விட்டேனும் வாளா மீளல் ஆகோள் வெட்சியாகாதென்பதையும், மீட்க விடாமல் கவர்ந்து கொணர்ந்த நிரையைத் தம்மை ஏவிய வேந்தர்பால் ஊறின்றி யுய்ப்பது முனைஞர் கடனுதலையும் தெளிக்கவேண்டி 'ஆதந் தோம்பல் மேவற்றாகும்' என விளக்கப்பட்டது. இக்கருத்தானே, 'ஓம்புதலாவது மீளாமல் காத்தல்' எனவும், 'போர்க்கு முந்துற நிரை கோடல் சிறந்த'தெனவும், இச்சூத்திரத்தின் கீழ் உரைக்குறிப்பாய் இளம்பூரணர் கூறுதலும் காண்க. இம் மாற்றருஞ் சால்புடை மரபுகள் போற்றாதபிற்காலத்தில், நிரை மீட்கும் முயற்சியை வெட்சியலடக்காமல் கரந்தையென வேறு திணையாக்கியும், இவ்வெட்சியை வேந்தன் மேற்றாய் நிறுத்தாமல் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று அன்ன விருவகைத்' தாக்கியும், தந் நாட்டை விலக்காமல் யாண்டும் பிறர் நிரை கவர்தல் வெட்சியாம் போலவும், முறைபிறழத் துறைகளைக் கூட்டியும் மாற்றியும், முந்துற நிரை கவர்ந்து அமரறிவித்துப் பின் பொருவதே போரறமென்பதை மறந்து போர்த் துவக்கத்தில் நிகழும்'கொடிநிலை—கொற்றவைநிலை—வெறி

யாட்டு' அன்ன கடவுட்பராவு நிலைகளை வெட்சிக்கண் போர்த்துறைகளாக எடுத்து நிறுத்தியும், இன்னும் பல்லாற்ருனும் பின்னூல்களில் மரபிறந்த மாறுபாடுகள் மலிவவாயின. பன்னிருபடலத்துள் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென் றன்ன விருவகைத்தே வெட்சி' எனவும், அதைப் பின்பற்றி 'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும், சென்றிகன் முனை ஆதந்தன்று' என வெண்பா மாலையிலும், வெட்சியை இருகூறுபடக் கூறினுராயினும், முன் 'வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை, முதலாயின (படை எடுத்துச் செலவு, எயில்காத்தல், போர்செய்தல் என்பன) அரசர் மேலாய் இயன்று வருதலின், வேந்துறு தொழிலொழித்துத் தன்னுறு தொழிலெனத் தந்நாட்டும் பிறர்நாட்டும் களவில் ஆனிரைகோடலின், இவர் அரசரது ஆணையை நீக்கினு ராவர்; ஆதலால் அவர் அவ்வாறு கூறல் மிகைபடக்கூறலாம்', என இளம்பூரணரும் பிழைபட்ட பிற்காலக் கொள்கைகளைக் கடிதல் காண்பாம்.

இனி, முடிவேந்த ரல்லார் சிலரைப் புகழ்ந்துவரும் வெட்சிப் பாடாண் புறப்பாட்டுக்களைக் காட்டி. அவை மன்னர் பணிப்பின்றி ஆகோள் தன்னுறு தொழிலாய்க் கொள்வதற்கு மேற்கோள் என்பாருளர். அப்பாட்டுக்கள் குறுநில மன்னரைப் பற்றியவை 'மன்பெறு மரபின் ஏனோ' ராகிய குறுமன்னருக்கு 'வேந்துவினை யியற்கை வேந்தனின் ஒரீஇய (அவ்) வேனோர் மருங்கினும் எய்திடனுடைத்து' எனத் தொல்காப்பியரே கூறுகிருர். எனவே, இன்னோரைப் பாராட்டும் வெட்சிப்பாடாண் புறப்பாட்டுக்கள், ஒரு வகையாய் மன்னராவார்க்கு உறுதொழிலே

கூறுவனவாம்; வேந்தன் பணிப்பின்றியும் மக்களில்யாரும் தன்னுறு தொழிலாக நிரைகவரும் தவறுக்கு இப்பாட்டுக்கள் மேற்கோளாகாமை வெளிப்படை.

சூத்திரம்:—3.

படையியங் கரவம், பாக்கத்து விரிச்சி,
புடைகெடப் போகிய செலவே, புடைகெட
வொற்றி னாகிய வேயே, வேய்ப்புற
முற்றி னாகிய புறத்திறை, முற்றிய
ஊர்கொலை, ஆகோள், பூசன் மாற்றே,
நோயின் றுய்த்தல், நுவல்வழித் தோற்றம்,
தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடையென
வந்த வீரேழ் வகையிற் றாகும்.

கருத்து:—இது, முதற் சூத்திர விறுதியில் 'வெட்சி தானே உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே' எனத் தொகுத்தோதிய துறைகளின் வகையும் பெயரும் விளக்குவதாகும்.

பொருள்:—படையியங் கரவம் = நிரைகவரப் படை நடக்கும் ஆர்ப்பு;

வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியார்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றா—ரெவ்வாயு
மார்க்கு மழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு 1236)

பாக்கத்து விரிச்சி = செல்லும் பக்கத்தே புள்வாய் நற்

சொல்லின் குறிப்பறிதல். (விரிச்சி-புள்ளொலியால் நல்ல தறிதல்).

மன்ன வன்னிரை வந்து கண்ணுறு
மின்ன நாளினுற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரன்
முன்னங் கூறினன் முழுது ணர்வினன்.

(சிந்தாமணி, 415)

.........................................
நல்வேய்தெரிகானவன் புள்வாய்ப்புச் சொன்னகணி

(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

வேற்றூர்க் கட்சியுட்காரி கடியகுரலிசைத்துக் காட்டும்
போலும், . .. மறவன் கைவில் ஏந்திப்புள்ளும்
வழிபடரப்——புல்லார் நிரைகருதிப் போகும்.

(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

புடைகெடப் போகிய செலவு = பக்கத்து இடமில்லை யாம்படி படை பரந்துசெல்லுதல்;

வெவ்வாள் மறவர் மிலைச்சிய வெட்சியர்
செவ்வானம் செல்வதுபோற் செல்கின்றார்-எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் பாடாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு, 1236)

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே = வேற்றுப்புலத்து இருதிறத்தும் ஒற்றறிய இடமில்லையாம்படி ஒற்றரால் அறிந்த உளவு;

ஒருவ ரொருவ ருணராமற் சென்றாங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு. (பழம்பாட்டு)

தம் மொற்றர் இனியறிய இடமில்லாதாயிற்று, அவர் முற்றும் ஒற்றி முடிந்ததனால் பிறர் ஒற்ற இடமில்லையாயிற்று, அவரறியாவாறு தம் மொற்றர் மறைவில் ஒற்றிய திறப்பாட்டினால்.

வேய்ப்புற முற்றின் ஆகிய புறத்திறை = உளவறிந்த சூழலை வளைத்து அற்றநோக்கி அடங்கியிருத்தல்.

கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசெல் மள்ளர் பதிந்தார்— அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமிவ் வூர்.

(பதிதல் = அமைதியாகத் தங்குதல் அரந்தை = துன்பம்.)

முற்றிய வூர்கொலை = வளைந்துகொண்டு நிரை மீட்கப் பொருவாரைக்கோறல்; (ஊர்-மீட்கப் பொருமூரவர்க்கு ஆகு பெயர்.)

சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றுண்
டிகலுழந்த வல்வில் விளையோர்புண் டீரத்
துகளெழுங்கொல் பல்லான் றொழு. (பழம்பாட்டு)

ஆகோள் = ஆனிரை கொள்ளுதல்;

.......... ..................................

.... புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றியோனே. (புறம்-257)

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய். (புறம்-259)

எனும் புறப்பாட்டடிகளும் நிரை கொண்டோர் நிலையே கூறும்.

பூசல் மாற்று = நிரைகொண்டு மீள்வோர் மீட்போரால் நேரும் பூசலை விலக்குதல்;

ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படரத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றூர்
தம்பூசல் மாற்றி நிரைகொள்வான் றக்கிளர்
வெம்பூசன் மாற்றிய வில். (பழம்பாட்டு)

போர் இன்றி நிரைகொள்வதே நோக்காதலின், போர் என்னாது பூசல் எனப்பட்டது. பூசல்-போரின்முன் நிகழும்

ஆர்ப்பு. போராய் வளருமுன் அதனைத் தடுத்து விலக்கல் வெட்சியார் வினையாதலின், பூசல் மாற்றெனப்பட்டது.

நோயின் றுய்த்தல்=பற்றிய நிரை வருந்தாவாறு கொண்டுசெலுத்தல்;

..............................................
முல்லை வகுத்திற் போகிப் புல்லருந்திக்
கான்யாற்றுத் தெண்ணீர் பருகிக் காமுறக்
கன்றுபா லருந்துபு சென்றன மாதோ
....................கவைஇய நிரையே.

(ஆசிரியமாலை-புறத்திரட்டு, 1242)

நுவல் வழித்தோற்றம்=தம்மவர் புகழும்படி நிரை கொண்டார் மீளும் பொலிவு;

..............................................
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென் ஐக்கு
உழையோர், தன்னினும் பெருஞ்சா யலரே.

(புறம்-262. மதுரைப்பேராலவாயார்)

தந்து நிறை=கொண்ட நிரையைத் தம திடத்துக் கொணர்ந்து நிறுத்தல்;

கயமலர் உண்கண்ணாய் காணாய் நின் ஐயர்,
அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்

நயனின் மொழியின் நரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன
(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

குளிறுகுரன் முரசங் கோட்டின் வெரூஉங்
களிறுருடுதேர் காண்டலு மாற்றா—ஒளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் புறங்கான
மெல்லாம் பெறுக விடம். (பழம்பாட்டு)

பாதீடு = நிரை கொண்டோர் தம்முட் பங்கிடுதல்;

நேரார் புலத்து நிரையைக் கவர்ந்தெதிர்த்த
போரார் மறவர் புறங்கண்டு—பாராளும்
வேந்தனைமுன் வாழ்த்தினர் வெட்சி முனைஞரவன்
ஈந்தபொருட் பாதிடுவா ரின்று.

(பாதிடுதல் = பங்கிடுதல்.)

உண்டாட்டு = வெட்சியோர் வெற்றி மகிழ்ச்சியால் உண்டு களித்தல்;

முட்காற் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கந் தார
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே......................
(புறம். 258)

(கந்தாரம் = ஒருவகை மது. தலைச்சென்று = முன் சென்று.)

கொடை = வென்று கொண்டோர், துடியன், கணி, பாணர் முதலிய இரவலர்க்கு ஈந்துவத்தல்;

இளமா எயிற்றி! இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர் தம்முன்றில் நிறைந்தன.

(வேட்டுவ வரி—சிலப்பதிகாரம்)

.....................புல்லணற்காளை
யொருமுறை யுண்ணா வளவைப் பெருநிரை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்கும். (புறம். 258)

என வந்த ஈரேழ் வகையற்றாகும் = என்று இவ்வாறு எண்ணப்பட்ட பதினான்கு வகைப்படும் (வெட்சித்துறைகள்).

குறிப்பு:—செலவே, வேயே, மாற்றே என்பனவற்றுள் ஏகாரம் அசைநிலை; எண்ணேகார மெனினும் அமையும். வெட்சித் திணை யென்பது மேற்சூத்திரத்தி னின்றும் அவாய்நிலை எழுவா யாயிற்று.

சூத்திரம்:—4.

மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே.

கருத்து:—இது மேற்கூறிய வெட்சி விளக்கத்திலமையாத போர்த்துவக்கக் குறியாகும் வெட்சிவகை வேறு சில கூறுகின்றது.

பொருள்:—மறங்கடைக் கூட்டிய=மிடல் மலிவால் அடல் விருப்பின் விளைந்த; துடி நிலை=முரசு பராவுதலும்; சிறந்த கொற்றவை நிலையும்=போருக்குச் சிறப்புரிமையுடைய கொற்றவைக் கடவுளைப் பராவுதலும்; அத்திணைப் புறன்=(ஆகிய இவ்வெட்சி வகைகளும்) மேற்குறித்த குறிஞ்சித் திணைக்குப் புறனாகும்.

குறிப்பு:—'மறங்கடைக் கூட்டிய' என அடை கொடுக்கப்பட்டது; இதுவும் 'மறனுடைய மரபாம்' புறத்திணையெனற்கு. இதன்மேல் நடத்தக் கடவது போரேயாதலானும், போர்த் தொடக்கமே வெட்சித் திணையாதலானும், ஆகோளைப் போலவே முரசு பரவுதலும், தொடங்கும் போரில் வெற்றி விளைக்கும்படி கொற்றவை பராவுதலும், போர்த் தொடக்க நிகழ்ச்சிகளாமாதலானும். பின்னைய விரண்டும் முன்னையது போலவே வெட்சித் திணையாய்க் குறிஞ்சிக்குப் புறனா யமையும் பெற்றி இதிற் கூறப்பெற்றது. அகரச்சுட்டு 'புறன்' என்னுங் குறிப்பால் வெட்சிக்கு அகமாக முதற் சூத்திரத்திற் குறித்த குறிஞ்சியையே குறிக்கும். அகரச் சுட்டு வெட்சித் திணையைக் குறிப்பதாகக் கொண்டு, துடி நிலையும் கொற்றவை நிலையும் வெட்சிக்குப் புறனும் என்பர் நச்சினார்க்கினியர். வெட்சியே புறனாதலானும். பொதுவியல் பாடாண் முதலியவற்றைப் புறப்புறமென வகுத்த வெண்பாமாலைமுதலிய பின்னூலாகும். 'துடிநிலை' 'கொற்றவைநிலை'களைப் புறப்

புறமென்றது வெட்சியின் துறைகளாய் அடக்கினராத லானும், இச்சூத்திரத்தின் அகரச்சுட்டு வெட்சிக்கு அக மாகிய குறிஞ்சியையே குறிப்பது தேற்றம்.

முதற் சூத்திரத்தில், வெட்சியைக் கரவில் நிரைகவர் தல் என விளக்கியதால், அதிலமையாமல் வெட்சியின்பாற் பட்டுப் போர்த்துவக்கத்தில் நிகழ்பவற்றுள் இவ்விரு பராவுதலின் இன்றியமையாமைபற்றி இவற்றை விதந்து கூறல் வேண்டப்பட்டது. முன் அகப்பகுதியில் உரிப் பொருள் ஐந்தில் புணர்வும் புணர்தனிமித்தமும் குறிஞ்சி யென விளக்கியபின், அவ்விலக்கணத்தில் அமையாத 'கலந்த பொழுதை'யுங் 'காட்சியை'யும் பிற சிலவற்றை யும் புணர்வேபோல் குறிஞ்சிப்பாற்படுமெனக் குறித்து வேறு சூத்திரம் கூறினது போலவே அக்குறிஞ்சியின் புற மான வெட்சி யிலக்கணத்திலடங்காத துடிநிலை, கொற் றவை நிலைகளும் போர்த்துவக்கமாம் வெட்சியின்பாற்படு மென்பதை இச் சூத்திரத்தால் விளங்க வைத்தார்.

போரற்றபோது முழக்காதிருந்த முரசை யெடுக்குங் கால், பராவி யெடுப்பது பண்டை வழக்காமென்பதை,

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை .......... (புறம், 50)

என்னும் மோசிகீரனர் புறப்பாட்டாலும்,

தூத்துகி லுடுத்துத் தொடியுடைத் தடக்கைக்
கோத்தொழி லிளையர் பூப்பலி கொடுத்துச்
செம்பொன் நெல்லின் செங்கதிர் சூட்டி
வெண்டுகி லிட்ட விசய முரசம்

என்ற பெருங்கதை, உஞ்சைக் காண்டத்து 39-ஆவது காதை, 21-24 வரிகளின் குறிப்பினுனும் அறிக. போர் விரும்பியோர் முதலில் வெற்றி கருதிக் கொற்றவையைப் பராவுதல்,

வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்பஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
..........................................
அமரிளங் குமரியு மருரிளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே.

என்னும் சிலப்பதிகார வேட்டுவ வரி 60-64, 73-74 வரிகளிலும், மற்றும் பழஞ்செய்யுள்களிலும் பரக்கக் காணலாம்.

இனி, 'துடிநிலை' யென்னுமிடத்துக் 'குடிநிலை' என இளம்பூரணர் கொண்ட பாடத்தின் பொருத்தம் புலப்படவில்லை. 'ஆகோள்', 'கொற்றவைநிலை' களைப்போலக் 'குடிநிலை' போர்த் தொடக்கத்திற்கு இன்றியமையாததன்று.

இவ்வியலின் பின் 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்' துறைகளெனக் கூறப்படுவன மூன்று. அவற்றுள், முதலது கொடிநிலை (புறத்திணை சூ. 33) அஃதொழிந்த மற்றிரண்டும் புறத்திணைத் துறைகளாக முன் வேறு சூத்திரங்களில் விளக்கப்பெற்றுள்ளன. அவற்றோடு அவ்வாறு புறத்திணை எதற்கும் துறையாக யாண்டும் விளக்கவோ சுட்டவோ பெறாத கொடிநிலையை வாளாகூட்டி, ஒரு பரிசா யெண்ணுதல் அமைவுடைத்தன்று. புறத்துறைகளாக வேறு சூத்திரங்களில் விளக்கப்படும் இரண்டனொடு பின் சூத்திரத்தில் கொடிநிலை வாளா கூட்டிக் கூறப்பெறுதலால், அவையொப்பக் கொடிநிலையும் புறத்துறையாம் பரிசு பிறிதிடத்தில் சுட்டப்பெறுதல் முறையாகும். அதனாலும், கொடியெடுப்பு போர்த் துவக்கத்தில் நிகழ்வதொன்றாதலானும், கொடிநிலையைக் கொற்றவை நிலையோடு வெட்சி வகையாய் இதில் தொல்காப்பியர் கூறினார் எனக் கொள்ளுதலே சிறக்கும். அக்கொடிநிலைப் பாடம், நாளடைவில் ஏடெழுதுவோரால் குடிநிலையாக மாறி இளம்பூரணர் கண்டிருத்தல் வேண்டும், அப்பாடம் சிறவாமையால் அதனைப் பொருள் பொருந்தப் போர்க்குரிய துடிநிலையாக்கி நச்சினார்க்கினியர் பாடங் கொண்டதாகக் கருதற்கு இடனுளது. அன்றியும் 'துடி' குறைசுட்டும் பாலைநிலப் பறையே யாதலானும், எல்லா நிலத்துக்கும் பொதுவான போர்ப்பெரு முரசுக்குப் பெயரன்றாதலானும், இங்குத் 'துடிநிலை'ப் பாடத்தினும் 'கொடிநிலைப்' பாடமே சிறப்புடைத்தாதல் மலையிலக்காம் ஆகவே, இளம்பூரணரின் 'குடிநிலை' நச்சினார்க்கினியரின் 'துடிநிலை' எனு மிரு பாடங்களையும் கொள்ளாது இதில் 'கொடி நிலையே' பாடமாக் கொள்ளின், பின் 'கடவுள்

வாழ்த்தொடு கண்ணியவரும்' எனத் தொகுத்த மூன்றனுள் மற்றவற்றோடு கொடிநிலையைக் கூட்டிக் கூறிய பெற்றி இனிது விளங்கும்.

போர்க்குமுன் கொடியெடுக்கும் மரபுண்மையை,

புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையும்
கொடு மரமுன் செல்லும் போலும்

என்னும் சிலப்பதிகார வேட்டுவவரி அடிகளாலும் அறிக.

சூத்திரம்:—5.

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வருஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்,
வாடா வள்ளி வயவ ரேத்திய
வோடாக் கழனிலை யுளப்பட, வோடா
வுடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும்,
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்,
ஆரம ரோட்டலும், ஆபெயர்த்துத் தருதலும்,
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலும்,
தலைத்தா ணெடுமொழி தன்னொடு புணர்த்தலும்,
அனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்,

வருதார் தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்,
வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்,
காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்,
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை, வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே.

கருத்து:— நிரை கவரும் வெட்சிக்குரிய படையியங்கரவ முதலிய துறை பதினான்கு முன்கூறி, அஃதல்லாத 'கொடிநிலை', 'கொற்றவைநிலை' போன்ற போர்த் துவக்க வெட்சி வகையின் துறை இருபத்தொன்று இதில் விளக்கப்படுகின்றன.

[வெட்சி வகையுள் சிறந்த ஆகோளையும் அதன் துறை பதினான்கையும் முதல் மூன்று சூத்திரங்களில் விளக்கி, பிறகு போர்த் துவக்கத் திணையாகிய வெட்சியில் சிறந்து வரும் ஆகோளே யன்றிப் பொதுவாக வரும் கொற்றவை நிலை போன்ற வேறு வெட்சிவகை யுண்மை இதன்முன் சூத்திரத்தில் கூறப்பட்டது. அப் பிற வெட்சி வகைகளுக்குரிய துறைகளை இது சுட்டுகின்றது.]

பொருள்:— (1) வெறி யறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட் டயர்த்த காந்தளும் = குறித்த போரில் கொற்றம் கருதிச் 'செறுமிகு சேயா' ன முருகனை முதலில் பரவி, அவனுக்குரிய களியாட்டில் குறியுணர்ந்து கூறும்

சிறப்பினையுடைய விரும்பத்தகும் வாய்ப்புணர்த்தும் வேலன் ஆடும் காந்தளும்.

[இவ் வெட்சிக்கு நேரான குறிஞ்சித்திணையில், தன் களவை மறைத்துத் தனிமையாற்றாது தளரும் தலைவியின் மெலிவு கண்ட தாயர் உண்மையுணரவேண்டிக் குறிசொல்ல விரும்பியழைக்கும் வேலனது வெறியாட்டு அகத்தைச் சார்ந்தது. அதனின் வேறாயது அக்குறிஞ்சிக்குப் புறனான வெட்சியில் வரும் துறையான வேலன் வெறியாட்டு என்பதை விளக்கவே இதுவெறியாட்டு என்றது. வெறியாடும் வேலன் விரும்பிச் சூடும் பூவின் பேரால் காந்தளெனக் குறிக்கப்பட்டது. எனவே, வேலன் வெறியாட்டு குறிஞ்சிக்கும் வெட்சிக்கும் பொதுவாயினும். வெட்சித் துறை வெறியாட்டில் வேலன் காந்தள் சூடி ஆடுவன்; குறிஞ்சித் துறையில் வெறியாடும் வேலன் குறிஞ்சிப்பூச் சூடுதல் மரபு. இதனை மதுரைக் காஞ்சியில் புறத்தில் அகத்துறையாக,

> அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
> அரிக்கூடு இன்னியம் கறங்கநேர் நிறுத்துக்
> கார்மலர்க் குறிஞ்சி சூடி

எனவரும் அடிகளானுமறிக.]

(2, 3, 4) உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி யேந்து புகழ்ப் போந்தை, வேம்பே, ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும் = மாறுகொண்ட இரு வேந்தர் பெரும்படை மறவர் தம்மை மலைவின்றித் தமரும் பிறரும் எளிதில் அறியும் வண்ணம் அடையாளமாகச்

சூடும் சேரரது பனை, பாண்டியரின் வேம்பு, சோழர்தம் ஆத்தி என முறையே புகழோங்கி வருஉம் பூக்களின் பேராலாய துறை மூன்றும்,

இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்,
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண் ஆர் கண்ணிக் கரிகால் வளவன்

எனவரும் பொருநராற்றுப்படை அடிகளில் 'போந்தை' 'வேம்பு' 'ஆர்' எனும் அடையாளப்பூ மூன்றும் அமரில் சூடும் பரிசு குறிக்கப்படுதல் காண்க.

(5) வாடா வள்ளி = வாடுங்கொடி யல்லாத வள்ளி யென்னும் பெயருடைய கூத்தும்;

['வள்ளி' என்பது வாடும் ஒரு கொடிக்கும் ஆடும் ஒருவகைக் கூத்துக்கும் பொதுப் பெயராதலால், ஓடாப் பூட்கை, வாடா வஞ்சி, என்பனபோல, கொடியை நீக்கிக் கூத்தைச் சுட்டும் பொருட்டு இங்கு "வாடா வள்ளி" எனக்கூறப்பட்டது.]

முருகனைப் பரசி வேலனாடுவது காந்தள்; அக்கடவுளைப் பாடிப் பெண்டிர் ஆடும் கூத்து வள்ளி. இது, மகளிர் மக்கட் டலைவனைப் புகழ்ந்து பாடும் உலக்கைப் பாட்டாகிய வள்ளை போலாது, காந்தளைப் போலவே 'கடவுள்

வாழ்த்தொடு கண்ணிய வரும்'. இவ்வியலில் பின்வரும் 'கொடி நிலை காந்தள் வள்ளி என்ற........கடவுள் வாழ்த் தொடு கண்ணிய வருமே' எனும் சூத்திரத்தானும் இவ் வியல்பு விளங்கும்.

பன்மர நீளிடைப் போகி, நன்னகர்
விண்தோய் மாடத்து விளங்குசுவர் உடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை

எனவரும் பெரும்பாணாற்றுப்படை அடிகளில்,விண்ணுற வோங்கி விளங்கும் மதில் சூழ்ந்த மாடங்கள் நிறைந்த ஊர்களிலும் புறநாடுகளிலும் கடவுளைப் பரசிப் பெண்டிர் ஆடும் வள்ளிக் கூத்தின் வளப்பம் குறிக்கப்படுவதறிக.

(6) வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை = வென்றி மறவர் புகழும் புறங்கொடாவீறு குறிக்கப் பொருநர் காலில் அணியும் கழல் நிலையும்;

['கழல்' என்பது போர் வென்றிப் பெருமிதக் குறி யாக மறம்பேணுந் திறலுடையார் காலில்பூணும் ஒரு அணிவகை. இதில் எண்ணும்மை தொக்கது.]

ஓடாத் தானை ஒண்தொழிற் கழற்கால்
செவ்வரை நாடன்......

எனும் பெரும்பாணாற்றுப்படை அடிகளில், மறக்குறியாகத் தானை காலில் கழலணியும் பரிசு கூறப்படுதல் காண்க.

(7) ஓடா உடல்வேந்து உளப்பட அடுக்கிய உன்ன நிலையும் = பின்வாங்காது மலையும் வேந்தன் வெற்றியை உளத்தெண்ணி, சார்த்து வகையால் உன்ன மரத்தில் நிமித்தங் கொள்ளும் உன்ன நிலையும்;

['உடல்வேந்து' என்பது பொருபடை என்பது போன்றதோர் வினைத்தொகை; உடலும் வேந்து என விரியும். உடலுதல் = சினந்து பொருதல்; பகைத்தலு மாம்.]

உன்னம் = சிற்றிலையும் பொற்பூவுமுள்ளதோர் மர வகை பண்டைத் தமிழ் மறவர் போர்க்கெழுமுன் உன்ன மரக் கோட்டில் மாலைகளை அடுக்கி நிமித்தங்கொள்ளுவது வழக்காறு. [இனி, குறிபார்ப்பவர் தம் மன்னற்கு ஆக்கம் எனின் அம்மரக்கோடு தழைவதும், கேடுளதேல் அழிவ தும் ஆகிய ஒரு கடவுட் டன்மையுண்டென்றும், அதனல் பொருநர் போருக்குமுன் அம்மரத்தைப் பரசிக் குறி கேட்பரென்றும், அவ்வாறு கேட்டலே உன்ன நிலையென் றும் உரைப்பாருமுளர்.]

''முன்னங் குழையவும் கோடெலா மொய்தளிரின்
றுன்னங் குழையொலித் தேர்ங்குவாய் — மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து''

எனும் பழம்பாட்டு இவ்வுன்னநிலைத் துறையை விளக்குத லறிக.

(8) மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் = மாயோன் விரும்பும் நிலைத்த

பெரிய சிறப்பினையுடைய கெடாத உயர்ந்த புகழினைக் குறிக்கும் காயாமலரால் நிமித்தங்கொள்ளும் பூவை நிலை யென்னும் துறையும்;

உன்ன மரக்கேட்டால் நிமித்தங் கொள்ளுவது போலத், தானைமறவர் காயம்பூவால் நிமித்தங்கொள்ளும் ஒரு பழவழக்குண்டு.

பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம் — மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்.

என்னும் வெண்பாமாலைப் பாட்டாலும் அது விளக்க மாகும்.

[பிற்காலத்தில், 'பூவைநிலை' சிறப்பாக மாயோனையும் பொது வகையில் பிற கடவுளரையும் ஒரு தலைமகனுக்கு ஒப்பிடும் துறையாகக் கருதப்பட்டு வருகிறது. இப்பொரு ளுக்கு,

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்

எனும் நக்கீரர் புறப்பாட்டை மேற்கோளாகக் கொள் ளுவர். இதில் பாண்டியன் நன்மாறனைக் கண்ணுதற்கட வுள், பலராமன், திருமால், செவ்வேள், என்னும் நான்கு கடவுளர்க்கும் ஒப்புக் காட்டிப் புகழ்வதால், இப்பாட்டு பூவை நிலைத் துறைக்குச் சிறந்த பாட்டு எனக் கொள்ளப்

படுகிறது. சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் வரும் உள்வரி 3-உம் முறையே பாண்டியன், சோழன், சேரன் ஆகிய மூவேந்தரையும் தனித்தனியே திருமாலுக்கு ஒப்புக் கூறுதலால், அவையும் பூவை நிலையாம் என்பர்.]

(9) ஆரமர் ஓட்டலும் = நிரை கவர்ந்த படை மறவரைக் கரந்தைப் பொருநர் வென்று புறம்கொடுத்தோடச் செய்தலும்;

ஈண்டும் உம்மை தொக்கது. [இதில் 'அமர்' என்பது அமர் புரிபவருக்கு ஆகுபெயர்; 'வட வாரியரொடு வண்டமிழ் மயக்கத்து' எனும் காட்சிக் காதை யடியினும், 'வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம், தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் என' என்னும் கால்கோட் காதையடியிலும், 'தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானம்' எனவரும் குடபுலவியனார் புறப்பாட்டடியிலும், 'கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்து' எனும் கபிலரின் 7-ஆம் பத்தின் 3-ஆம் பாட்டு அடியிலும், 'தமிழ்' என்பது தமிழ்ப் படைக்கு ஆகுபெயராய் நிற்பதுபோல, ஈண்டு அமரென்பது திணைப் பொருநரைச் சுட்டுதல் வெளிப்படை.

ஆரமர் ஓட்டல் எனப் பொதுப்பட நிற்றலால், நிரை கொண்டார் மீட்கவரும் மறவரை ஓட்டுதலும், மீட்பவர் நிரை கவர்ந்தவரை வென்றோட்டலு மாகிய இரண்டனையும் இத்தொடர் குறிக்குமெனப் பிறர் உரை கூறினர். நிரை கொள்ளும் வெட்சிமறவர் மீட்போரை வென்றழிக்கும் பரிசெல்லாம் முன் வெட்சிவகை ஆகோளின் துறைகளுள் அடங்கக் கூறுதலானும், அதை விலக்கிக் கரந்தை

முதலிய பிறவகை வெட்சித் துறைகளே இதிற்கூறவேண்டுதலானும்' இதையடுத்த துறை கவரப்பட்ட நிரையை மீட்டுத் தருதலாதலின் கொண்டோரை வென்றன்றி ஆபெயர்த்துத் தருதல் கூடாமையானும், ஈண்டு 'ஆரமர் ஓட்டல்' ஆகோள் மறவர் வென்றி குறியாது அவரை வென்றோட்டும் கரந்தைப் பொருநரையே குறிப்ப தொருதலை. அன்றியும், 'ஆரமரோட்டல்' முதல் 'நெடுமொழி தன்னொடு புணர்த்தல்' வரை குறிக்கப்படும் துறையனைத்தும் 'அனைக்குரி மரபினது கரந்தை' எனத் தெளிக்கப்படுதலானும் இது கரந்தைத் துறையேயாம்.]

(10) ஆபெயர்த்துத் தருதலும் = பகைவர் கவர்ந்த நிரையைக் காவலர் கரந்தை குடிப் பொருது மீட்டுத் தருதலும்;

[அமரோட்டலும் ஆபெயர்த்தலும் நிரைமீட்கும் கரந்தைப் பொருநர் வினையாதலானும், கவர்ந்த மறவரை வென்று ஓட்டினலொழிய நிரை மீட்டல் கூடாமையானும் இவையிரண்டும் காரண காரிய முறையில் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிகழும் பெற்றியவாகும்.

> கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
> பல்லான் இனநிரை தழீஇய வில்லோர்க்
> கொடுஞ்சிறைக் குரூஇப்பருந் தார்ப்பத்
> தடிந்துமாறு பெயர்த்தஇக் கருங்கை வாளே.

எனவரும் ஔவையார் புறப்பாட்டும்,

> ......................................கன்றொடு
> கறவைதந்து பகைவர் ஓட்டிய நெடுந்தகை

எனும் 264-ஆம் புறப்பாட்டும், ஆரமரோட்டல் ஆபெயர்த்துத் தருதல் எனு மிரு துறைகளையும் ஒருபரிசாய் ஒருங்கு கூறுதல் காண்க. 'வளரத் துடியினும்' எனும் வடமோதங் கிழார் புறப்பாட்டிலும் இவ்விரு துறைகளும் ஒருங்கு வருதல் அறிக.]

(11) சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலும் = மீட்சி மறவர் தம்வேந்தர் பெருமையை மீக்கூறுதலும்;

[இதுவும் கரந்தை வகையாதலால், மீட்போர் தம் வேந்தனை மீக்கூறுதலையே குறிப்பதாகும்.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்" —குறள் 771.

"பறைநிறை கொல்யானை பஞ்சவர்க்குப் பாங்காய்
முறைமுறையின் உய்யாதார் தேயம்-முறைமுறையின்
ஆன்போய் அறிவையர்போய் ஆடவர்போய் யாயீன்ற
ஈன்போய் உறையும் இடம்."
—முத்தொள்ளாயிரத்திரட்டு செய் 9.

இவ்விரண்டு பாட்டுக்களிலும், மறவர் தம்வேந்தன் சிறப்புக் கூறுதல் காண்க.

(12) தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் = தத்தம் தலைமைத்தாம் முயற்சியின் திறல் குறித்துத் தற்புகழ்ந்து வஞ்சினம் கூறுதலும்;

[நெடுமொழி = தற்புகழ்ச்சி; தருக்கிய வஞ்சினமு மாம். 'மடங்கலிற் சினைஇ' எனும் பூதப்பாண்டியன் (71 ஆம்) புறப்பாட்டும், 'நகுதக்கனரே' எனும் நெடுஞ் செழியன் (புறம். 72) பாட்டும், 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி' எனும் நலங்கிள்ளி (புறம் 73) பாட்டும், ஆக மூன்றிலும் வேந்தன் தற்புகழ்ந்து வஞ்சினம் கூறுதல் விளக்கப்படுகின்றது. இனி, 'கந்துமுனிந் துயிர்க்கும்' எனும் மூலங்கிழார் புறப்பாட்டில்,

..................................வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பில்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடு மொழி...

எனவரும் அடிகளில், பொருநர் போர்க்குமுன் ஊர்க்குள் நெடுமொழி கூறும் வழக்குண்மை சுட்டல் அறிக ]

(13) அனைக்குரி மரபினது கரந்தை, அன்றியும் = அத் தன்மைக்குரிய முறையால் வரும் நிரைமீட்சித் துறை வகை யெல்லாமும் கரந்தை வகையாகும், அல்லாமலும்;

[அனைத்துச் சொல் அத்தன்மைத்து எனப் பொருள் படுதல், 'அனைத்தாகப் புக்கியோய்' எனும் 78-ஆம் கலிப் பாட்டில் வருதலாலறிக அனைத்துக்கு என நிற்கற்பாலது அனைக்கு எனக் குறுகியது, செய்யுளிசை நோக்கி; மனத் துக்கு என்பது மனக்கு எனவும், போருளதனைத்தும் என்பது போருளதனையும் எனவும், கம்பர் பாட்டுக்களில் இசை நோக்கிக் குறுகி வருதலும் காண்க.

இனி, ஆரமரோட்டல் முதல் கூறிய நான்கும் நிரை மீட்சிக்கே வுரியவாதலின், அவற்றைக் 'கரந்தை' என ஒருங்கு தொகுத்து, இதிற் கூறும் பிற வெட்சித் துறைகளினின்றும் வேறு பிரித்ததன் குறிப்பு 'அன்றியும்' எனுஞ் சொல்லிடைப்பெய்து விளக்கப்பட்டது. பின்னைய பிள்ளை நிலை இரண்டும் பிள்ளையாட்டு ஒன்றும் ஆக மூன்றும் கரந்தையேயன்றி பிறவற்றிற்கும் ஏற்குமாதலின், அவை கரந்தைத் தொகுதியிற் கூட்டப்படாமல் வேறு பிரித்துக் கூறப்பட்டன. இதில் 'கரந்தை' என்பது தனித் துறையாகாமல் நிறைமீட்சித் துறை பலவற்றிற்குப் பொதுப் பெயராய்க் குறிக்கப்பட்டது. கரந்தை வெட்சித் திணை வகையாய்ப் பல துறைகளைத் தன்னுள் அடக்கி நிற்பதல்லாமல் தனித்தொரு துறையாகாமையால், அதற்குத் தனித்து மேற்கோட்செய்யுள் கூறுமாறில்லை. வெட்சியொடு கரந்தையை மயங்கவைக்கும் நச்சினார்க்கினியரும், கரந்தை வெட்சித்திணையாகாது எனக் கூறுகின்றார். 'கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலாற் பேராதலின், **வெட்சித்திணைபோல ஒழுக்கம் அன்று**' என்பது இச்சூத்திரத்தின் கீழ் அவர் தரும் குறிப்பாகும். மேலும், கரந்தையை ஒரு தனித்துறையாய்க் கொள்ளின், இங்கு மொத்தம் எழுமூன்று துறைத்தே எனக் கூறியதற்கு மாறாகத் துறையெண் 22 ஆகும். அது கூடாமையால், இதில் கரந்தையைத் தனித்துறையாய்க் கொள்ளாமல் நிரைமீட்சித் துறைகளுக்குப் பொதுப் பெயராகவே கொள்ள வேண்டுமென்பது தேற்றம். எனவே, இதனை ஒரு தனித்துறையாக்குதல் பொருந்தாமை வெளிப்படை.]

(14) வருதார் தாங்கல்=எதிர்த்துவரும் படையின் முன்னணியைத் தனித்து நின்று தடுத்தல்;

[தார் என்பது படையணியைக் குறிக்கும். இதுவும் கரந்தை வகையேயாம்.

"ஒன்னார் முன்னிலை முறுக்கிப் பின்னின்று
நிரையொடு வருஉம் என்னை"

எனும் 262-ஆம்புறப்பாட்டில் இத்துறைவிளக்கம்காண்க. இது எதிருன்றிப் பொரும் தும்பைத்திணைத் துறையாகாமல் வெட்சித்துறைக்குரியது என்பது 'பின்னின்று நிரையொடு வருஉம்' எனும் குறிப்பால் தேறப்படும்.]

(15) வாள் வாய்த்துக் கவிழ்தல்=பகைவர்வாளால் பட்டு வீழ்தல்;

"ஆளும் குரிசில் உவகைக் களவென்னும்
கேளின்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து."

எனும் பெரும்பொருள் விளக்கப் பழம்பாட்டில், வாட் போரில் வீழ்ந்தான் பெருமை கூறப்படுதல் காண்க.

என்று இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்=(வருதார் தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தல்) என இருதிறப்படச் சுட்டப்பட்ட பிள்ளை நிலைத் துறைகளும்;

[மேலே சிறப்பாகக் கரந்தை வகை நான்கு கூறி அவற்றைத் தொகுத்துப் பொதுவாகக் கரந்தையெனக்

கூறியது போல, இங்குத் தார் தாங்கல், கவிழ்தல் எனும் இருவகைத் துறைகளும் 'பிள்ளைநிலை' என்பதன் வகைகளாம் என்பதை விளக்கி இவ்விரண்டின் பின் 'இருவகைப் பட்ட பிள்ளைநிலையும்' என்று அவற்றின் தொகையும் பொதுப் பெயரும் கூறப்பட்டன. அஃதன்றிப் பிள்ளைநிலை எனத் தனித்தொரு துறை யின்மையால், துறை எழுமூன்றில் இது தனித்தெண் பெறாது.]

(16) வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கருளிய பிள்ளையாட்டும் = (ஆகோளல்லாத வெட்சிப் போரில்) வாளால் பொருது வென்று வந்தவனை உவந்து முரசொலிக்க நாட்டை அவனுக்குப் பரிசிலாய் அளிக்கும் பிள்ளையாட்டென்னும் துறையும்;

[தனக்கு வெற்றி தந்த வீரனை வேந்தன் நாடுதவிப் பாராட்டுதல் நன்றிமறவா மறக்கடனாகும். இதற்கு, வாட்போரில் இறந்த மறவனுக்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டென்று இளம்பூரணர் உரை கூறுவர். இதில் 'எழுந்தோனை' என்றதனால் இறவாமை தெளியப்படும்; இறந்தானை எழுந்தோனென்பது மரபன்று. அன்றியும் போரில் இறந்தவர்க்குத் துறக்க நாடு அருளுபவர் அவனைக் கொன்ற பகைவராவரன்றி இறந்த பொருநனின் வேந்தன் ஆகான். புறந்தராது பொருதுகளத்துயிர் கொடுத்தவனைத் தமரும் பகைவரும் பாராட்டிப் பரிந்திரங்குவர். அவன் இறந்தமைக்கு மகிழ்வது நன்மக்களியல்பன்று. ஈண்டு 'மகிழ்ந்து நாடவர்க் கருளிய' பரிசு கூறுதலானும், அஃதுரையன்மை ஒருதலையாம்.

''வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்தலை யொள்வாட் புதல்வர்க்கண் —டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தான் கருதார்க்கு
வான்கெழு நாடு வர.''

என வரும் பழம் பாட்டும் இளம்பூரணர் உரையை மறுத்துப் பகைவர் வாளுடுபெற வென்றுவந்தவர்க்குப் பரிசிலாய் மன்னன் மண்ணொடு கொடுக்கும் பரிசே குறிப்பதறிக.]

(16 முதல் 21) காட்சி = பொருது வீழ்ந்தார்க்கு நடுதற்பொருட்டுத் தக்கதோர் கல்லைத் தேர்ந்து காணல்; கால்கோள் = தேர்ந்து கண்ட கல்லைக் கொணர்தல்; நீர்ப்படை = விழாவொடு அக்கல்லைத் தூய நீரால் குளிப்பித்தல்; நடுதல் = பிறகு அதனை எடுத்து நடுதல்; சீர்த்தகு மரபிற் பெரும்படை = சிறந்தமுறையில் நாட்டியகல்லுக்கு மிக்க பலியுணவு படைத்தல்; வாழ்த்தல் = அவ்வாறு கடவுளேற்றிப் பலியூட்டிய அக்கல்லைப் பழிச்சுதல்; என்று இரு மூன்று வகையில் கல்லொடு புணர = இவ்வாறு அறு திறப்படும் நடுகல் துறைகளோடு சேர்ந்து;

[இதில் புணர்ந்து என்னும் எச்சம் புணர என நின்றது. அன்றி, நின்றாங்கே கொண்டு, சேர எனப்பொருள் கொள்ளினும் அமையும்.]

இவையாறும் 'நடுகல்' வகைகளாய் விழவொடு வரூஉம் துறைகளாதலின், இவற்றைக் கல்லொடு என ஒடுக்கொடுத்துப் பிரித்து, 'இரு மூன்று வகையிற் கல்லொடுபுணர' என எண் வேறு கொடுத்துத் தொகுக்கப்பட்டன.

போரில் புகழொடு பட்டானைப் பாராட்டிக் கல் நட்டு விழவொடு பழிச்சுதல் பண்டைத் தமிழர் வழக்காகும். 'பெருங்களிற்றடியில்' எனத் தொடங்கும் புறப்பாட்டில் (263).

'.......................................
தொழாதனை கழிதல் ஓம்புதி.........
வில் லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே'

என வருவதால், அமரில் பட்ட பொருநர்க்குத் தமர் கல் நட்டு வழிபடும் பழைய மரபு விளங்கும்.

''பரலுடை மருங்கில் பதுக்கை சேர்த்தி
மரல்வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்''

எனும் 264-ஆம் புறப்பாட்டிலும் இறந்த மறவனுக்குப் பெயர் பொறித்துக் கல்நாட்டும் பண்டை வழக்கம் குறிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே = கூறப்பட்ட ஆகோள் அல்லாத வெட்சிவகைத் துறைகள் இருபத்தொன்று ஆகும்.

[இதில் ஏகாரம் அசை. துறை ஒவ்வொன்றனோடும் வரும் உம்மை எண்ணும்மை ]

சூத்திரம்:—6.

வஞ்சி தானே முல்லையது புறனே.

கருத்து:—இது, வஞ்சிப்புறத்திணை முல்லை என்னும் அகத்திணைக்குப் புறனும், என்கின்றது.

பொருள்:—வெளிப்படை.

குறிப்பு:—முதலேகாரம்பிரிநிலை, புறத்திணை ஏழனுள் வஞ்சியைப் பிரித்தலின். ஈற்றேகாரம் இசைநிறை; அசை எனினும் அமையும்.

(1) அகத்தில் தலைவியைப்பிரிந்து தலைவன்பொருள் அல்லது வினைமேற் செல்வதுபோல, வஞ்சித் தலைவனும் தலைவியைப் பிரிந்து பகைமேற் செல்லுதலானும், (2) முல்லையிலும் வஞ்சியிலும் தலைவரைப் பிரிந்த தலைவியர் தனிமை தாங்காது வருந்திக் கற்பறம் பேணி யிருப்பது பொது ஒழுக்கமாதலானும், (3) முல்லைத் தலைவர் தம் புலம்புறு தலைவியரைப் பிரிந்து செலவு மேற்கொள்வது மனையறம் பேணும் கடனிறுக்கும் பொருட்டாதல் போலவே, வஞ்சித் தலைவர் மேற்செலவும் ஆண்மையறம் பேணும் பொருட்டாதலானும், வஞ்சி முல்லைக்குப் புற னயிற்று.

சூத்திரம்:—7.

எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்று.

கருத்து:—இது, முல்லைக்குப் புறன் என்ற வஞ்சித் திணையின் இயல்பை விளக்குகின்றது.

பொருள்:—எஞ்சா மண்ணசை வேந்தனை = தணியாத பிறர்மண் ஆசை யுடைய ஒருவேந்தனை; வேந்தன் = (அற முறமுடைய) பிறிதொரு மன்னன்; அஞ்சு தகத்தலைச் சென்று = அவன் வஞ்ச நெஞ்சம் அஞ்சுமாறு தானே (படையொடு) மேற்சென்று; அடல் குறித்தன்று = வென்றடக்குதலைச் சுட்டும் அளவிற்று வஞ்சித்திணை.

குறிப்பு:—இச்சூத்திரத்திற்கு முன்னுரைகாரர் வேறு வகையாய்ப் பொருள் கூறுவர். அவர் உரை வருமாறு:— 'எஞ்சா மண்ணசை = இருபெரு வேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே, அஞ்சுதகத் தலைச் சென்று = ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதல் உண்டாக அந்நாட்டிடத்தே சென்று, வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்று = ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றம் கோடல் குறித்தல் மாத்திரைத்து வஞ்சித்திணை என்றவாறு.'

அதற்குமேல் அவர் தரும் சிறப்புரையாவது:— ''ஒருவன் மண்ணசையானே மேற் சென்றால், அவனும் அம்மண்ணழியாமல் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசையால் மேற்சேறல் உளதாகலின், அவ்விருவரும் வஞ்சி வேந்தர் ஆவர் என்றுணர்க;''

இருவரை, சூத்திரச் சொல்லமைதிக்கு ஏற்காததோடு, வஞ்சியியல்பை இழிதகுபழிதரும்பிழையொழுக்க

மாகவும் பண்ணுகிறது. எஞ்சா மண்ணசை என்ற தொடர் அதை அடுத்து நிற்கும் வேந்தனை என்னும் இரண்டாம் வேற்றுமைச் சொல்லுக்கு நேரே அடையா யமைவது வெளிப்படை. அவ்வளவிற் கொள்ளாமல் அத் தொடரைப் பின் வரும் வேந்தன் என்னும் எழுவாய்ச் சொல்லுக்கும் ஏற்றி, அவன் படையெடுத்துச் செல்லு தற்குக் காரணமே மற்றவன் மண்ணிடத்து அவனுக் குள்ள வேட்கையாகுமென இவ்வுரைகாரர் விளக்குகின் றார். மன்னர் போர்கருதிப் படையெடுப்பதன் நோக்க மெல்லாம் பிறர்மண் கவரும் வேட்கைதான் எனும் கொள்கை நாகரிக உலகம் மிக்கும் போரறமழித்துப் பழிக்கிடனுக்கும் தக்ககாரணமின்றித் தவறற்ற மெலியா ரின் நாட்டை வலியார் மண் வேட்கையாலே படையெடுத் துச் சென்று வென்று கவர்தலே வஞ்சித்திணை எனக் கூறுவது உயர்ந்த பழந் தமிழ் ஒழுக்கத்தைப் பழிக்கத் தகும் பிழையாக்கி முடிப்பதாகும். வலிச்செருக்கால் மெலியர் நாட்டைப் பறிப்பது உலகியலில் உண்டேனும், அதனை வெறுத்து விலக்குவதை விட்டு வேத்தியல் அற மாக்கி வஞ்சியொழுக்கமெனச் சிறப்பித்து ஒரு திணை வகையாக்குவது, 'அறனறிந்து மூத்த அறிவுடைய' தொல் காப்பியர் நூற்பெருமைக் கிழுக்காகும். அஃது அவர் கருத் தன்மை அவர் சூத்திரச் சொல்லமைப்பே தெற்றெனத் தெளிக்கின்றது. இச்சூத்திரத்தில் 'எஞ்சா மண்ணசை யாலிரு வேந்தர்' என்னமல் 'எஞ்சா மண்ணசை வேந்தனை' என்றமைத்ததால் முன்னுரைகாரர் பொருள் தொல்காப்பியர் கருத்தன்று என்பது தேற்றமாகும்.

படையொடு பிறர்மேற் செல்லுதற்கு மண்ணசையே நோக்கமாயின் அது உயரொழுக்கமாகாமல் 'துன்பம்

தவா அதுமேன்மேல்வரும்' இழுக்கமாகும். இனி, மண்வேட்கையால் தன் மெலிவு நோக்கியிருக்கும் பகைவனை வென்றடக்க முயலாமல் வாளாவிருப்பது ஆண்மையற மழிப்பதாகும். அதனால் தன்னாட்டின்மேல் தணியாத வேட்கையுடைய அறமற்ற அயல் மன்னன் வலிபெருக்கித்தன்மேல் வருமுன்னமே தக்க படையொடு தான்சென்று அவனைப் பொருதடக்குவது அறிவும் அறனுமாகும். அது செய்யானை எஞ்சா மண்ணசையுடையான் வஞ்சத்தால் வலி மிகவளர்த்து வாய்த்தபோது வந்து தடிவனுகையால், காலத்தே சென்று அத்தகைய ஆசையுடையானை வென்றடக்கி ஆண்மையற மாற்றுதல் போற்றத்தகும் ஒழுக்கமாகும். அவ்வொழுக்கமே பழந்தமிழர் கையாண்ட வஞ்சித்திணை. அதனையே இச்சூத்திரம் விளக்குகிறது. இளம்பூரணரும் அதுவே தொல்காப்பியர் கருத்தாகக் கொண்டு இச்சூத்திரத்திற்கு 'ஒழியாத மண்ணைநச்சுதலையுடைய வேந்தனை வேறொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தது' என்று நேரிய உரை கூறுகின்றார்.

இச் செம்பொருள் சூத்திரச் சொற்கிடையால் தெளிவாகவும் அதைக் கொள்ளாமல், 'எஞ்சா மண்ணசையைப் படையெடுத்துச் செல்லும் வஞ்சி வேந்தனுக்கு ஏற்றிக் கூறினது', அறங்கருதா மறம் பேணி அயலார் மண்ணிலாசை வைத்துப் போர் மேற்கொள்ளுவதை போற்றத்தகும் மன்னர் ஒழுக்கமெனப் பேசும் ஒரு சில வடநூற் கூற்றைப் பண்டைத் தமிழரின் இழுக்கறு போரற ஒழுக்கம் விளக்கும் இப்புறத்திணைச் சூத்திரக் கருத்தாகக் காட்ட முயலும் விருப்பின் விளைவாகும். இவ்

விருப்புக் காரணமாக இடைக்கால உரைகாரர் படைத்துக் கூறும் குறிப்புரையில் ஒவ்வாத முரண்பாடுகள் மலிவதும் இயல்பாகும். 'அல்லதனை நல்லதெனச் சொல்ல வரும் அல்லல்களுக் கெல்லையில்லை' என்பதன் உண்மையை இவர் சிறப்புரைச் செய்திகள் வலியுறுத்துகின்றன. தணியாத மண்ணசையால் மெலியார் நாட்டை வலியார் வெளவுவது மன்னறமென்னும் ஆரியக் கொள்கையே வஞ்சித் திணையெனக் காட்டப் புகுந்து, அதை நாட்ட எழுதும் சிறப்புரையில்எழுகின்ற இடர்ப்பாடுகளைக் கருதுகின்றிலர்.

1. முதலில், படையொடு செல்லும் வேந்தனை மெலியார் மண்ணில் எஞ்சாநசையால் வஞ்சி சூடினான் எனக் கூறி அவனைத் தவறுடையனாக்குங் குற்றம் மேலே குறிக்கப்பட்டது.

2. இனி, 'எஞ்சா மண்ணசை' எனும் தொடரை நின்றாங்கே அதை அடுத்த வேந்தனை எனும் செயப்படு பொருளாகிய இரண்டாம் வேற்றுமைச் சொல்லுக்காக்காமல், அதைத் தாண்டிப் பின்வரும் வேந்தன் எனும் எழுவாய்ச் சொல்லுக்கு அடையாக்கிப் பிறர் மண்ணுசையே போரற நோக்கம் எனும் ஆரியக்கொள்கையைப் புகுத்தலாயினர். எனின், மூலத்தில் எஞ்சா மண்ணசைவேந்தனை எனச் சொற்றொடர் நிற்பதால், மண்ணசையைப் படை எடுக்கப்படும் வேந்தனுக்கு அறவேயில்லாமல் விலக்குமாறில்லை. வலிதிற் றம் நாட்டை வெளவவரும் பிறவேந்தனைத் தன் மண் காக்க அதற்குரியான் எதிர்ப்பது இயலறமாகவும்,அவ்வாறு எதிர்க்குப் அவன் தற்காப்புமுயற்சியும்

மண்ணசை காரணமான வஞ்சியாகும் என இவ்வுரை காரர் தம் சிறப்புரையில் வற்புறுத்தினர். இதிலெழும் முரண்பாடுகளை அவர் கருதுகிலர். படையொடு வந்த பகை வேந்தனை எதிர்த்துத் தன் மண் காப்பது அற மென்று கூறும் இவரே அத்தற்காப்புப் போர் முயற்சியும் மண்ணசையால் மேற்சேரும் வஞ்சியாம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? தன்னொடு கவரவரும் பகைவனை எதிர்ப்பது அறக்கடனாகுமன்றி மண்ணாசைக் குற்றமாகா தன்றே. பிறர்மண் வேட்கையைக் குற்றமெனக் கொள் ளாமல் மன்னருக்கு நல்லறமென்று சொல்லப் புகுவதால், இவ்வாறு வந்த பகைவனை எதிர்க்கும் தற்காப்பறப்போ ரையும் மண்ணசைப் போரென முறைமாறிக் கூறநேர்ந் தது.

3. மேலும் தன் நாடு கவர வந்தானைத் தற்காப்பின் பொருட்டுத் தகைப்பதை வஞ்சியெனக் கூறினதுமன்றி, மேற் சென்றானையும் எதிரூன்றினானையும் ஒருசேர வஞ்சித் தலைவராக்கினர். இது, 'வஞ்சி—மேற்செலவு' எனத் துணிந்த தமிழ் இலக்கணத்தையே தடுமாறச் செய்யுந் தவறாகும். வலிகருதி வந்த மாற்றானை எதிர்த்து மலைதல் வஞ்சியாகாமல் வேறு தும்பைத்திணையாகும் எனத்தொல் காப்பியர் தெளியக் கூறுவதற்கு இவர் கொள்கைமுழுதும் முரணாகும்.

**தும்பை தானே**
**மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப.**

இது தொல்காப்பியர் தரும் தும்பைத்திணை விளக்கம். எனவே, 'பிறர் நாட்டின்மேற் செல்லுதலே வஞ்சித்திணை யென்பதும், அப்படி வரும் மாற்றானை எதிர்சென்று மலை தலே தும்பைத்திணை யென்பதும் தமிழர் புறத்திணை மர புகள்' என்று தொல்காப்பியர் ஐயமற விளக்கியுள்ளார். இத்தகைய போரறச் சிறப்பு முறையைப் போக்கிப் பொருந்தா ஆரிய முறைகளைப் புகுத்திப் புத்துரை கூற முயன்றதால் வந்த முரண்பாடுகள் இவை

இன்னும், இத் தும்பைவிளக்கம் வஞ்சியியல்பைத் தெளிப்பதற்கு ஒருவாறு உதவுகின்றது. மேற்செல்லும் வஞ்சி வேந்தனுக்கு வஞ்சித்திணைச் சூத்திரத்தில் அடை எதுவும் சுட்டப்படவில்லை. அதற்கு மாறாக மண்ணசை யுடைமை படையெடுக்கப்படும்வேந்தனுக்கு அடையாகக் குறிக்கப்பட்டது. அடுத்த தும்பைத்திணைச் சூத்திரத்தில் மேல் வந்த வேந்தன்படைஎடுப்புக்கு மண்ணசைநோக்கம் சிறிதும் சுட்டப்படாததோடு, படை யெடுக்கப்படும் மண்ணசைவேந்தனைப் பொருதடக்கும் வலியுடைமை ஒன்றே தக்க காரணமெனவும் வலியுறுத்தப்படுகின்றது மண்ணசையால் வந்த வேந்தன் என்னுது, வாளா 'வந்த வேந்தன்' என முன் கூறியதனேடமையாது, 'மைந்து பொருளாக வந்த வேந்தனை' என்று தும்பைச் சூத்திரம் தெளிப்பதினுல், வஞ்சி வேந்தனின் பழுதற்ற போர் நோக்கம், பிறர்மண்ணசையன்று, ''அடுத்திருந்து மாணுது செய்வான் பகை, கொடுத்தும் கொளல் வேண்டு'' தலின், மண்ணசையுடைய வேந்தன் ஒருவனைப் பொருதடக்கும் வலியேயாம் என்பது விளக்கமாகும். முன் னுரைகாரர் கூறுமாறு மேற்செலவுக்கு மண்ணசையைக் காரணமாக்குவது தொல்காப்பியர் கருத்தாமேல், வஞ்சிச் சூத்திரத்தில் மேற்செல்லும் வேந்தனுக்கு மண்ணசை

கூறாததோடு, மீண்டும் தும்பைத்திணைச் சூத்திரத்திலும் அவனுக்கு மண்ணமைசை சுட்டாது 'மைந்து பொருளாக' என வேறு ஒரு குறிப்புக் கூறியிராரன்றே. இவ்விரு சூத்திரங்களிலும் தொல்காப்பியர் மேற்செல்லும் வேந்தனுக்கு மண்ணமைசை நோக்கை விலக்கிப் படையெடுக்கப் படுபவனுக்கே அக்குற்றமுடைமை சுட்டியிருப்பதால், மண்ணசையை மன்னர் போரற நோக்கம் ஆக்குவதை மறுத்து வெறுக்கும் தமிழ் மரபே வலியுறுகிறது.

சூத்திரம்:—8.

இயங்கு படையரவம், எரிபரந் தெடுத்தல்,
வயங்க லெய்திய பெருமை யானும்,
கொடுத்த லெய்திய கொடைமை யானும்,
அடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்,
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்,
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்,
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் தாங்கிய பெருமை யானும்,
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்,
வென்றோர் விளக்கமும், தோற்றோர் தேய்வும்,
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்,
அழிபடை தட்டோர் தழிஞ்சி தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே

கருத்து:— இது வஞ்சித்திணையின் துறைவகையும் அவற்றின் தொகையும் கூறுகின்றது.

பொருள்:— இயங்குபடை யரவம்=போர்மேற் செல்லும் தானையின் ஆர்ப்பும்;

உரவுமண் சுமந்த அரவுத்தலை பனிப்பப்
பொருநர் ஆர்ப்பொடு முரசெழுந் தொலிப்ப
இரவிடங் கெடுத்த நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரயத் தானை
—சிலப்,—கால்கோள். 34-37

ஏற்றுரி போர்த்த வள்வார் இடிமுர சறைந்த பின்றைக்
காற்றெறி கடலிற் சங்கு முழவமு முரசு மார்ப்பக்
கூற்றுடன் றனைய தானை கொழுநில நெளிய வீண்டிப்
பாற்கடற் பரப்பின் வெள்வாட் சுடரொளி பரந்ததன்றே
—சிந்தா.—மண்மகள் இலம். 51

[முன் வெட்சித்திணைத் துறையாய்க் குறிக்கப்பட்ட நிரை கவர விரையும் படை யியங்கரவத்தின் வேறாய், போர்மேற் செல்லும் தானையின் ஆரவாரம் இதில் கூறப் பட்டது. வெட்சியி லாகோள் களவில் நிகழ்வதாகலின், ஆர்த்துமேற் செலவதற்கேற்புடைத்தன்று; அதனாலாங்கு வேந்துவிடு முனைஞரின் கரவியக்கத் தியலரவங் குறிக்கப் படை யியங்கரவம் எனப்பட்டது. வஞ்சித்தானை வெளிப் பட விருதுடன் ஆர்த்துப் போர்க்கெழுமாதலின் படை அரவமெனவும், அது போரார்ப்பின் வேறாதலின் இயங்கு படையரவ மெனவும் விளக்கியசெவ்வி வியத்தற்குரித்து.]

எரிபரந்தெடுத்தல் = வழியில் பகைப்புலத்தில் தம் செலவைத் தகையும் ஊர்களை நெருப்பிட் டழித்தலும்;

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட எரி பரப்பி
ஆலங்கானத் தஞ்சுவர விறுத்
தரசுபட அமருழக்கி
— மதுரைக் காஞ்சி 125-128

யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
.................................................
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கின் உருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
..................................நின்
பகைவர் நாடும் கண்டுவந் திசினே. —பதிற்று. 15

வயங்கல் எய்திய பெருமையானும் = மேற்செல்வோர் வினை விறல்களால் விளங்கிய சிறப்பும்;

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா முன்னை திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்கு நோயெல்லாம் தானா யினனே. —புறம். 276

கொடுத்த லெய்திய கொடைமையானும் = தானை மறவர்க்குத் தக்காங்குப் பண்பறிந்து வரிசையின் வழங்கும் கொடைப் பெருமையும்;

.................................................
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை

நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே. —புறம். 287

'இம்மைச் செய்தது' என்னும் முடமோசியார் புறப்பாட்டு (134)ம் அதுவே.

.......................................................
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
பதிற்று.—3ஆம் பத்தின் பதிகம்.

"................. ............ .................
ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி," —பதிற்று. 15

[பாணர் முதலிய இரவலர்க்கு வழங்கும் வள்ளன்மை வேறு; இங்குக் குறிக்கப்படுவது போர் வீரருக்கு மன்னர் வரிசை நோக்கி நாடு முதலிய நல்கும் பரிசேயாகும்]

அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தானும் = எதிர்ப்பாரை முன்னேறிப் பொருதழித்த வெற்றியும்;

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை,
இன்றி னூங்கோ கேளலம்: திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்தளிர்
..................................................

செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடி
...... ......................... .........
பொருதும் என்று தன்றலை வந்த
புனைகழல் எழுவர் நல்வல மடங்க
ஒருதா ஞகிப் பொருதுகளத் தடலே. —புறம். 76

எருமைக் கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை
ஒருபகல் எல்லையில் உண்ணும் என்ப
தாரிய அரச ரமர்க்களத் தழிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
—சிலப்.—கால்கோள், 215-218

மாராயம் பெற்றநெடுமொழியானும் = பெற்ற பரிசிற் பெருமிதத் தற்புகழ்ச்சியும்;

[மாராயம் என்பது வரிசையொடு பெற்ற பரிசு சுட்டும் நன்மதிப்பு. நெடுமொழி = தற்புகழ்ச்சி.]

நிலவுக்கதி ரளைந்த நீள்பெருஞ் சென்னி
அலர்மந் தாரமோ டாங்கயன் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
மேம்பட மலைதலும் காண்குவம் ஈங்கெனக்
கொடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்
.................................................
புட்கைச் சேனை பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதும்.
—சிலப்.—காட்சி. 137-142, 147-149

பொருளின் றுய்த்த பேராண் பக்கமும் = மாற்றுரை மதியாமல் எதிர்த்து ஊக்கிய மிக்க ஆண்மைத்திறமும்;

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டு
......................................................
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல்? வாழ்க அவன்கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே; பால்விட்
டயினியும் இன்றயின் றனனே: வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே; அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினு மிலனே.

—புறம். 77

இப் புறப்பாட்டில், நெடுஞ்செழியன் இளம் பருவத்தில் பகை மன்னர் எழுவரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தாக்கிப் பொருதுவென்ற ஆண்மைத் திறனை இடைக்குன்றூர் கிழார் புகழும் செவ்வி பாராட்டற் பாலது.

வரு விசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும் = விரைந்து பெருகிவரும் வெள்ளத்தை அசையாமல் நின்று தடுக்கும் கல்லணை போல, எதிர்த்து மேல்வரும் பகைப்படையை அஞ்சாது ஒருவனாய்த் தனி நின்று தகைக்கும் வீறும்;

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன். —புறம் 330

வல்லோன் தைஇய வரிப்புனை பாவை
முருகு இயன் றன்ன உருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப இடையறுத்
தொன்னு ரோட்டிய செருப்புகல் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் தாள்வலம் வாழ்த்த.
—மதுரைக்காஞ்சி 723-27

பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும் = திரளைகளாக விரும்பியாங்கு மிக்க சோற்றைத் (தானையர்க்கு) வழங்கும் தகைமையும்;

...........................................
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்,
கடுஞ்சின வேந்தே! நின் தழங்குகுரன் முரசே.
—பதிற்று. 30

...........................................
அரும்படைத் தானை அமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து
...........................................

கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென.

—சிலப். கால்கோள் வரி 48-61

இச்செய்யுள்களுள் முன்னதில் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன் 'செருப்புகன்' மறவர்க்குப் பெருஞ் 'சோறுகுத்த' பரிசு கூறப்படுகின்றது.

மற்றச் சிலப்பதிகாரச் செய்யுளடிகள் செங்குட்டுவன் வஞ்சிசூடி வட வாரியர்மேற் சென்றபொழுது நிகழ்த்திய செய்திகளுள் தன் படைத்தலைவர்க்குப் பெருஞ் சோறு வழங்கிய சிறப்புச் சுட்டுதல் காண்க.

வென்றோர் விளக்கமும் = (சேரும் வழியில் நேரும் போர்களில்) கொற்றம் கொண்டோர் பொலிவும்;

அரும்பவிழ் தார்க்கோதை அரசெறிந்த வெள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச் - சுரும்பொடு
வண்டாடு பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு —முத்தொள்ளாயிரம்

தோற்றோர் தேய்வும் = அவரால் அடப்பட்டோர் மெலிவும்;

வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்தன் சினவலைப் படுதலும்,
சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்

பிடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர் ஆகி எங்கணும்
ஏந்துவா ளொழியத் தாம்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர.
—சிலப். கால்கோள். 221-30

இவ்வடிகளில் செங்குட்டுவனால் முறியடிக்கப்பட் டழிந் தோடிய பகைப்படையின் நலிவு விளக்கப்படுத லறிக.

குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும் = குறையாத சீருடைய தம் மன்னர் வெற்றிக்குப் புகழும், மாற்றார் தோல்விக்குப் பரிவும் குறித்து, மகளிர் பாடும் உலக்கைப் பாட்டும்;

**வள்ளை** என்பது பெண்டிர் பாடும் உலக்கைப் பாட்டு; அதாவது தலைவனை வாழ்த்தி முருகனைப் பரசி உலக்கைக் குற்றோடொத்துப் பெண்டிர் பாடும் பாட்டு; ஆடவர் **முருகனைப் பாடும் வள்ளியின் வேறுபட்டது.** இது முன் வெட்சித் திணைச் சூத்திரத்தின் கீழ் விளக்கப்பட்டது.

1 வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையால்
ஐவன வெண்ணெ லறையுர லுட் பெய்திருவாம்,
ஐயனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவா நாம்;

தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பி யிருக்கும், பகையெனிற்
கூற்றம் வரினுந் தொலையான், றன்னட்டார்க்குத்
தோற்றலை நாணுதோன் குன்று;

.................................................

எனவாங்கு,
கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
ஆடமை வெற்ப னளித்தக்காற் போன்றே. —கலி. 43

2 திங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்த்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாட்ல்

என்பது முதல் மூவரசரையும் வாழ்த்திச் சிலப்பதிகார வாழ்த்துக் காதை யிறுதியில் வரும் வள்ளைப்பாட்டு மூன்றும் இத் துறைத்தாம்.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ= பகைவரின் அழிவுதரும் படைக்கலன்களை எதிர்த்து மார்பேற்றுப் புண்கொண்ட மறவரைத் தழுவுதலுடன் கூட்டி;

[அழிபடை-வினைத்தொகை; அழிக்கும் படையென விரியும். தட்டுதல், எதிர்த்தல் அல்லது மோதலாகும்;

எனவே, தட்டோர் என்பது பகைவர் படைகள் மோதி மார்பு புண்பட்டவர்.]

> ..............................மின்னவிர்
> ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
> நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
> களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
> ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
> ..................................................
> புடைவீழ் அந்துகில் இடவயிற் றழீஇ
> வாள்தோள் கோத்த வன்கட் காளை
> சுவல்மிசை அமைத்த கையன், முகனமர்ந்து
> ..................................................
> சிலரொடு திரிதரும் வேந்தன். —நெடுநல்வாடை

இதில் ''செய்'' யென் கிளவி முதனிலைத் தொழிற்பெயர்; செய்கை எனப் பொருள் படும். இந் நெடுநல் வாடை ஈற்றடிகள் நெடுஞ் செழியன் பாசறையில் பொருது புண்பட்ட தன்படை மறவரை முக மலர்ச்சியுடன் பொருந்தப் பாராட்டித் தமராகத் தழுவும் பரிசு குறிக்கப் படுகின்றது,

இனி. இதை இரட்டுற மொழிதலாகக் கொண்டு, 'தளரும் தம் படையைப் பின் வாங்காது தடுத்தூக்கித் திறன் வியந்து தழுவுதலுடனே கூட்டி' எனப் பொருள் கொள்ளினும் அமையும்.

இப் பொருளில் இத் துறைக்குச் செய்யுள் வருமாறு:-

.......................................................................
அவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழை தாங்கிய அகல்யாற்றுக் குன்று
விலங்கு சிறையின் நின்றனை எனாஅ
அரிதாற் பெருமநின் செவ்வி:
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே. —புறம் 169

காரிக்கண்ணனாரின் இப் புறப்பாட்டடிகள் தளரும் தன் படையின் கூழை தாங்கி, வரும் பகைப் படையை வலி தொலைத்த பிட்டனின் பெருமையைக் கூறுகின்றன.

இப் பொருளில் அழிபடை என்பது அழியும் படை என விரியும்; தட்டோர் என்பது தடுத்தோர் எனும் பொருளதாகும்.

அழிந்து புறங்கொடுத் தோடுபவர் மேல் படை தொடாத்தறுகண்மை தழிஞ்சி எனப் பிற்காலத்துப் புலவர் சிலர் கொள்வாராயினர். அப்பொருளில்இத்துறை யைப் பண்டைச் சான்றோர் பாடாமையானும், இச் சூத்திர அடிக்கு உரைகாரர் ஒருவரும் அப்பொருள் கொள்ளாமையானும், அது ஈண்டுப் பொருந்தாமை யறிக.

கழிபெருஞ் சிறப்பிற்றுறை பதின்மூன்றே = மிகப் பெருஞ் சிறப்புடைய வஞ்சித் துறை பதின்மூன்றாகும்.

குறிப்பு:— இதில், 'ஆன்' களும் 'பக்க'மும் இசை நிரப்பு. ஈற்றேகாரம், அசை. உம்மைகள் எல்லாம் எண் குறிக்கும். அரவம், எடுத்தல் என்பவற்றின் ஈற்றும்மை தொக்கன.

சூத்திரம்:—9.

*உழிஞை தானே மருதத்துப் புறனே.*

கருத்து:—இது, பற்றலர் அரணை முற்றி எறியும் உழிஞைப் புறத்திணை, மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனும் எனக் கூறுகிறது.

பொருள்:—உழிஞை தானே = உழிஞைத் திணையானது; மருதத்துப் புறனே = மருதம் என்ற அகத்திணைக்குப் புறனாகும்.

குறிப்பு:—தானே என்பதன் ஏகாரம்பிரிநிலை. புறனே என்பதன் ஏகாரம் ஈற்றசை.

மருதத்துக்கும் உழிஞைக்கும் அரணுடையஊர்களே நிலைக்களம் ஆதலானும், புலத்தலும் ஊடலும் மருத ஒழுக்கம் ஆதல் போல முற்றிய ஊரரணின் அகப்புறப் படைகள் தம்முள் கலாய்த்து இகலுதலே உழிஞையாதலானும், மருதத்துக்கு உழிஞை புறனாயிற்று.

சூத்திரம்:—10.

*முழுமுத லரணம் முற்றலும் கோடலும்*
*அனைநெறி மரபிற் றாகும் என்ப.*

கருத்து:—இஃது, உழிஞையின் இயல் விளக்குகிறது.

பொருள்:—முழுமுதல் அரணம் முற்றலும் = கெடாத தலையான காவலுடைய கோட்டையை வளைதலும்;

கோடலும் = எயில்காவல ரெதிர்ப்பை அழித்து எயிலைக் கைப்பற்றுதலும்; அனைநெறி மரபிற்று ஆகும் என்ப = அம்முறைகளின் தன்மை யுடைத்தாம் உழிஞைத்திணை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:—முன்னைச் சூத்திரத்து 'உழிஞை' என்பது ஈங்கு 'ஆகும்' என்னும் வினைக்குக் கொண்ட பொருள் தொடர்பால் எழுவா யாயிற்று 'என்ப' என்பதற்கு ஏற்பப் ''புறநூற் புலவர்'' என்னும் வினைமுதல் அவாய்நிலை யால் வருவிக்கப்பட்டது. ஓசை நோக்கி அனைய என்பதன் ஈறு கெட்டு அனை என நின்றது.

ஈங்குக் கோடல் என்பது முற்றியோர் வென்று அரண் கொள்ளுதலையே குறிக்கும். கொள்ளாது முற்றிய கோட்டையை விட்டு விலகுதல் உழிஞை ஆகாமையிற் கோடலும் முற்றலுடன் கூறப்பட்டது. இனி, கோடலை அரண் காவலர் தொழிலாக்கி. முற்றலை மட்டும் உழிஞை எனின், முற்றியோர் அரண் கைப்பற்றுதல் உழிஞையில் அடங்காமல், வேறு திணையுமாகாமல், குன்றக் கூறலாய் முடியும்; அன்றியும், முற்றியோர் அரணைப் பற்றுவழி அகப்படை அதனை மீட்டுக்கோடல் இன்மையால், அவ ரரண் கோடல் உழிஞை என்பது மிகைபடக் கூறலாகும். இன்னும், முற்றியோரை முறிய ஓட்டி அகத்தவர் வெற்றி பெற்றகாலை, அஃது அரண் காத்தலன்றிக் கோடலாமா றில்லை யாதலானும். முற்றியோர் வெற்றியால் அரணைப் பற்றிய பின் தோற்ற காவலர் அவரைமுற்றி அரணை மீட்டுக்கோடல் அவரளவில் உழிஞையே யாமாதலானும். முற்றியோரும் அரண் காவலரும் கைகலந்து பொருவது

உழிஞையின் இடை இயல் நிகழ்ச்சியாவதன்றித் தன்னளவில் தனித்தொரு திணையாமாறு இல்லையாதலானும், அகத்தவர் எதிர்ப்பை நொச்சியெனத் தனித்தொரு திணையாக்கின் அதற்கு நேராம் அகத்திணை ஒன்றுமின்றாதலானும், அகத்தோன் வீழ்ந்த நொச்சியை உழிஞைத் துறை வகைகளுள் ஒன்றாயடக்கிப் பின் சூத்திரம் கூறுவதானும் இங்குக் கோடல் என்பது அகத்தவர்க்கு ஆகாமை ஒருதலை.

சூத்திரம்:—11.

அதுவே தானும் இருநால் வகைத்தே.

கருத்து:—இது, உழிஞைத் திணை எட்டு வகைப்படும் என்கின்றது.

பொருள்:—வெளிப்படை.

ஏகாரம் ஈற்றசை.

சூத்திரம்:—12.

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்,
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்,
தொல்லெயிற் கிவர்தலும், தோலின் பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும், அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும், திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையும், உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே

*கருத்து:—இது, மேல் நாலிரு வகைத்தே எனத் தொகுத்த உழிஞை வகைகளின் பெயரும் இயல்பும் கூறுகிறது.*

*பொருள்:—1. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும் = பகைவர் நாட்டைக் கொள்ளத் துணியும் வீறும்;*

*குறிப்பு:—உள்ளின் விரைந்து முடிக்கும் உறுதி பற்றிக் குறித்த கொற்றம் என்றிறந்தகாலத்தாற் கூறப்பட்டது.*

1 ...............................ஒன்னார்
ஆரெயில் அவர்கட் டாகவும், நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்!
பூண்கடன் எந்தைநீ இரவலர் புரவே.

—*புறம்*, 203.

*'ஆனா ஈகை' எனத் தொடங்கும் இடைக்காடர் புறப்பாட்டில் கீழ்வரும் அடிகளும் இக்கொற்றம் பற்றியது:—*

2 மலையி னிழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்—
புலவர் எல்லாம் நின்னோக் கினரே.
நீயே,
மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே.

—*புறம்*, 42.

2. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும் = 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய' திறலுடைய வேந்தன் சீரும்;

'ஏற்று வலனுயரிய' எனும் நக்கீரர் புறப்பாட்டில்,

"கூற்றொத் தீயே மாற்றரும் சீற்றம்,
வலியொத் தீயே வாலி யோனைப்,
புகழொத் தீயே இகழுநர் அடுநனை,
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்,
ஆங்காங்கு அவரவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே "— புறம் 56

என இத்துறை வருதல் காண்க. இன்னும் பட்டினப் பாலையில் திருமாவளவனை,

"..............................மருங்கற
மலையகழ்க் குவனே, கடல்தூர்க் குவனே,
வான்வீழ்க் குவனே, வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலின்".
—பட்டினப்பாலை வரி 270-273.

எனப் பாராட்டுவது மித்துறை யாகும்.

3. தொல் லெயிற்கு இவர்தலும் = பகைவர் முன் பற்றாத பழைமையான மதிலைப் பற்றி முற்றியோர் ஏறுதலும்;

1. "...........................................
மைந்துடை ஆரெயில் புடைபட வளைஇ

வந்துபுறத் திறுக்கும் பசும்பிசிர் ஒள்ளழல்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ்பு
ஒல்லா மயலொடு பாடிமிழ் புழிதரும்
மடங்கல் வண்ணங் கொண்ட கடுந்திறற்
றுப்புத்துறை போகிய கொற்ற வேந்தே—".-பதிற்று. 62

2 "பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது, வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக."
—பெரும்பாண். 448-454

4. தோலின் பெருக்கமும் = பகைவர் படைக்கலன் உருவாறு தடுக்கச் செறித்த கேடகங்களின் பொலிவும்;

வினை மாட்சிய விரை புரவியொடு
மழை யுருவின தோல் பரப்பி
முனைமுருங்கத் தலைச் சென்றவர். —புறம். 16

5. அகத்தோன் செல்வமும் = (கொளற்கு அரிதாய், உணவு முதலிய கூழும் நன்னீரும் படையும் உலையா தூக்கும் அறைபோகாத் தறுகண் மறவர் காவலும் உடைய) அரண் அகக்காவலன் பரிசு குறித்தலும்;

''அளிதோ தானே பாரியது பறம்பே,
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே.
ஒன்றே, சிறியிலை வெதிரினெல் விளையும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே;
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன் சொரியும்மே.
வான்க ணற்றவன் மலையே: வானத்து
மீன்க ணற்றதன் சுனையே: ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர்; வாளிற் றூரலன்''. —புறம் 109

6. அன்றி, முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும் = அல்லாமலும், முனைந்து அரண் கொள்ள முற்றிய தலைவன் அகத்தவர் எதிர்ப்பால் வருந்தும் பகுதியும்;

(அணங்கு = வருத்தம்.)

''தாக்கற்குப் பேரும் தகர்போல் மதிலகத்து
ஊக்க முடையார் ஒடுங்கியும்—கார்க்கீண்
டிடிபுறப் பட்டாங் கெதிரேற்றூர் மாற்றூர்
அடிபுறத் திடும் அரிது''. —பெரும்பொருள் விளக்கம்.

இனி, ''முற்றியோன் அகத்தவனை வருத்தும் பரிசும்'' எனினுமமையும். முன்னதில் அணங்கு தன்வினை; பின்னதி

லது பிறவினை. (முன்னதற்குப், புறத்தோனை அணங்கிய எனக்கொள் ளுதலுமமையும்).

1 "தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதார் ஊர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு", -பெரும்பொருள்விளக்கம்

2 "செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமின் இடிமுர சார்ப்ப—அரவுறழ்ந்து
ஆமா உகளும் அணிவரையின் அப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து",—முத்தொள்ளாயிரம்

7. திறப்பட ஒருதான் மண்டிய குறுமையும் = ஊறஞ் சாது உரனுடன் ஒருவனாய் எதிர்த்தேறிப் புரியும் குறும் போரும்;(ஊற்றத்தால் தனித்தேறி மாற்றலரை நெருங்கி மலையும் தறுகண்மை குறுமை அல்லது குற்றுழிஞை எனப்படும்.)

"சுதையத் தோங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து
சிதையத் திண்டிறல் இராவணக் குன்றிடைச் சென்றான்
ததையச் செங்கரம் பரப்பிய தன்பெருந் தாதை
உதயக் குன்றினிற் றுகுன்றிற் பாய்ந்தவன் ஒத்தான்"

எனும் கம்பர் பாட்டில், சுக்கிரீவன் இராவணன் மேல் தனியே பாய்ந்து மலைந்த குறும்போர் வருதல் காண்க.

8 உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில் உளப் பட=வெகுண்டு மேல்வரும் உழிஞைப் பொருநரைப்

பொருட்படுத்தா உரனுடையார் காவலால் கொளற்கரிதாம் அரணின் பெருமை உள்ளிட்டு;

> ''மொய்வேற் கையர் முரசெறிந் தொய்யென
> வையக மறிய வலிதலைக் கொண்ட
> திவ்வழி யென்றி, இயல்தார் மார்ப!
> எவ்வழி யாயினும் அவ்வழித் தோன்றித்
> திண்கூர் எஃகின் வயவர்க் காணில்
> புண்கூர் மெய்யின் உராஅய்ப், பகைவர்
> பைந்தலை எறிந்த மைந்துமலி தடக்கை
> ஆண்டகை மறவா மலிந்துபிறர்
> திண்டற் காகாது வேந்துடை யரணே''.
>
> —தகடூர் யாத்திரை.

சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே = முன் சூத்திரத்தில் சுட்டப்பட்ட எட்டு வகைத்தாம் உழிஞைத்திணை.

குறிப்பு:—'நாலிருவகைத்தே' என முன் சூத்திரத்தில் தொகுத்த உழிஞையின் வகை எட்டும் இங்குக் கூறப்படுதலின் 'சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே' எனக் குறிக்கப்பட்டன. ஈற்றேகாரம் அசை; இசைநிறை எனினுமமையும். நாலிரு வகைத்தே என்னும் முடிபுக்கேற்ப 'உழிஞைத்திணை' என்னும் எழுவாய், கொண்ட பொருள் தொடர்பால் கொள்ளப்பட்டது.

இவை எட்டும், பிறர்கூறுமாறு துறைகளாகா. உழிஞைத்துறை பன்னிரண்டும் அடுத்த சூத்திரம் கூறுதலால், இவ்வெட்டும் உழிஞைத்திணை வகையெனத் தெளிக.

சூத்திரம்:—13.

குடையும், வாளும் நாள்கோள் அன்றி,
மடையமை ஏணிமிசை மயக்கமும், கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வும், அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும், மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்,
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும், அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்,
மதின்மிசைக் கிவர்ந்தோர் பக்கமும், இகன்மதிற்
குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோ டொன்றத்—
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ,
வகைநான் மூன்றே துறையென மொழிப.

கருத்து:—உழிஞைத் திணைவகை மேற்கூறி, இதில் அதன் துறைவகை பன்னிரண்டும் குறிக்கப்படுகின்றன.

பொருள்:—(1, 2.) குடையும், வாளும், நாள்கோள் = வேந்தன் கொற்றக் குடையும், வெற்றிப் போர் வாளும், முறையே நன்னாளில் எடுத்துக்கொள்ளுதலும்;

முழுத்தம் ஈங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை யேகென் றேத்த,
மீளா வென்றி வேந்தன் கேட்டு—
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென,

.......................................

பிண்ட முண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளும், மாலைவெண் குடையும்,
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் வஞ்சி போந்தையிற் றொடுப்போன்
அரைசுவிளங் கவைய முறையிற் புகுதர.

— சிலப்பதிகாரம், கால்கோட்காதை.

அன்றி = அல்லாமலும்;

3. மடையமை ஏணிமிசை மயக்கமும் = தொடையமைந்த ஏணிப் படிகளின்மேல் ஏறுவோரும் எதிர்ப்போரும் தம்முள் கலந்து மலைதலும்; (மடை = பூட்டு. ஏணிப் பக்கச்சட்டங்களில் பழுக்கள் பூட்டப்படுதலால், மடையமை ஏணி எனப்பட்டது.)

பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ ருடன்றெழுந்தா ராகில் — இருவரும்
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்.

— பெரும்பொருள் விளக்கம்.

4. கடைஇச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும் = முற்றியோன் தன் மறவரைச் செலுத்தி எதிர்த்தோரை மலைந்து மதிற்புறப் போர் முடிந்து ஒழியுமாறு வென்று எயிலைக் கைப்பற்றி உள்ளேறி அரணக மறவரைச் சூழும் முனைப்பும்;

ஊர்சூழ் புரிசை உடன்சூழ் படைமாயக்
கார்சூழ் குன்றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
ருகஞ்சேர் தோள்கொட்டி ஆர்த்து. —பழம்பாட்டு

5. முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் = புறத்தோரால் வளைக்கப் பெற்ற அகப்படைத் தலைவன் அரண் காவல் விரும்பிப் புரியும் அமராம் நொச்சியும்;

(வீழ்தல் = விரும்புதல். நொச்சி = மதில்; அது மதிற் காவற்கு ஆகுபெயர்)

நீரற வறியா நிலமுதற் கலந்த
கருங்கா ணொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளிர் ஐதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டனம், இனியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
தெற்றுவாய்ப் பட்ட தெரியலூ ரன்செத்துப்
பருந்துண் டுவப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே. —புறம். 271

6. அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையும் = அவ்வெதிர்ப்பால் வெகுண்டு புகுந்த புறப்படைத் தலைவன் விரும்பும் புதுக்கோளும்;

(எதிர்ப்பாரை அடர்த்து அவர் நிலையிடத்தைப் புதிதாய்க் கொள்ளுதல் புதுமை எனப்பட்டது.)

வெஞ்சின வேந்தன் எயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி ஒதுங்காதார் யாவர்?அவர்—மஞ்சுசூழ்
வான்தோய் புரிசைப் பொறியும் அடங்கினவால்,
ஆன்றோர் அடக்கம்போல் ஆங்கு.

—பெரும் பொருள் விளக்கம்

(மற்று, அசை)

7. நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்=எயிற் புறத்து நீர் நிலையில் (அகற்ற ஒழியாது வந்து விரவும் பாசிபோல) இருதிறப் படையும் தளர்ந்தகலாமல் மேன்மேல் விரும்பிக் கலந்து மலையும் பாசித்துறையும்;

(விட்டு விலகாதுவிரைந்து விரவும் நீர்ப்பாசி போலக் கலந் திருபடையும் மலைந் திருதலையும் அலையென மோதும் அமரின் பரிசு, பாசி எனப்பட்டது.)

முடிமனர் எழுதரு பரிதி மொய்களி
றுடைதிரை மரக்கலம் ஒளிறு வாட்படை
அடுதிறல் எறிசுறு வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் கால மொத்ததே.

—சிந்தாமணி. 2223

8. அதாஅன்று=அதுவுமன்றி; ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்=அரணகத்து ஊரில் அமர் விரும்பி ஒருவரை ஒருவர் முனைந்து பொரும் அப்பாசிப் போரின் தறுகண்மையும்:

(மற்று, அசை. அதன் மறன் என்பது அண்மைச் சுட்டாய் மேற்பாசி மறனைச் சுட்டும்)

மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—எறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோல் நீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு உற்றுரைக் கண்டு. —பழம்பாட்டு

9. மதின்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்= மதின்மேல் ஏறி அகற்றப்படாதுஊன்றிய மறவர் பரிசும்;

.....................................
நெடுமதில் நிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ.'

—பதிற்றுப்பத்து 22.

10. இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும் = பகைமதிலின் முடியகப்படுத்திய பெருமிதம்கொண்டாடும் நீர்விழவும்

'.........................பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக.'

—பெரும்பாண்-வரி 450-4.

(இதில் குடுமியை மதிலுக்கு ஆக்காமல் பிரித்து ஆகுபெயராக்கிப் 'பிறர் குடுமி' எனக்கொண்டு, காவலர்முடிக் கலம் எனப் பிறர் கூறுதல் பொருந்தாமை வெளிப்படை.

வேந்தனுக்கல்லால் மதில் காக்கும் மறவர்க்கெல்லாம் முடிக்கலம் இன்மையானும், முற்றிய மதின்மேல் முடி வேந்தன் ஏறி முடி பறிகொடுத்தல் இராவணற்கன்றிப் பிறமன்னர்க்குச் சான்றோர் செய்யுட்களில் கேட்கப்படா அருநிகழ்ச்சியாதலானும், இங்கு 'மதிற்குடுமி' என நின்றுங்கே நேர்பொருள் கொள்ளுதலே அமையும் முற்றி யோர் எயிற்குடுமி கொள்ளுதல், மேற் பெரும்பாண் அடி களிலும் மற்றும் பல பழஞ் செய்யுள்களிலும், பரக்க வருவதனாலும், இதுவே தொல்காப்பியர் கருத்தாதல் தேற்றமாகும்.)

11. வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற = உழிஞைப் போரில் வென்றோர், வெற்றிதந்த வாளை நீராட்டும் விழவுடன் பொருந்த; (மண்ணுதல் = கழுவுதல்.)

'போர்க்கு உரைஇப் புகன்று கழித்தவாள்
உடன்றவர் காப்புடை மதிலழித்தலின்
ஊனுற மூழ்கி உருவிழந் தனவே'. —புறம். 97.

[இங்கு வாளை வெற்றிதரும் படைக்கலங்களுக்குப் பொதுக் குறியீடாகக் கொள்ளுதல் சால்புடைத்தாகும். வாளைப் போலவே வேலும் பண்டை மறவர் கொண்ட போர்ப் படையாதலின், வென்றபின் வேல்கழுவி விழ வெடுத்தலும் இத்துறையேயாகும்.]

'பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே.
இரும்புற நீறும் ஆடிக் கலந்திடைக்

குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும்:
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினும் செல்லும்; ஆங்
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினும் செலவா னதே'.

—புறம். 332

*12.* ஒன்ற, தொகைநிலை யென்னும் துறையொடு தொகைஇ=(வென்ற வாளை நீராட்டும் விழவொடு) பொருந்த, தோற்றோர் தொகுதித்தொலைவாம் 'தொகை நிலை' என்னும் துறையொடுகூட்டி;

தொகைநிலைத் துறைக்குச் செய்யுள்:—

1 அடுந்தேர்த் தானை ஆரிய வரசர்
கடும்படை மாக்களைக் கொன்று களங்குவித்து
நெடுந்தேர்க் கொடிஞ்சியும் கடுங்களிற் றெருத்தமும்
விடுபரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட,
எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
ஒருபக லெல்லையி னுண்ணு மென்ப
தாரிய வரச ரமர்க்களத் தழிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்.

—சிலப்பதி 26. கால்கோள் வரி 211-218

2 "...........................................
உருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னை

நிலைச்செ ருவினுல் தலைய றுத்தவன் .......
குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்'
—பதிற்றுப்பத்தில், 4-ம் பதிகம்.

3 'பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே,
மறப்பன் மாதோ நின்விறற் றகைமையே'
—நற்றிணை-செய் 270

இங்குப் பின்னிரு பாட்டுக்களில் நன்னனை அவன் தானை யொடழித்து, அழிந்தோர் மனைவியர் கூந்தலை அரிந்து, வென்ற வேந்தன் தன்தானைப் போர்யானைக் கயிருகத் திரித்துக் கொண்ட கொடுமறமும், அப்போரில் தோற் ரேூர் தொகுதியின் தொலைவும் சுட்டப்படுதலின், இவை 'தொகை நிலை' த் துறையாதல் காண்க.

மக்கள் தொக்கதொகுதியாய்த் 'தொலைவதையே தொல்காப்பியர்காலப் புலவர் 'தொகைநிலை' என வழங் கினர் என்பது, தும்பைத்திணைத் துறைவகையில் தொல் காப்பியர் சுட்டும் தொகைநிலைக் குறிப்பாலினிது விளங் கும். 'ஒருவரு மொழியாத் தொகைநிலை' என்பது ஆங்கவர் தரும் 'தொகைநிலை'க் குறிப்பாகும். உழிஞையிலும் தோற் ரேூரின் தொகையழிவே வென்ரேூர் விழவொடு ஒன்றுவ தாகும்.

[இனி, இதில் தொகைநிலைக்கு நச்சினார்க்கினியர்வேறு பொருள் கூறுவர். 'போர் முடிவில் வென்றோர் வீழாது நின்றோரைத் திரட்டி, புண்புறம் பொதிந்தும், தண்மொழி பகர்ந்தும், அவர் திறம்வியந்தும், தளர்வோரை ஊக்கியும் பாராட்டுவது 'தொகைநிலை' என்பதவர் கருத்து. தொகை கூட்டம் குறிக்குமாதலின், அவ்வாறு கொண்டார் போலும்.]

வகை நான் மூன்றே துறை என மொழிப = பன்னிரு வகைப்படும் உழிஞைத் துறை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:—இதில், 'மற்று' எல்லாம் அசை. 'உழிஞைத் துறை' என்பது கொண்ட பொருட்டொடர்பால் பெறப் பட்டது. புறநூற் புலவர் எனும் எழுவாய் அவாய் நிலை யாற் கொள்ளப்பட்டது. புதுமையானும் என்பதில் ஆன் அசை.

**சூத்திரம்:—14.**

**தும்பை தானே நெய்தலது புறனே.**

கருத்து:—இது, தும்பை என்னும் புறத்திணை நெய் தல்என்னும் அகத்திணைக்குப் புறனாகும்எனக் கூறுகிறது.

பொருள்:—வெளிப்படை.

குறிப்பு:—ஏகாரம், முன்னது பிரிநிலை; பின்னது அசை. நெய்தல் போலவே தும்பையும் ஆர்ப்பு, அலைப்பு, இரங்கல் இவற்றிற்கு இடனாதலானும், நெய்தலில்

புலம்புறு தலைவியர் இரங்கல் ஓயத் தலைவர் கார்காலத்தே மீளுதல் போலத் தும்பையில் அமரோய்வு கார்காலத் தாதலானும், நெய்தற்குரிய பரந்த மென்னில வரைப்பு போர்க்குச் சிறந்துரியதாதலானும் நெய்தலுக்குத் தும்பை புறனாயிற்று.

சூத்திரம்:—15.

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

கருத்து:—இது, தும்பைத் திணை இயல்பை விளக்குகிறது.

பொருள்:—மைந்து பொருளாக வந்த வேந்தனை = தன்வலியை மதித்து இகலி வந்த வேந்தனை; சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப = எதிர்த்துப் போய்ப் பொருதடர்க்கும் சீருடைத்து தும்பைத்திணை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:—தும்பைத்திணை என்னும் எழுவாய், பொருட்டொடர்பால் முன் சூத்திரத்தினின்றும் பெறப் பட்டது. "தும்பை" இருபடையும் ஒருங்கு மலையும் போர் குறிப்பதால், வந்த வேந்தனை இருந்த மன்னவன் எதிரூன்றிப் பொருதலும், அவ்வாறு தடுத்தெதிர்த்தவனை வந்தோன் அடுத்தமர் தொடுத்தலும், ஆகிய இருதிறமும் அடங்கச் சூத்திரம் அமைந்த செவ்வி கருதற்குரியது.

எதிர்த் திருவர் மலைவதே போராதலின், போர் குறிக்கும் தும்பையின் வேறாக எதிரூன்றலைக் காஞ்சி என

வேறு திணையாகக் கொள்ளும் பின்னூற் கொள்கை மிகையாதல் வெளிப்படை. அதுபற்றியே தொல்காப்பியர் எதிருன்றலைக் காஞ்சியெனக் கூறிற்றிலர்.

சூத்திரம்:—16.

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோ
டிருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

கருத்து:— இது, தும்பைத் திணையின் ஒரு சிறப் புணர்த்துகிறது.

பொருள்:—கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் = அளவிறந்த அம்பும் வேலும் செறிந்து அடர்தலின்; சென்ற உயிரின் நின்ற யாக்கை. (அருநிலைவகை) = பிரிந்த உயிரினின்றும் நீங்கியபின்னும் வீழாதுநின்ற உடலின் அரிய நிலைப்பரிசு; இருநிலந் தீண்டா அருநிலைவகையோடு = (அறுபட்டதலை முதலிய உறுப்புக்கள்) பெருநிலம் படியாது முறுகிய இகல்முனைப்பால் துடித்தியங்கும் அரிய நிலைமையாகிய பரிசுடன்; இருபாற் பட்ட ஒரு சிறப்பின்றே = இவ்விரண்டுகூறுபட்டஒப்பற்றசிறப்பினையுடைத்து தும்பைத்திணை.

குறிப்பு:— ஈற்றேகாரம் அசை. 'இன்'—உருபிரண்டில் முன்னது ஏதுப்பொருளிலும், பின்னது நீங்கற் பொருளிலும் வந்தன.

முறுகிய தறுகண் முனைப்பால் உயிரிழந்த உடல் வீழாது நிற்றலும், துணிக்கப்பட்ட தலை முதலிய உறுப்புக்கள் நிலந் தோயாமல் துடித்தியங்கலும், ஆகிய இரு வகை அரிய நிலையைச் சிறப்பாக உடையது தும்பைத் திணை.

இருநிலந் தீண்டாததிது எனக் குறியாமை, சிறப்பாகத்தலை துடிப்பதுடன் இற்ற உறுப்பெதுவும் துடிக்கும் இயல்பிற்றாகலின் சுட்டிக் கூறல் வேண்டாமைபற்றி அமைந்தது.

அன்றியும், 'சென்ற உயிரினின்றயாக்கை' எனப் பிரித்து, ''இருநிலந் தீண்டா அருநிலை வகையோடு, இரு பாற்பட்ட ஒரு சிறப்பின்று'' எனக் கூட்டியதால், யாக்கையும் அதன் அறுபட்ட உறுப்பும் தனித்தனி சுட்டுங் கருத்துத் தெளியப்படும். [இங்கு, 'அரு' என்பதை அட்டை எனக் கொண்டு, அதன் பின்வரும் 'இருபாற் பட்ட' எனுந் தொடரை அவ்வட்டைக்கு அடையாக்கி, இருகூறுபட்ட அட்டைப் பகுதிகள் தனித்தனி ஊர்ந்து இயங்குவதுபோலத் துணிக்கப்பட்ட தலையும் உடலும் தனித்தனி துடிக்கும் எனப்பொருள் கூறுவர் பழைய உரைகாரர். இரண்டின் மேற்பட வெட்டுண்ட அட்டைத் துண்டுகளும் துடிப்ப தியல்பாதலால், இருபாற்பட்ட என்பது பொருளற்ற தாகும். அன்றியும் ஊர்ந்து செல்லுதல் நிலமிசையே யாமாதலால் அது இருநிலந் தீண்டா அரு நிலை எனற்குமமையாது. அதனுல். இருபாற்பட்ட எனுந் தொடர் அதை யடுத்துவரும் 'ஒரு சிறப்புக்கே' அடையா தல் தேற்றம்.] நின்ற யாக்கை, நிலந் தீண்டா உறுப்பு

அருநிலை, என முறையே இரு திறப்பட்ட ஒரு சிறப்பாதல் காண்க

வெற்றுடலும் அற்றதலையும் நிலந்தீண்டா நிலைக்குச் செய்யுள்:

"..............................................
வருபடை தாங்கிய கிளர்தா ரகல
மருங்கட னிறுமார் வயவ ரெறிய
உடம்புந் தோன்றா வுயிர்கெட் டன்றே;
மலையுநர் மடங்கி மாறெதிர் கழிய.........
முலையா நிலையி னுடல்நின் றன்றே". —புறநானூறு

இது, சென்ற உயிரின் நின்ற யாக்கை இருநிலந் தீண்டா அருநிலை குறிப்பது.

இனி, "கொடுமணம் பட்ட" எனும் பதிற்றுப்பத்துப் பாட்டில்,

"தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொ
டுருவில் பேய் மகள் கவலை கவற்ற" —பதிற்று. 67

என்பதும்,

சிலப்பதிகாரக் கால்கோட் காதையில்,

"தாரும் தாருந் தாமிடை மயங்கத்
தோளும் தலையுந் துணிந்து வேறாகிய
சிலைத்தோள் மறவ ருடற்பொறை யடுக்கத்
தெறிபிண மிடறிய குறையுடற் கவந்தம்
பறைக்கட் பேய்மகள் பாணிக் காட".

எனவருமடிகளும், இருநிலம் தீண்டாத் துணியுறுப் பருநிலை குறிப்பன.

சூத்திரம்:—17.

தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கு மூவகை நிலையும்,
வேன்மிகு வேந்தனை மொய்த்த வழியொருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை, யன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்,
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய எருமையும், படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்,
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும், களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும், வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்,
செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
யொருவன் மண்டிய நல்லிசை நிலையும்,
பல்படை யொருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும், உள்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே

கருத்து:—இது, தும்பைத்திணையின் துறைவகையும் இயல்பும் கூறுகிறது.

பொருள்:—(1—3); தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்=பகைவரை அஞ்சப் பண்ணும் ஆட்படை வகுப்பு, யானை நிரை, குதிரையணி எனும் முத்திற நிலைகளும்;

"பகைபெரு மையிற் றெய்வம் செப்ப
ஆரிறை யஞ்சா, வெருவரு கட்டூர்ப்
பல்கொடி நுடங்கு முன்பிற் செறுநர்
செல்சமந் தொலைத்த வினைநவில் யானை
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
வண்டுபடு சென்னிய பிடிபுணர்ந் தியல,
மறவர் மறல், மாப்படை யுறுப்ப." —(பதிற்று-82.)

இதில், யானை-தானை-குதிரை (மா) என்ற மூவகை நிலையு மொருங்கு வருதலறிக. இனி, இவை தனித்தனியே வருதல் பெருவழக்கு.

1 முடிமன ரெழுதரு பரிதி மொய்களி
றுடைதிரை மரக்கல மொளிறு வாட்படை
யடுதிற லெறிசுறு வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் கால மொத்ததே.
—சிந்தாமணி-2223

இது தானை மறம் விளக்கும் சிந்தாமணிப் பாட்டு. சிலப்பதிகாரக் கால்கோட் காதை—வரிகள் 194—204-ம் இத்துறையாம்.

2 அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவம் கோத்தெடுத்த கோட்டாற் - பனிக்கடலுட்

பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.
(புறத்திரட்டு—முத்தொள்-1389.)

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லாம் எமதென் றெழுதுமே
மெய்யிலைவேல் மாறன் களிறு.
(புறத்திரட்டு—முத்தொள்-1390.)

இவை யானைமறங் குறிக்கும் புறத்துறைப் பாட்டுக்கள்.

3 நிலம் பிறக்கிடுவது போர்க்குளம்பு கடையூஉ
வுள்ள மொழிக்குங் கொட்பின் மான்மே
லெள்ளுநர்ச் செருக்குங் காளை கூர்த்த
வெந்திற லெஃக நெஞ்சுவடு விளைப்ப
வாட்டிக் காணிய வருமே நெருநை
யுரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த் திமிலிற் போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
விலங்கு மருப்பியானை யெறிந்த வெற்கே, —புறம் 303.

மாவா ராதே, மாவா ராதே,
எல்லார் மாவும் வந்தன, எம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே,
இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்

விலங்கிடு பெருமரம் போல
வுலந்தின்று கொல்லவன் மலைந்த மாவே. —புறம் 273.

இவை குதிரைமறந் துலக்கும் பாட்டுக்கள்.

4 வேன் மிகு வேந்தனை மொய்த்த வழி, ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை, அன்றியும் = வேன்மறத்தால் வீறு பெற்ற வேந்தனைப் (பகைமறவர்) சூழ்ந்து நெருக்கிய விடத்து, அவன் தானைத்தலைவன் தான் ஒருவனாய்ப் பகைவர் முன்னணியை மறித்து முறித்த தும்பைத்தார்நிலையும், அல்லாமலும்;

"இவற்கீத் துண்மதி கள்ளே; சினப்போ
ரினக்களிற் றியானை யியறேர்க் குரிசில்!
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே;
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே."
—புறம்-290.

இது தார்நிலை.

வெய்யோ னெழாமுன்னம் வீங்கிராக் கையகலச்
செய்யோ னொளிவழங்குஞ் செம்மற்றே · கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை. (புறத்திரட்டு—1362.)

இதுவும் தார்நிலை.

5 இருவர் தலைவர் தபுதிப் பக்கமும் = எதிர்த்து மலையும் இருபடைத் தலைவரும் தம்முள் பொருது கெடும் பரிசும்;

[தபுதி = இழவு அல்லது கேடு. இது கெடுதல் குறிக்கும் தபு என்னும் முதனிலை யடியாகப் பிறந்த தொழிற் பெயர்.]

6 ஒருவன், ஒருவனை உடைபடை புக்குக் கூழை தாங்கிய எருமையும் = ஒரு மறவன் தன் தலைவனை அவன் உடைபடை யுட்புகுந்து (அதன் பின்னணியைத் தாக்கும் பகைவரைத் தகைந்து) ஏமமுறக்காக்கும் தளராத் தறுகண்மையாகிய எருமைமறமும்;

[கூழை = பின்னணி, தாங்கல்—தடுத்தல் அல்லது பேணுதலாம். இதில் தாங்கல் வினையை ஒருவனுக்கும் கூழைக்கும் தனித்தனிப் பிரித்துக் கூட்டுக. முறியுந் தம் படையின் பின்னணியைப் பகைவர் தாக்காதுகாத்தலும், அப்படை முறியஅடர்த்தபகைவரை எதிர்த்துத் தடுத்து நிறுத்தலும் ஒருவன் அருந் திறலாவதானும், அத்திற லுடை மறவன் (எதிர்வரும் எதற்கும் அஞ்சாது அசையாது நிலைத்து நிற்கும் எருமைபோல) தான் ஒருவனாய்த் தளராது எதிர்த்துவரும் படையைத் தாங்கும் தறுகண்மை வியத்தற்குரிய தாதலானும், அவன் திறம் எருமை மறமெனப் பட்டது. உடையும் படையின் பின்னணிதாங்கித் தொடரும் பகைஞரைத் தாக்கித் தகையும் தறுகண்மை எருமை மறம் எனப்படும்.]

7. படை யறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும் = மேல்வரும் பகைப் படைக் கலங்களை அழித்து மதுகை

கொள்ளும் பாதுகாவலானும். [பாழி = மதுகை, வலி பெருமையுமாம்.]

நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே.

—புறம். 274

8. களிறெறிந்து எதிர்ந்தோர் பாடும் = மேல்வரும் பகைவர் யானையை எதிர்த்தேறும் மறவர் பெருமையும்,

கட்டி யன்ன காரி மேலோன்
தொட்டது கழலே கையது வேலே
சுட்டி யதுவும் களிறே யொட்டிய
தானை முழுதுடன் விடுத்துநம்
யானை காமினவன் பிறிதெறி யலனே.

—தகடூர் யாத்திரை-புறத்திரட்டு 1372

9. களிற்றொடுபட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் = ஊர்ந்த யானையொடு கெட்டழிந்த மன்னனை, வென்று கொன்ற மன்னனின் வாள் மறவர் சூழ்ந்தாடும் ஆர்ப்பும்;

[அமலுதல் = நெருங்குதல். ஈண்டு அமலை பலர் நெருங்கி ஆர்க்கும் ஆரவாரத்திற்கு ஆகுபெயராயிற்று.]

ஆளுநங் குரிசி லுவகைக் களவென்றும்
கேளின்றிக் கொன்றூரே கேளாகி—வாள்வீசி
ஆடினு ரார்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினர் வீழ்ந்தானைச் சூழ்ந்து. —புறத். 1348

***10.*** வாள் வாய்த்து இருபெரு வேந்தரும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும் = வாட்புண் பெற்று இகலும் பெருவேந்தர் இருவர் தாமும் தமக்குத் துணையாம் தமரும் ஒருவருந் தப்பாமல் மாய்ந்தழியும் தொகைநிலை என்னும் துறையும்; [இதில்வரும் தும்பைத் தொகைநிலை, முன் சுட்டப்பட்ட உழிஞைத் துறையான தோற்றோர் தொலைவு குறிக்கும் தொகைநிலையின் வேறுபட்டுப், பொருமிருதிறத்தார்தொலைவும் தெரிப்பதாதலின் ஈண்டு வேறு கூறப்பட்டது.]

தொகைநிலைக்குச் செய்யுள்:—

வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்தொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி
நிறங்கிளர் உருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே, குடைதுளங் கினவே,
உரைசால் சிறப்பின் முரசொழிந் தனவே,
பன்னூ றடுக்கிய வேறுபடு பஞிலம்

இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்று லமரே, பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே,
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
அரும்பெற லுலகம் நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே,-புறம் 62.

11 செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்=போர்க்களத்தில் தன் வேந்தன் பட்டுவிழ வெகுண்டு அவன் படை மறவன் ஒருவன் அவனை வீழ்த்தியவரை அடர்த்தழிக்கும் தூய புகழ்ப் பரிசும்;

மறங்கெழு வேந்தன் குறங்கறுத் திட்டபின்
அருமறை ஆசான் ஒருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமொடு
இரவூர் அறியாது துவரை வேந்தொடு
மாதுலன் தன்னை வாயிலின் நிறீஇக்
காவல் பூட்டி ஊர்ப்புறக் காவயின்
ஐவகை வேந்தரோடு அரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு கரியோன் காத்தலிற்
றெருக்குடம் பிரீஇத் துறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி

வடாது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலிற்
றம்பியர் மூவரும் ஐம்பான் மருகரும்
உடன்சமர் தொடங்கி யொருங்கு களத்தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை யாள்வினைக்
கின்னோ ரினிப்பிற ரில்லென வொராங்குத்
தன்முதற் றாதையொடு கோன்முத லமரர்
வியந்தனர் நயந்த விசும்பி
னகன்றலை யுலகமு மறிந்ததா லதுவே.

—பெருந்தேவனார் பாரதப் பாட்டு.

12. பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும், உளப்பட = பலவேறாய பகைப் படையனைத்தும் ஒருவனுக்குடைந்துகெட்டழிந்தவிடத்து அவ்வாறு வென்றவன் வீறுகொண்டு புகழ்க்குரிய தன் வெற்றிவாளை வீசிக் கொன்று குவிக்கும் நூழில் என்னும் துறையும், கூட்ட; [ஒருவன் பலரைக் கொன்று குவிக்கும் தறுகண்மை நூழில் எனவும், நூழிலாட்டு எனவும் பெயர் பெறும். அது குவிதலையும் கொல்லுதலையும் குறிக்கும் சொல்லாகும்]

ஒருவனை யொருவ னடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலம்; திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்

நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய்க் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலும் அறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே. —புறம். 76

புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே = பொருந்தி விளங்கும் பன்னிரண்டு துறைகளையுடையது தும்பைத் திணை. [ஈற்றேகாரம் அசை. உம்மைகள் எண் குறிப்பன. பொருட்டொடர்பால் தும்பைத்திணை என்னும் எழுவாய் பெறப்பட்டது.]

சூத்திரம்:—18.

வாகை தானே பாலையது புறனே.

கருத்து:—இது, வாகைத்திணை பாலை என்னுமகத் திணைக்குப் புறனெனவுணர்த்துகிறது.

பொருள்:—வெளிப்படை.

குறிப்பு:—ஏகாரம், முன்னது பிரிநிலை; ஈற்றது அசை.

பாலை அறக்காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை மிகுப்பது போல, வாகை மறக்காதலை வளர்த்து வெற்றி

யின்பம் விளைப்பதாலும், பாலைபோல வாகையும் நிலம் வரைவின்றி யாண்டும் நிகழுமாகலானும், பாலைக்கு வாகை புறனாயிற்று.

சூத்திரம்:—19.

*தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்*
*பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.*

கருத்து:—இது, வாகைத்திணை இயல் விளக்குகிறது.

பொருள்:—தாவில் கொள்கைத் தத்தம் கூற்றை= குற்றமற்ற கோட்பாட்டளவில் மக்கள் அவரவர் துறையில்; பாகுபட மிகுதிப்படுத்தல் என்ப=வகைபடவிஞ்சும் விறலே வாகை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:—இங்கு 'வாகைச்'சொல் கொண்ட பொருட்டொடர்பாலும், 'புறநூற் புலவர்' எனும் எழுவாய் அவாய் நிலையானும் கொள்ளப்பட்டன.

இழிவொடு பழிபடு மெல்லாத்துறையும் வெறுத்து விலக்க வேண்டுமாதலின், அவற்றை நீக்கத் 'தாவில் கொள்கை'என்றடை கொடுத்துப் புரைதீர் திறலெதுவும் வாகைக் குரித்தெனவரையறுத்துத் தெளித்த செவ்வி வியத்தற்குரியது.

அவரவர் துறையில் பிறருடனுறழ்ந்து மேம்படு வெற்றி பெறுதல் 'வாகை' எனப்படும். உறழ்பவரின்றி ஒருதுறையில் ஒப்பற்றுயரும் பரிசும் வாகையேயாகும்; மேம்பட்டு வீறு பெறுதலே வாகையாகலின், அதற்கு

உறழ்ச்சி (போட்டி) இன்றியமையாததன்று. இசைபடப் புகழும் பாடாணின் வேறாய், உறழ்வாரை வென்றுயரும் வீறும் எதிர்ப்பின்றி ஒருதுறையில் மேம்படும் விறலும் ஒப்ப வாகைவகையி லடங்கும்.

செய்யுள்:—1 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்' எனும் இடைக்குன்றூர் கிழார் புறப்பாட்டிறுதியடிகள், ஒத்தாரோ டுறழ்ந்துவென்ற வாகை குறிப்பதறிக.

'இன்றி னூங்கோ கேளலம்
......................
'நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடும் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.' (புறம் 76.)

இன்னும் 'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்' எனும் கோவூர் கிழார் பாட்டினிறுதியில்,

'விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலும் உண்டென் றலமந்து......
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே' (புறம். 31)

எனவருவது, எதிர்ப்பாரின்றி உலகறிய வுயர்ந்த தறுகண் வீறு கூறும் வாகையாதல் காண்க.

சூத்திரம்:—20.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்,
நெறியி னாற்றிய அறிவன் தேயமும்,
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்,
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்,
அனைநிலை வகையோ டாங்கெழு வகையில்,
தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.

கருத்து:—இது, வாகையின் சிறப்புவகைகளைக் கூறுகிறது.

பொருள்:—அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் = ஆறு வேறுவகை மரபினரான பார்ப்பாரின் சிறப்பியல்பின் சார்பாயும், ஐவகை மரபின் அரசர் பக்கமும் = ஐவேறு குடிவகையினரா யாளும் மன்னர் இறைமைத் திறமையின் சார்பாயும்; இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் = அறுவேறு மரபினரான மற்றைய தமிழகமக்களின் சிறப்பியல்களின் சார்பாயும்; மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்தேயமும் = வழுவற்ற வகையால் நிகழ்ச்சிகளை வெயில் மழை பனியெனும் தன்மையால் வேறுபட்ட முக்காலத்திற்குமேற்ப முட்டின்றிக் கடைபோக நடத்தி முடிக்கும் அறிஞன் திறல்சார்பாயும்; நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும் = எட்டுவகையில் நோற்பார் நோன்பின் சார்பாயும்; பாலறிமரபில் பொருநர்

கண்ணும் = அறத்தின் பாகுபாடறிந்த முறையாற் பொருவார் போர்த் திறத்தின் சார்பாயும்; [இங்கிதனை இரட்டுறமொழிதலாக்கி, ஒப்ப நடிப்பவர் பொருநுத் திறலையும் குறிப்பதாகக் கொள்ளுதலும் கூடும்; (பொருந் = ஒப்பு; போல நடித்தல்)] அனைநிலைவகையொடு = அத்தன்மைய நிலையில் வேறலின்கூறாய் வீறுதரும் பிறவகை வினைவிறற்றுறையுடனே; ஆங்கெழு வகையிற் றொகை நிலைபெற்ற தென்மனார் புலவர் = ஏழு வகையாகத் தொகுக்கப்படும் தன்மையுடையது (வாகைத் திணை) என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:—தொகைநிலை பெற்றது என்ற வினைக்கேற்ப, ''வாகைத்திணை'' எனும் எழுவாய் கொண்ட பொருட்டொடர்பால் முன்னைச் சூத்திரத்திலிருந்து கொள்ளப்பட்டது. 'ஆங்கு' உரையசை. புலவர் எனவாளா கூறினும், இடம்பொருட் பொருத்தம் நூற்போக்குகளுக்கேற்பப் 'புறநூற் புலவர்' என உரை கூறப்பட்டது.

'அறுவகைப்பட்ட பார்ப்பனர்' என்றதனால் தொல்காப்பியர் காலத் தமிழகத்தில் பார்ப்பார் மரபால் அறுவேறு பிரிவுடையார் என்பது தெளிவு. இதையடுத்து அரசர் ஏனோர்களுக்கு மரபால் வகை எண் கூறப்படுதலின், பார்ப்பனரின் அறுவகையும் அவர்தம் மரபு பற்றியதேயாகும்; மரபுச்சொல் குடிவகை குலமுறை வழக்காறுகளைக் குறிக்கும்.

இனி, ஆறு தொழிலுடைமையால் பார்ப்பார் அறுவேறு வகையினராகாமை வெளிப்படை. ஓதுவியாது ஓதும்வகையார், ஓதாது ஓதுவிக்கும் வகையார், என்ற

முறையில் ஒவ்வொரு தொழில்வகையால் பார்ப்பாரை வெவ்வேறு மரபினராய் வகுப்பது யாண்டும் கேட்கப் படாதது.

இன்னும் இருபிறப்பாளருள் ஆறுதொழிலில் பின்னோர்க்கின்றிப் பார்ப்பாருக்குச் சிறப்புரிமைய மூன்றே:— ஏற்றல், வேட்பித்தல், ஓதுவித்தல், இவை வீறுதரும் பெற்றியதன்றாதலின், வாகைவகை யாகா. கொடைக்கு மாறாகக் கொள்ளுதலும் உயிர்செகுத்துண்டு வேட்டலும், வேதனத்துக்கு ஓதுவித்தலும் வெற்றிக்குரிய வாகையாகத் தமிழர் கொள்ளார். அவை வாகைவகையாய்ப் பண்டைச்சான்றோர் பாடாமையானும், இங்குக்கருதற்கில்லை எனவே, இக்காலப் பார்ப்பார்—எண்ணாயிரவர்—மூவாயிரத்தார்—வடமர்—சோழியர்—என வெவ்வேறு மரபினராதல்போல, முற்காலத்தமிழகத்தும் பார்ப்பார் மரபால் ஆறுவகை பிரிந்தவராதல் இயல்பு இனி, அறுவகை வைதிக மத மரபாக அறுவகைப்பட்டவ ராதலும் கூடும். எனைத்து வகையாயினும், இங்கு மரபால் அறுவகையிற் பிரிவுடைய பார்ப்பார் பரிசு குறிப்பதல்லால், அவர் அனைவருக்கும் பொதுவாகும் வினையாலவரை அறுவகைப் படுத்தல் தொல்காப்பியர் கருத்தன்மை ஒருதலை. துவக்கத்தில் தென் தமிழ் வரைப்பில் வந்து புகுந்த வம்பப் பார்ப்பார் மிகச்சிலராவர். மரபாலன்னோர் அறுவகையராதல் அக்காலத்தனைவரு மறிந்ததொன்றாகலின் வகை விரியாது அதன் தொகை கூறப்பட்டது, யாவருமறிவதைக் கூறுதல் மிகையாதலின்; இருசுடர் மூவேந்தர், நானிலம் என்புழி, சுடர்வகைவேந்தர் குடிவகை நிலவகைகளை விரித்தல் வேண்டாததுபோல. இதற்பின் ''ஐவகை மரபின் அரசர்''—''இருமூன்று மரபின் ஏனோர்'' என அனைவரும் அறிந்த அவர் மரபுவகை விரியாது தொகை

எண்ணுற் குறிப்பதுபோல, அக்காலம்யாவருமறிந்தபார்ப் பனர் மரபுவகை ஆறுதலின் எண்மட்டும் கூறப்பட்டது.

வேந்தர்தம் வாகைக்குரியவை போர்வென்றிகொடை செங்கோற்செவ்வி போல்வன. அதுவேபோல் ஏனைய தமிழ் மக்களுக்கு அவரவர்கொண்ட தவறறு தொழில் எல்லாம் வாகைக் குரியவாகும். ஐவகை மரபின் அரசர் என்றது, சேர, சோழ, பாண்டியரராவார் முடிவேந்தர் குடிமூன்று, ஆளுதற்குரிய வேளிர் குடி ஒன்று, மற்றைய குறுநில மன்னர் குடிமரபொன்று, ஆக மன்னவர் ஐவகை மரபினராய்ப் பண்டைத் தமிழகத் தாண்டன ராதலின்; 'அரசர்' எனப்படுதலான், ஈண்டுக் குறிப்பது ஆளுமன் னரை மட்டுமே. **தமிழ் வழக்கில் ஆளாத அரசர் என்றொரு சாதியில்லை.** அமர்தொழில் தறுகண் மறவர் அனைவருக்கும் பொது உரிமை. அத்தொழில் புரிபவர் பொருநராவதல் லால், அரசர் எனப்படார்.

இனி 'இருமூன்று மரபின் ஏனோர்' என்றதும், தமி ழர் மரபுவகையே குறிப்பதாகும். பண்டைத் தமிழகத் தில் மக்கள் மரபாலும் தொழிலாலும் ஒத்தஉரிமையுடன் வாழ்ந்தவர்கள்; அவரிடைப் பிறப்பா லுயர்வு தாழ்வுடை மையும், விரும்பும் வினைபுரியும் உரிமை விலக்கும் வழக்கா றில்லை. தமிழர் வாழ்க்கை முறை ஒழுக்க வழக்கம் விளக் கும் தொல்காப்பியரின் அகப்புறத்திணை யியல்களில் யாண்டும் வடநூல் சுட்டும் வருணவகைக் குறிப்பு ஒரு சிறிதுமில்லை. இவ்வுண்மை 'பெயரும் வினையு மென்றா யிருவகைய' எனும் சூத்திர உரையில் விரித்து விளக்கப் பட்டது. அதனாலும், இங்குத் தொழிற்றுறையில் வாகை சூடுவோரின் மரபுவகையே கூறுதலானும், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' வழக்கன்றிப் பிறநூல்

மரபுகள் பேணுமையே தொல்காப்பியரின் துணிபாதலா னும், ஈண்டு நிலம்பற்றிய தமிழர்மரபுவ்வகை சுட்டுவதே கருத்தாதல் தேற்றமாகும். தமிழரின் தாவில் கொள்கை வினையனைத்தும் வாகைக்குப் பொருளாக,வெற்றி விரும்பு மக்களின் மரபுவகைகளையே இங்கு எண்கள் சுட்டுவது ஒருதலை. ஆயர், குறவர், உழவர், பரவர், என முல்லை முதல் நானில மக்களும், நிலக்குறிப்பின்றி யாண்டுமுள்ள 'வினைவலர்', 'ஏவன் மரபினர்' என் றிருவகையின் மக்க ளுமாக மரபால் அறுவகைப்பட்ட தமிழ்க்குடிகள் உண்மையைத் தொல்காப்பியரே அகத்திணை யியலில் தெளித்துளாராதலின். தமிழர் புறவொழுக்கம் கூறுமிவ் வியலின் இச்சூத்திரத்தும் தமிழரை இருமூன்று வகை யின் ஏனோர் என்றடங்கக் குறிப்பதே அவர்கருத்தா மெனத் தேர்வது பொருத்தமாகும். அகத்திணை குறிக்கும் 'அடியோர்', பிறர்போல் இன்ப ஒழுக்க மேற்பாராயினும், தாம் பிறர் உடைமையாய்த் தனிவினையுரிமை தமக்கில ராதலின், வாகைக் குரியா ராகாரென்பது வெளிப்படை. அவரொழியத் தமிழர் அறுவகையாரே வாகைக்குரியர்.

இப்பழந் தமிழ் மரபுகள் கருதாமல், முன் உரை காரர் இங்கு முதன் மூன்றடிகளும் வடநூல்கூறும் வருண வேறுபாடுகளை அவரவர்க் கறுதியிட்டு வகுத்த தொழிற் றெருகுதியுடன் இங்குக் குறிப்பன போலக் கொண்டு பொருந்தாப் பொருள் கூறி யிடர்ப்படுவர். தொல்காப்பி யரின் துணிந்த நோக்கும், சூத்திரச்சொற்றொடர்ப் போக் கும் தெற்றெனத்தெளிக்கும் செம்பொருளைச் சிந்தியாமல், பழங்கால வழக்குகளை யறியாததால் தாமறிந்த தங்காலப்

பிறநூற் கொள்கைகளை அறப்பழந் தமிழ்நூலுட் புகுத்த முயன்றவர் மயங்கலாயினர். இங்கு வருண கரும வரையறை விளக்குவது கருத்தாமேல், அதைத் தெளிக்கும் சொற்பெய்தல் எளிதாகும்; அதற்கு மாறாகத் தொழிற் சுட்டொழித்துக்,குடிசுட்டும்'மரபு'ச் சொற்பெய்தமைத்த சிறப்பின் குறிப்புச் சிந்திக்கற்பாற்று.

> "அறுதொழிலுடைய பார்ப்பனர் பக்கமும்,
> ஐவகைத் தொழிலுடை யரசர் பக்கமும்,
> இருமூன்று தொழிலுடை ஏனோர் பக்கமும்"

என ஏற்ற தொழில்சொற் கூற்றால் விளக்கும்ஆற்றலின்றி இயைபினை மறந்து வேற்றுப்பொருள் விளக்கும் மரபுச் சொற் பெய்தனரென்று கூற யாரும் துணியார். இன்னும் இங்கு வருணவகை விளக்குவதே கருத்தாயின், உரிமையுடைய இருபிறப்பாளர் மூவரையுமுறையே கூறிப், பிறகு அவர்க்குரிய அடிமைகளாய் உரிமையற்ற நான்காம் வருணத்தாரையும் வரிசை முறையே வகுத்துக் கூறுவர். அதைவிட்டுப் பார்ப்பாரையும் ஆளும் வேந்தரையும் மட்டும் சுட்டி, வைசியரையும் . ஆளாக்கத்திரியரையும் அறவே விட்டு, அந்தணரும் அரசரும் அல்லார் எல்லாரையும் சூத்திரருடன் சேர்த்து ஓராங்கெண்ணி ஒருவகுப்பாக்கி ஒத்தவாகைத் தொழிலுடைய "ஏனோர்" எனத் தொகுத்துச் சுட்டியதொன்றே வருண தரும வகையெதுவும் கருதுங் குறிப்பிங்கின்மையினை வலியுறுத்தும். அன்றியும், தமிழகத்தில் நான்கு வருணம் என்று மின்மை யாவருமறிந்த உண்மை. தமிழரொடு கலவாத் தருக்குடைய பார்ப்பார் தமிழருள் கத்திரியர் வைசியரென

யாரையும் தழுவினதில்லை. உணவும் மணமும் ஓத்தும் வேள்வியும் முப்புரிச் சடங்கும் இருபிறப் பெய்தலும் இன்னபிறவும் தம்மரபினர்க்கு ஒத்த உரிமையைத் தமிழருள் யார்க்கும் பார்ப்பார் தாரார். இல்லாக் கற்பகம் பொல்லா யாளிகள் கதைக்கப்படுதல்போல், இடை இரு வருணமும் வடவர் புனைந்த நூற்கதையன்றித் தமிழக வரைப்பில் வழக்காறில்லை.

இன்னும், பார்ப்பாரல்லா மற்றைய மூன்று வருணத் தார்க்கும் மனு முதலிய வடநூல்கள் விதிக்கும் தொழில் வகைகள், இச்சூத்திரப் பழையஉரைகாரர் அவரவர்க்குக் காட்டும் தொழில் வகைகளுடன் முற்றும் முரணுதலா னும், அவருரை பொருந்தாமை தேறப்படும். தமிழரெல் லாரும் கடைவருணச் சூத்திரர் என்பதே பார்ப்பனர் துணிவு. மற்றைய மேலோர் மூவருக்கும் அடிமைகளாய்த் தொண்டு புரிவதொன்றே அவர்க்குரிய தொழில்; பிற தொழிலெதுவும் தமக்குத்தம் பயன்கருதி மேற்கொள்ளு முரிமை சூத்திரருக்குச் சிறிதுமில்லை. ஒத்த உணவு மணம் ஓதல் வேட்டல் தொழில் முதலிய ஆரிய மக்களுரிமை எதுவுமில்லா இழிந்த அடிமைச் சூத்திரரை இருபிறப் புடைய வைசியரோடெண்ணி, வைசியர் தொழில்களைச் சூத்திரருக்குரித்தாக்கினதுமன்றி, தரும நூல்களில் வைசியருக்கும் விலக்கிய அறுதொழிலுடைமையையும் சூத்திரரான நான்காம் வருணத் தமிழருக்குத் தந்து கூறும் உரை ஆரிய நூல்களொடு முரணித் தமிழ் மரபு மழித்ததாகும். வரலாற்றுண்மை சிறிதுமறியாது வேளா ளருள்ளிட்ட தமிழ்ப்பெருமக்களை எல்லாம் கடைக் கீழடி

மைச் சூத்திர வருணத்தவரெனக்கூறுந்துணிவு அறிவறம் வெறுக்கும் வெற்றுரையாகும்.

இனி, பெரும் பொழுதாறும் வெயில், மழை, பனி என்ற மூன்றிலடங்கும். மூவகைக் காலமும் "நெறியினாற் றிய அறிவன்" என்றது, தன்மையால் முழுதும் வேறு பட்ட வெயில் மழை பனி என்ற மூவகைக் காலங்களின் நிலைமையும் விளைவும் நுண்ணிதினுணர்ந்து காலத்தா லாற்றுவ ஆற்றிப் பயன்கொள்ளும் மதிநுட்பம் நூலோ டுடைய அமைச்சரைக் குறிப்பதாகும்.

நாளும் கோளும் கண்டதுபோலக் கொண்டு கூறி வயிறு வளர்ப்போர், கேட்போர் விரும்பும் எதிர்கால நன் மைகளைப் புனைந்து கூறித் தந்நலம் பேணுமளவினர். அவரை எதிர்கால விளைவுகள் எடுத்துக்கூறும் கணிகளெ னப்படுவதன்றி, மூவகைக்காலமும் முறையின் ஆற்றிய அறிவர்என்பது அமையாது. அறிவோடமையாது "ஆற்று டலும்" கூறுதலால், கணிகளின் வேறாய், வருவன சூழ்ந்து செயல்வகை தேர்ந்து ஆய்ந்தாற்றும் அறிஞரான அமைச் சரைக் குறிப்பதே கருத்தாதல் தேற்றம்.

தாபதவழக்கு நாலிரண்டாதலு மக்கால வழக்கு, தாபதர் = தவம் செய்வார்; [தவம் = உற்ற நோய் நோற் றல். (நோற்றல் = பொறுத்தல்). உண்ணாமை, உறங் காமை, போர்த்தாமை. வெயிலிலிருத்தல், நீரில் நிற்றல், காமங்கடிதல், வறுமை பொறுத்தல், வாய்மையால் வருந் தல்போலத் திண்ணியோருள்ளங் கண்ணியவகையின ]

"அனை நிலைவகைய" என்பதில், "அனைய" எனுஞ் சொல் செய்யுளோசை நோக்கி "அனை" எனக் குறுகிற்று.

அவ்வகைப்பிற வாகைக்குரியவை ஆடல், பாடல், ஓவிய மெழுதுதல் போல்வன தேரும் குதிரையும் யானையு மூரும் திறல்வகை யெல்லாம் இதனுள் அடங்கும். இவை வாகை வகைகளே. வாகைத்துறைகளை அடுத்த சூத்திரம் கூறும்.

சூத்திரம்:—21.

கூதிர் வேனி லென்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய மரபினு
மேரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையு
மொன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானு
மரும்பகை தாங்கு மாற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமு
மொல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானு
மொல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானு மாவி னானுந்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமுங்
கட்டி னீத்த பாலி னானு
மெட்டுவகை நுதலிய வவையத் தானுங்
கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானு
மிடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்

பொருளொடு புணர்ந்த பக்கத் தானு
மருளொடு புணர்ந்த வகற்சி யானுங்
காம நீத்த பாலி னானுமென்
றிருபாற் பட்ட வொன்பதிற்றுத் துறைத்தே.

கருத்து:—இது, வாகைத்திணையின் துறை பதி னெட்டு ஆமாறு விளக்குகிறது. இவைகள் துறைகளென் றதனால் முன் சூத்திரம் கூறிய ஏழும் துறையாகாமல் வாகைத்திணையின் வகையாதல் தேறப்படும்.

பொருள்:—கூதிர் வேனில் என்று இருபாசறைக் காத லின் ஒன்றிக் கண்ணிய மரபினும் = கூதிர்ப்பாசறை, வேனிற்பாசறை, என்னும் காலத்திற்கேற்ப அமைத்த கட்டூர்களில் போர்விருப்பால் பொருந்தியிருந்து அமர் கருதிய முறையும். (பாசறை எனினும் கட்டூரெனினும் ஒக்கும்.)

கூதிர்ப்பாசறைக்குச் செய்யுள்:—

'புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர, விறறந்
தின்னே முடிகதில் லம்ம; மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்

பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற் றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை,
சுவன்மிசை யமைத்த கையன், முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்துப் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே
(நெடுநல் வாடை வரி 166 முதல் 188 முடிய )

நக்கீரரின் இப்பழம் பாட்டடிகளில் 'வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கி' என்பது முதல் பாசறை யில் கூதிரின் பரிசு கூறப்படுவ தறிந்தின்புறுக.

'மலைமிசைக் குலைஇய, எனும் மதுரை எழுத்தாளன் அகப்பாட்டும் 'மூதில் வாய்த் தங்கிய' எனும் பெரும் பொருள் விளக்க வெண்பாவும் இத்துறைச் செய்யுட்க ளாகும்.

இனி, வேனிற் பாசறைக்குச் செய்யுள்: —

"பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை ..

.............................. ...............

'தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்தும்,
ஒருகை பள்ளி யொற்றி, யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி, நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
லைகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி,
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின ... ......

. ....... ... ....................
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துணைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே"

(முல்லைப்பாட்டு. வரி 6; 71 முதல் 86 முடிய;
100 முதல் இறுதிவரை)

நப்பூதனார் இம்முல்லைப் பாட்டடிகளில் வினைமேற் சென்ற தலைவன் மீளற்குரிய காருக்குமுன் போரைவிரும் பிக் காதலைவென்று களத்துத்தங்கும் வேனிற்பாசறைப் பரிசு விளக்குதல் கண்டு மகிழ்க.

2 ஏரோர் களவழியன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்= களமர் களத்தில் நெற்போரடித் தல் முதலிய விழவார்ப்போடு, போர்க்களத்தில் தேர் மறவர் வெற்றிவிழவின் வீறும்;

ஏரோர் களவழிக்குச் செய்யுள்:

"குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பின் நறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்."
(பெரும்பாண். வரி 197—205)

இனித்தேரோர் களவழிக்குச் செய்யுள்:—(1)

'உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பருதிசுமந் தெழுந்த யானை—இருவிசும்பிற்

செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து. (களவழி, 4)

"எனைப்பெரும் படையனோ சினப்போர்ப் பொறையன்
என்றனி ராயின், ஆறுசெல் வம்பலிர்!
மன்பதை பெயர, அரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றாடு துணங்கை
மீபிணத் துருண்ட தேயா வாழியிற்
பண்ணமை தேரு மாவு மாக்களும்
எண்ணற் கருமையின் எண்ணின்றோ விலனே;
கந்துகோ ளீயாது காழ்பல முருக்கி
உகக்கும் பருந்தி னிலத்துநிழல் சாடிச்
சேண்பரன் முரம்பி னீர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவிற்பல்
யானை காண்ப லவன்தானை யானே.

—பதிற்று-செய். 77

(3) தேரோர் வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்=தேர்மறவரை வென்றழித்த குரிசிலின் தேர்முன் அவன்படை மறவர் களித்தாடுங் குரவைக் கூத்தும்.

செய்யுள்:—(1)

"கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
வாளழி வாங்கி அதரி திரித்த
வாளே ருழவன் மறக்களம் வாழ்த்தி,

.............................................

தேரூர் செருவும் பாடிப் பேரிசை
முன்தேர்க் குரவை முதல்வனை வாழ்த்தி."

—சிலப்பதிகாரம் கால்கோட்காதை வரி 232-234 & 239-240.

(4) ஒன்றிய மரபிற் பின் தேர்க்குரவையும் = அதனொடு பொருந்து முறையானே, வென்ற குரிசில் சென்ற தேரின்பின் அவன் தானை மறவரும் ஏனை விறலியரும் அவன் புகழ் பாடி வாழ்த்தியாடும் குரவைக் கூத்தும்; (இனி, தேர்ப்பின் களத்துப் பிணக்கூழுண்ணும் பேய்களாடுங் குரவை எனினும் அமையும்.)

செய்யுள்:—

"வென்று களங்கொண்ட வேந்தன்தேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை—நின்றளிப்ப
உண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டாடின குரவைக் கூத்து."

—பெரும்பொருள் விளக்கம்

"பின்றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை" என்பதுமது.

—சிலப்பதிகாரம் கால்கோட்காதை வரி 241)

(5) பெரும்பகை தாங்கும் வேலினானும் = தனதிற் பெரிய பகைப்படையைத் தடுக்கும் வேல் வென்றியும்.

[பகை—என்பது பகைப்படைக்கு ஆகுபெயர். தாங்குதல் = தடுத்தல்.]

செய்யுள்:—

''பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே;
இரும்புற நீரு மாடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும்;
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குர லிரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினும் செல்லும்ஆங்
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே.
—புறம். 332

(6) அரும்பகை தாங்கும் ஆற்றலானும் = தடுத்தற் கரிய மாற்றலர் தானை மடங்கத் தடுக்கும் திறலும்.

[இதிலும், ''பகை''—பகைப்படைக்கு ஆகுபெயர்.]

'வணங்கு தொடைப்பொலிந்த வலிகெழு நோன்றாள்
அணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச்செறி யுழுவை இரைக்குவந் தன்ன—
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து'
''விழுமியம், பெரியம் யாமே, நம்மிற்
பொருநனு மிளையன், கொண்டியும் பெரிதென'' —
எள்ளி வந்த வம்ப மள்ளர்,
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர,

ஈண்டவர் அடுதலு மொல்லான்; ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே (புறம்78)

[இடைக் குன்றூர் கிழாரின் இப்புறப்பாட்டு நெடுஞ் செழியன், தன்னை மதியாமல் தன் இளமைஇகழ்ந்து மேல் வந்த அரும்பகை தாங்கி வென்ற, ஆற்றலை விளக்குகிறது. மேல்ஐந்தாவதும் இதுவும் ஒரு குரிசிலின் தறுகண்மைத் திறலே குறிப்பினும், முன்னதுவேல்விறலை விதந்துகூறப், பின்னது போர்த்திறனும் பெருவலியும் பேசுகிறது.]

7 புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும் = சிறந்து பொருந்தாச் சிறியவாழ்வினும் வண்மைகுன்றா வேளாண் மையும்.

'இடனில் பருவத்தும் ஒப்புரவுக் கொல்கார்
கடனறி காட்சி யவர்'...ஆதலின்,

வறுமைக்கஞ்சாத்தறுகணாளருக்கம் வாகைக்குரித்தாயிற்று.

செய்யுள்:—

'எருது காலுறாஅ திளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி

வரகுகட னிரக்கு நெடுந்தகை
அரசுவரிற் றுங்கும் வல்லா ளன்னே , (புறம். 327)

இனி, இதற்கு 'வாழ்க்கையை விரும்பாது, வான் விரும்பிப் போர் மகிழும் வல்லாண்மையும்' எனப்பொருள் கூறினும் பொருந்தும். அதற்குச் செய்யுள் வருமாறு:—

'கலிவர ஊழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்தர்—ஒலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி யீண்டினார்
புண்ணியமாம் போர்க்களத்துப் போந்து.
(பாரதவெண்பா)

8 ஒல்லார் நாணப் பெரியவர்க்கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத் தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும் = பகைவரும் நாணுமாறு தம் தலைவரைக் குறித்து முன்சொன்ன வஞ்சின வுரையொடு பொருந்தப்ப அமைத்துப், பழந்தொடர்புடைய (படையா) உயிரைக் களப்பலியாக வழங்கும் மறவேள்வியும்.

செய்யுள்:—1.

'குழாக்க ளிற்றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக் களம்போல மெய்ம்மலி யுவகை
ஆண்மை யுள்ளம் கேண்மையிற் றுரத்தலின்
அழுந்து படப்புல்லி விழுந்து களம்படுநரும்,
... ... ... ......... ...
பிறப்பும் பெருமையும் சிறப்பும் செய்கையும்

அரசறி பெயரும் உரைசெய லாண்மையும்
உடையோ ராகிய படைகோண் மாக்கள்—
சென்று புகுமுலக மொன்றே யாகலின்—
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையும் தீர்ந்து, தம்மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது புனைந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தனரே.
(பழையபாட்டு, புறத்திரட்டு i354)

செய்யுள்:—2.

'இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்?' (குறள். 779)

9 ''ஒல்லாரிடவயிற் புல்லிய பாங்கினும் = பகைவரை இடம்வாய்ப்புழி அன்பாற் றழுவிக் கொள்ளும் பெருந்தகவும்;

செய்யுள்:—1

''பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.— (குறள் 874)

செய்யுள்:—2

அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்;
மறத்திற்கு மஃதே துணை.— (குறள்—76)

இனி, இதற்குப் "பகைவர் நிலங் கைப்பற்றியாளும் திறலும்," எனப் பொருள் கூறுவர் இளம் பூரணர். அப்பொருளில் இத்துறைக்குச் செய்யுள்:—

"நனிபுகன் றுறைது மென்ற தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கவர் அருப்பம் வெளவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குரிசில்."

—மதுரைக் காஞ்சி வரி 147-151)

குறிப்பு:—இவ்வொன்பதும் மறத்துறையில் வாகைக் குரியன இனி வரும் ஒன்பதும் அறத்துறையில் வாகைக் குரியவாகும்.

(10) பகட்டினானும் ஆவினானும் துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும் = எருதானும் பசுவானும் குற்றமற்ற சீர்மிகு சால்புடையார் பெருமையும்;

[பகட்டால் சிறப்புடைச் சான்றோராவார், கோழை படா மேழிச் செல்வராய வேளாண் மாந்தர்; ஆவாற் சிறப்புறுவார் ஆயர், அதாவது கோவலர். ஆவினானும் எனக் கொள்ளாமல், மாவினானும் எனப்பிரித்து, யானை குதிரையாகிய மாவினானும் என்று உரை கூறுவர் நச்சினார்க்கினியர்; அது மறத்துறைக்குப் பொருந்துமல்லாமல், அவரே கூறுகிறபடி முன் ஒன்பதுமட்டும் மறவகையாக இது முதல் பின் வரும் ஒன்பதும் அறவகை வாகைத்துறைகளாதலின், அவ்வரிசையில் முதலாகுமிது அறத்துறைப் பொருளோடமையாமை தெளிவு.]

1 பகட்டினாற் சிறப்புடைச் சான்றோர் பெருமைக்குச் செய்யுள்:—1

"யானை நிரையுடைய தேரோ ரினுஞ்சிறந்தார்
ஏனை நிரையுடைய ஏர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு?"
(பெரும்பொருள் விளக்கம்)

2 ஆவினாற் சிறப்புடைச்சான்றோர் பெருமைக்குச் செய்யுள்:—

"...... ........................மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழத்தலைச் சாம்பின்
அதளோன் துஞ்சும் காப்பி னுதள
நெடுந் தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்
நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்

சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்''.
(பெரும்பாண். வரி 147-168)

''ஆகாத் தோம்பி யாப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை''
(சிலம்பு அடைக்கலக். வரி, 120-121)

எனும் சிலப்பதிகார அடிகளும் இத் துறையாம்.

11 கட்டில் நீத்த பாலினானும் = அரசு கட்டிலை இகழ்ந்து துறக்கும் உரவோர் பரிசும்;

செய்யுள்:—

''பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவர் எய்தி யற்றே.
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்தும் ஆற்றா தாகலின்
கைவிட் டனரே காதலர்; அதனால்
விட்டோரை விடாஅள் திருவே;
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.'' (புறம். 358)

[இங்குக் ''கடிமனை நீத்த பாலினும் எனப்பாடங் கொண்டு, ''பிறர்மனை நயவாமை குறிக்கும்,'' என்பர் இளம்பூரணர். அஃதான்ற அறவொழுக்காமெனினும், இல்வாழ்வார் எல்லார்க்கும் பொது அறமாதலின் தனி ஒருவர் வாகைக்குரிய வீறுகாது. அன்றியும், அதனினும் அருமைத்தாகும் அறிவழிகாம வெறியொழி விறலை இதன் கீழ்க் ''காம நீத்த பாலினும் எனக்கூறுதலான், அதில டங்கும் பிறர்மனை நயவாமையைத் தனித்தொரு துறை யாக்குதலிற் சிறப்பில்லை. இன்னும், அப்பாடங்கொள் ளின், இறைமைச் செல்வத்தை இகழ்ந்து துறக்கும் உள்ள வெறுக்கையைக் குறிக்கும் வாகைத்துறை இல்லாதொழி யும் ஆகையால், இங்குக் ''கட்டில் நீத்த பால்'' எனும் பாடமே சிறத்தலறிக.]

12 எட்டு வகை நுதலிய அவையத்தானும் = எண் வகைச் சால்புகளும் நிறைந்தார் மன்றத்து மதிக்கப் பெறுஞ் சிறப்பும்;

குறிப்பு:—இது அவையத்து மூத்திருக்கும் வீறுகூறு கிறது. அத்தகைய சால்புகள்:- ஒழுக்கம், கல்வி, குடிப் பிறப்பு, வாய்மை, தூய்மை, நடுவுநிலை, அவாவின்மை, அழுக்காறுமை, எனப்படுதல் நூலானறிந்தது.

செய்யுள்:—

''குடிப்பிறப் புடுத்துப், பனுவல் சூடி,
விழுப்பே ரொழுக்கம் பூண்டு, காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித், தூய்மையின்
காத லின்பத்துட் டங்கித், தீதறு

நடுவுநிலை நெடுநகர் வைகி, வைகலும்
அழுக்கா றின்மை, அவாவின்மை, யென்றாங்
இருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை.'' —ஆசிரியமாலை

(13) கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும் =வரையறுத்த ஒழுக்கங்கருதும் உரனும்;

குறிப்பு:—கண்ணுமை, கண்ணுதல் அடியாகப்பிறந்த பண்புப் பெயர்; (கண்ணுதல் = கருதல்.) ஆளுதல் ஆண்மை எனவும், புகழ்தல் புகழ்மை எனவும் வருதல் போன்றது. விருப்பை வென்று அறிவாற் புலனைக் கட்டுப் படுத்துவதேஒழுக்கமாதலின், 'கட்டமையொழுக்க'மெனப் பட்டது. அது வாகையாதல், ''ஐந்தடக்கலாற்றின்'',— ''ஐந்தவித்தானாற்றல்''—எனப்புலனடக்குதல் அரிய திறலாகக் கூறப்படுதலானறியலாம். [இனி, ''கட்டமை'' என்பதற்கு 'அறநூல்விதித்த'எனப் பொருள்கூறித், தரும சாத்திரங்களுக்குச் சார்வபௌம ஆதிக்கமளிப்பர் சிலர்; தரும நூல்கள் மக்களுக்குத் தம்முள் மாறுபட விதிப்பன வாதலானும், அவற்றை எழுதியோ ரானைக்கு உளச் சான்றுக்கு எதிராக எல்லாரும் கட்டுப்படுதல் இயல்பன் றாதலானும், ஒருகால் அவ்வகைக் கட்டுப்பாடு வற்புறுத் தப்படுமேல் அது வாகையாகாமையானும், அது பொரு ளன்மையறிக.]

செய்யுள்:—(1)

''ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி'' — குறள். 25

செய்யுள் :—(2)

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்." —குறள். 6

(14) இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்= இடையறவின்றி வள்ளிய புகழைவளர்க்கும் கொடையும்.

செய்யுள் :—(1)

"ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம்,
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ,
அணிபூ ணணிந்த யானை யியறே
ரதியமான்; பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும், யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவே, பொய்யா காதே;
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா, வாழ்கவவன் தாளே." —புறம். 101

செய்யுள் :—(2)

"கடந்தடு தானை மூவிரும் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே." —புறம். 110

செய்யுள்: —(3)

"ஈயென இரத்த லிழிந்தன்று, அதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று,
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன்று, அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினு முயர்ந்தன்று,
தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணு ராகுப நீர்வேட் டோரே;
ஆவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்,
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர், அதனாற்
புலவேன், வாழியர் ஓரி! விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே."

—புறம். 204

(15) பிழைத்தோர்த் தாங்குங் காவலானும் = தவறிழைத்தோரைப் பொறுக்கும் ஏமமும்;

செய்யுள்:—(1)

"நிலமிசை வாழ்நர் அலமரல் தீர"

எனத் தொடங்கும் காமப்பல்கண்ணனார் புறப்பாட்டில் கீழ்வருமடிகள் இத்துறை குறிக்கும்.

"நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்,

நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே,
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்—
காண்டகு மொய்ம்ப! காட்டினை, ஆகலின்,
யானே பிழைத்தனென்; சிறக்க நின்னாயுள்,
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே." —புறம். 43

செய்யுள்:—(2)

"கருத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்;— ஒறுத்தாற்றின்
வானோங் குயர்வரை வேற்ப பயமின்றே
தானோன் றிடவருஞ் சால்பு." —பழமொழி 19

செய்யுள்:—(3)

"மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியால் வென்று விடல்." —குறள். 158

(இதில், மிகுதி = செருக்கு; தகுதி—பொறுமை; மிக்கவை = தவறுகள்.)

(16) பொருளொடு புணர்ந்த பக்கத்தானும் = மெய்ப்பொருள் பற்றிய உள்ளப்பரிசும்;

செய்யுள்:—

"மூந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்

மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனின் றவர்."  —திரிகடுகம். 35

இனி, (1) "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு."  (குறள். 354)

(2) "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி."

எனவரும் வள்ளுவர் குறள்களு மித்துறையாகும்.

(17) அருளொடு புணர்ந்த அகற்சியானும் = யார் மாட்டும் விரிந்து பெருகும் அருளொடு கூடிய துறவும்.

குறிப்பு:— கடனாற்றும் முயற்சிக் கஞ்சித் தனக் கொழிவு தேடும் போலித்துறவை விலக்கி, சுரந்து எல்லார் மாட்டும் பரந்து பயன்தரும் அகன்ற அன்பாற் பிறர்க்கென முயலும் மெய்த்துறவின் வீறே ஈண்டுக்கூறக் கருதலின், வாளா அகற்சி என்னாது "அருளொடு புணர்ந்த" என்றடையொடு தொடர்ந்து சுட்டப்பட்டது.

செய்யுள்:—(1)

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை."  (குறள். 244)

செய்யுள்:—(2)

"உண்டா லம்ம இவ்வுலகம்; இந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்

தமிய ருண்டலு மிலரே: முனிவிலர்;
துஞ்சலு மிலர், பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர்: பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே" —(புறம். 182)

(1) காமநீத்த பாலினானும் = வெல்லற்கரிய காமத்தைவெறுத்து விலக்கு மருந்திறலும்;

குறிப்பு:— இது துறவன்று; இல்வாழ்ந்தும் காமம் கடியும் உரனுள்ளமுடைய பெரியார் உண்மையால், வேண்டியவெல்லாம் ஒருங்குவிடும் பெருந்துறவின் வேறாய், இருநிலை வாழ்வினு மொருதலைநிற்போரறமாகும். முற்றும் பற்று விடும் கருத்தை இதிற் புகுத்தின், மேற் குறித்த தீரத்துறக்கும் "அகற்சி" யுளடங்கிக் கூறியது கூறுங் குற்றமாய் முடியும். ஆதலின், மேலது துறவும், இத்துறை துறவறம் கருதாது காமம் கடியும் இருநிலைக் கும்பொதுவான உரனுள்ளப் பெருமையும் விளக்குதல் வெளிப்படை.

செய்யுள்:—

"இளையர் முதியர் எனவிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா—இளையனைத்
தன்தாதை காமம் நுகர்தற்குத் தான்காமம்
ஒன்றாது நீத்தா னுளன்." —பெரும்பொருள் விளக்கம்

2 "எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்." (குறள். 910)

(இவ்வொன்பதும் மேற்கூறியாங்கு அறவகை வாகைத் துறைகளாகும்.)

என்றிருபாற்பட்ட ஒன்பதிற்றுத்துறைத்தே = என வகைக்கு ஒன்பதாய் இருவகையிலெண்ணியபதினெட்டுத் துறையுடையது வாகைத்திணை.

குறிப்பு:—பதினெட்டுத் துறைத்தே என்னுது, "இருபாற்பட்ட ஒன்பதிற்றுத்துறைத்தே" என்ருர்; மேற்கூறியாங்கு முன் மறவகையிலொன்பதும் பின் அறவகையிலொன்பதுமாக வாகைத்திணை துறைகொள்ளும்எனற்கு. இனி, இத்திணைத்துறை பதினெட்டும் தன்மையால் இருவேறு வகைப்படுதலின் அவற்றை ஒருசேர எண்ணுதலமையாதாதலின், "இருபாற்பட்ட" எனவும், வகைக்கு ஒன்பதேயாதல் குறிக்க "ஒன்பதிற்றுத்துறைத்து" எனவும் விளக்கினுர் இந்நூலார்.

இதில்வரும் இன்னும் ஆனும்உரை யசைகள்; பாங்கு பக்கம் என்பன இசை நிரப்பு; ஈற்றேகாரம் அசை.

சூத்திரம்:—22.

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே.

கருத்து:—இது, அகப் பெருந்திணைக்குக் காஞ்சித் திணை புறனு மென்பது சுட்டுகிறது.

பொருள்:— இதன் பொருள் வெளிப்படை.

குறிப்பு:—ஏகார மிரண்டில், முன்னது பிரிநிலை; மற்றது ஈற்றசை. பொறியவிக்கும் உரனின்றி இன்பம் விழைந்து மேவன செய்வார் காமவகை பெருந்திணையாவதுபோல, முயற்சி மேற்கொள்ளும் உரனின்றிநிலையாமை சொல்லி நெஞ்சழிய மனமடிவதே காஞ்சியாவதானும், இவ்விரண்டுக்கும் இடம் பொழு திரண்டும் வரையறையின்மையானும், பெருந்திணைக்குக் காஞ்சிபுறனாயிற்று.

சூத்திரம்:—23.

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

கருத்து:—இது, காஞ்சித்திணையின் இயல் விளக்குகிறது.

பொருள்:—பாங்கருஞ் சிறப்பின் = ஒப்பற்ற மறுமையின்பத்துக்கு; பல்லாற்றானும் = பலவழியானும்; நில்லா வுலகம் புல்லிய நெறித்தே = நிலையற்ற உலகியலை யிகழும் முறையினை யுடையது (காஞ்சித்திணை).

குறிப்பு:— நெறித்து என்னும் வினைக்கேற்பக் கொண்ட பொருட்டொடர்பால் காஞ்சித்திணை என்னுமெழுவாய் மேற் சூத்திரத்திலிருந்து கொள்ளப்பட்டது. பாங்கருமை = ஒப்பின்மை. 'சிறப்பு' வீடுபேறும் மறுமையின்பமாதல், 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்னுங் குறளானறிக. இன்னுருபு ஏதுப்

பொருட்டு. பல்லாறு, யாக்கைநிலையாமை, இளமை நிலையாமை, செல்வநிலையாமை போல்வன கூறுதலாம். மதுரைக் காஞ்சி இதற்கு எடுத்துக் காட்டாகும். இனி, இந்நூலில் இத்திணைக்கு வகுக்கும் துறைகளெல்லாம், உலகியலை இகழ்வதற்கு மாறாக, அதைத்தழுவியே அமைந் திருப்பதால், அதற்கேற்பப் பொருள் கூறுவாருமுளர். அவர் கூறும் பொருளாவது:- பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் = முறை சிறவாத பல துறையானும்; நில்லா வுலகம் புல்லிய நெறித்தே = நிலையற்ற உலகியலைத் தழுவியது காஞ்சித்திணை. இவ்வுரைக்கு, 'பாங்கு' முறைப் பொருட்டாகும்; 'அருஞ்சிறப்பு'-அருங்கேடன் என்பது போலச்-சிறவாமை குறிக்கும். இப்பொருளுக்கு, இதை யடுத்த சூத்திர உரையில் அவ்வத்துறைக்குக் காட்டும் பாட்டே போதியதாம்.

சூத்திரம்:—24.

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்,
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்,
ஏமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்,
இன்னனென் றிரங்கிய மன்னை யானும்,
இன்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்,
இன்னகை மனைவி பேஎய் புண்ணோற்

றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்,
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேஎத்த மனைவி யாஞ்சி யானும்,
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானும்,
முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ.
ஈரைந் தாகு மென்ப; பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்,
தாமே யேங்கிய தாங்கரும் பையுளும்,
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்,
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்,
கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்,
காதலி யிழந்த தபுதார நிலையும்,
காதல னிழந்த தாபத நிலையும்,
நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்,
மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவற் பயந்த
தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையும்,
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பிற் றுறையிரண் டுடைத்தே

கருத்து:-இது, காஞ்சித்துறை விழுப்பவகை பத்தும் விழும வகை பத்துமாக இருபதாமாறு கூறுகிறது.

பொருள்:-(1) மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும் = யார்க்கும் விலக்கொணாது இறுதிதரும் கூற்றினாற்றல் கூறும் பெருங்காஞ்சியும்;

'பல்சான்றீரே' எனும் நரிவெரூஉத்தலையாரின் புறப்பாட்டில் பின்வரும் அடிகளில் மாற்றருங் கூற்றின் பெருமை சாற்றுதல் அறிக;

(1) "........ .. . ............... ......
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ." (புறம் 195)

(2) உடற்றும் பிணித்தீ யுடம்பினுயிர் பெய்திட்
டடுத்துணர்வு நெய்யாக வாற்றறுவை யாகக்
குடித்துண்ணுங் கூற்றங் குடில்பிரியா முன்னே
கொடுத்துண்மின் கண்டீர் குணம்புரிமின் கண்டீர்
(சிந்தாமணி 2620)

2 கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் = இளமைகழிந்த முதியோர், மற்றையவர்க்கு அப்பரிசு சுட்டி யறிவுறுத்தும் முதுகாஞ்சியும்;

இதற்குப் பாட்டு:—

யாணர் வரவின் மேனா ளீங்கிவன்
இளமைச் செவ்வி நயந்த பேதையர்

காத லுண்கண் வருபனி நீங்கி
இன்னுந் துயில்கொண் டிலவே;..........

(ஆசிரியமாலை).

3 பண்புற வரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் மறத்தினானும் = தகுதி யொடுபட்ட பரிசு கருதி வாய்த்த புண்ணைக் கிழித்து உயிர் துறக்கும் மறக்காஞ்சியும்.

"பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க தானை தன்னொடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுக னெடுநிலை நோக்கி, ஆங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோன்; அந்நிலைச்
சென்றுழிச் செல்க மாதோ, வெண்குடை
யரசுமலைந்து தாங்கிய களிறுபடி பறந்தலை
முரண்கெழு தெவ்வர் காண
விவன்போ லிந்நிலை பெறுகயா னெனவே"

இதில், முன் ஒருவன் இறந்து கல்லான நிலையைப் போரில் புண்பட்ட ஒருவன் கண்டு, யாக்கை நிலையாமையை நினைத்துத், தன் புண்ணைக்கிழித்து உயிர் துறந்த தறுகண்மை கூறப்படுதல் அறிக.

4 ஏமச் சுற்றமின்றிப் புண்ணோற் பேஎயோம்பிய பேஎய்ப் பக்கமும் = பேணும் சுற்றத்தா ரின்மையால் புண்பட்டவனைப் பேய்பேணும் பேய்க் காஞ்சியும்;

"புண்ணனந்த ருற்றுணைப் போற்றுந ரின்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் கர்த்தனவே — உண்ணும்
உணையோரி யுட்க வுணர்வொடுசா யாத
விளையோன் இடந்த விடத்து."

5 இன்னனென் றிரங்கிய மன்னையானும் = இன்ன பரிசுடையா னென்று இறந்தபின் ஒருவனை அயலோர் பரிந்து கூறும் மன்னைக் காஞ்சியும்

"இளையோர் சூடார், வளையோர் கொய்யார்,
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி யணியாள்,
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே." (புறம்242)

6 இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும் = இது செய்யத் தவிர்ந்தால் இன்னவாக முடியக்கடவது எனக் கூறும் ஒப்பற்ற சிறப்புடைய வஞ்சினக் காஞ்சியும்;

"மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப: அவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயின், சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக;

அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ?—
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.'' (புறம் 71).

7 இன்னகை மனைவி பேஎய் புண்ணோற் றுன்னு தல் கடிந்த தொடாஅக் காஞ்சியும் = புண்பட்டோன் உளை யாவாறு இனிய ''வாயில் நகை'' வாய்ந்துவரும் அவன் மனைவி அவனைப் பேய் நெருங்காமற் காத்துத் தொட விடாத தொடாக்காஞ்சியும்;

''தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச்செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
யையவி சிதறி யாம்ப லூதி—
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்

காக்கம் வம்மோ, காதலந் தோழி!
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறி யுடைய நெடுந்தகை புண்ணே." (புறம் 281 )

8 நீத்த கணவற் றீர்த்த வேலிற் பெயர்த்த மனைவி ஆஞ்சியானும் = அவனுடலொடு தன்னையும் விட்டிறந்த கணவனை முடித்த வேலினால் அவன் மனைவி கண்டோ ரஞ்சுமாறு தன்னுயிரைப் போக்கிய ஆஞ்சிக்காஞ்சியும்;

"யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி
மந்தி சீக்கு மணங்குடை முன்றிலி
னீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானே தன்கொழுநன்
மூழுவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்குந்த னிளமைபுறங் கொடுத்தே."
(புறம் 247)

9 நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட் பாடஞ்சியமகட்பாலானும் = குடித்தொன்மையில் ஒவ்வா நிலையில் ஒத்தானாகக் கருதி மகள்கொள்ளப் படையொடு வந்த மன்னனொடு தொல்குடி மகளைப்படுத்தலஞ்சி, அதை விலக்க அவள் தன்னையர் வந்தவனோடு தம்முயிரைப் பொருட் படுத்தாது பொரும் மகட்பாற்காஞ்சியும்;

"களிறணைப்பக் கலங்கின காஅ" எனவரும் அடை நெடுங் கல்லியார் புறப் பாட்டில்,

"வந்தோர் பலரே வம்ப வேந்தர்
. ...................... . ............ ...
மைய னோக்கிற் றையலை நயந்தோர்;
அளியர் தாமே; யிவள்தன்னை மாரே;
செல்வம் வேண்டார், செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர், கதுவாய் வாளர்,
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலையர் கருங்கடை நெடுவேல்
இன்ன மறவர்த் தாயினும் மன்னோ
என்னா வதுகொல் தானே
பன்னெல் வேலிப் பணைநல் லூரே" (புறம் 345,)

"ஏர்பரந்த வயல்" என்னும் குன்றூர்கிழார் மகனார் புறப் பாட்டும், (புறம் 338) "கானக்காக்கை" என்னும் அரிசில் கிழார் பாட்டும் (புறம் 342) மகட்பாற் காஞ்சித் துறையை விளக்குதல் உணர்க.

10 கொண்டோன் தலையொடு, முலையும் முகனும் சேர்த்தி, முடிந்த நிலையொடு தொகைஇ, ஈரைந்தாகு மென்ப = இறந்த தன்கணவன் தலையைத் தன் மார்பினும் முகத்தினும் அணைத்து அவனோடு மனைவிதானும் மாய்ந்த முதுகாஞ்சியொடு கூட்டி விழுப்பவகைக் காஞ்சித்துறை பத்தாகும் என்பர் புறநாற்புலவர் ஒருசாரார்.

"...... ..................................

**என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்**
**பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள,**
*நின்றான் எழுந்து, நிறைமதி வாண்முகங்*
*கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற."*

—*சிலப்பதி-காதை* 19. *வரி* 60 *முதல்* 63.

*இனி, விழுமவகைக் காஞ்சித்துறை பத்தும் கூறுகிறார். அவை வருமாறு:—*

**11.** *பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றமாய்ந்த பூசன் மயக்கத்தானும் = மிகுந்த புகழொடு பொருது மடிந்த குரிசிலொருவனை வளைந்திரங்கும் சுற்றத்தார் அரற்றி ஓய்ந்த அழுகைக்குரலரவ மயக்கமாம் காஞ்சியும்;*

*"இரவலர் வம்மி னெனவிசைத்த லின்றிப்*
*புரவலன் மாய்ந்துழியும் பொங்கும்—உரையழுங்க*
*வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்கா*
*தோற்கண்ண போலுந் துடி."*  —*தகடூர் யாத்திரை.*

*"பாடுநர்க் கீத்த" என்னும் பொத்தியார் புறப்பாட்டும் இத்துறையே கூறும்.*

**12.** *தாமே யேங்கிய தாங்கரும் பையுளும் = போரில் ஊறுபட்டு ஓய்ந்தோர் தாங்களே பொறுத்தற்கரிய வருத்தங்கொண்டு ஏங்கும் துன்பக் காஞ்சியும்;*

*[பையுள் = துன்பம்.]*

இதில் தாமே என்பதை மனைவியர்மேல் ஏற்றி வேறு பொருள் கூறுவாரும் உளர். அது பொருந்தாமை வெளிப் படை.

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபத
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே."
—புறம். 74

13. கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல் வோர் செப்பிய மூதானந்தமும் = கொழுநனொடு மாய்ந்த மனைவியின் மீச்செலவைக்கண்டு வழிச்செல்வோர் இரங்கிக் கூறும் மூதானந்தக் காஞ்சியும்;

(1) "......... கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே, தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக் —
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி."
—சிலப்பதி-காதை 20. வரி 77-81

இதில், கண்ணகி காட்டிய சான்றால் தான் குற்றமற்ற கோவலனைக் கொல்வித்த தன் தவறுகண்டு நெடுஞ்செழி யன் உயிர்துறக்க, அவன் பெருங்கோப்பெண்டும் அவ

னுக்குப்பின் இருக்கத் தரியாமல் உடன் உயிர் இழந்தது கூறும் மூதானந்தம் வருதல் காண்க.

(2) "ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
இருயி ரென்ப ரிடைதெரியார்; —போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னுட்கு
முடனே யுலந்த துயிர்" (புற—பொரு—வெ—மா)

14 நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து தனிமகள் புலம்பிய முதுபாலையும் = மிகப்பெரிய சுரத்திடைக் கொழுநனையிழந்து தனியளாய் மனைவி யரற்றும் முதுபாலைக் காஞ்சியும்;

1 "என்றிறத் தவலங் கொள்ள லினியே
வல்வார் கண்ணி யிளையர் திளைப்ப
நகாஅ லெனவந்த மாறே யெழாநெற்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளையில் வறுங்கை யோச்சிக்
கிளையு ளொய்வலோ கூறுநின் னுரையே." (புறம் 253,)

2 ' ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே,
யணைத்தனன் கொளினே யகன்மார் பெடுக்கவல்லேன்;
என்போற் பெருவிதிர்ப் புறுக, நின்னை
யின்னு துற்ற வறனில் கூற்றே;
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே." (புறம். 255)

"கலஞ்செய்கோவே" என்னும் புறப்பாட்டும் இத்துறையேயாம்.

15 கழிந்தோர் தேஎத்துக் கழிபடருறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் = மாய்ந்தோர்மாட்டு அவருக்காக மிகவருந்தி மறறையோ ரிரங்கும் கையறு நிலைக்காஞ்சியும்;

''இளையோர் சூடார், வளையோர் கொய்யார்,
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி யணியாள்,
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.'' (புறம்.242)

இதற்குக், ''கணவனொடு மனைவியரும் கழிந்துழி இறந்துபடா தொழிந்தஆயத்தாரும் விறலியரும்தனிப் படருழந்த செயலறு நிலைமை'' எனக்கூறுவர் நச்சினார்க்கினியர்; அது மற்ற மூதானந்தம் கையறுநிலைகளு ளடங்குதலின் ஈண்டுப் பொருந்தாமை யறிக.

16 காதலியிழந்த தபுதார நிலையும் = அன்புடை மனைவியை யிழந்த கணவனது தபுதாரநிலைக் காஞ்சியும்;

''ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளி
ரிழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்,
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.'' —புறம். 251

குறிப்பு:—''தாரம்தபு'' என்பது ''தபுதாரம்'' என நிலைமாறி நின்றது; முன்றில், கடைப்புறம் என்பனபோல. அதனால் சொல்மாற்றி, ''தாரம்தபுநிலை = இல்லாளையிழந்த நிலை'' எனப் பொருள் கொள்ளற்பாற்று. தபுதல் = கெடுதல்; அதாவது இழவு

17. காதலனிழந்த தாபதநிலை = காதற் கணவனையிழந்து தவிக்கும் மனைவிநிலை குறிக்கும் தாபதநிலைக் காஞ்சியும்;

(1) ''அளிய தாமே சிறுவெள் ளாம்பல்,
இளைய மாகத் தழையா யினவே;
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப்
பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணு
மல்லிப் படூஉம் புல்லா யினவே'' —புறம். 248

(2) ''குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசி
லிரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
யல்லி உணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால், வளங்கெழு திருநகர்!
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டு
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.''
—புறம். 250

18. நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச் சொல்லிடை யிட்ட பாலைநிலையும் = மனைவி, இறந்த கணவனோடு ஈமமேறிப் பெருந்தீயிற் புகுவாள் இடைவிலக்குவார்க்குக் கூறும் பாலைக் காஞ்சியும்;

"பால்சான் றீரே! பால்சான் றீரே!
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பாற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல, வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே"

19 மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த தாய்தபவரூஉந் தலைப்பெயனிலையும் = பெருஞ்சிறப்பொடு களத்துப் பொருது மாய்ந்த மகனைப் படையழிந்து மாறினன் எனப் பிறர் பழிகூறக் கேட்ட தாய், அன்னவனை யீன்ற

மைக்கு நாணித் தன்னுயிர்விட முனைந்து களஞ்சேருந் தலைப்பெய னிலைக்காஞ்சியும்;

''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்று பலர்கூற,
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்.
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துளவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.'' (புறம் 278.)

''கடல்கிளர்ந் தன்ன'' என்னும் ஔவையார் புறப்பாட்டும் இத்துறையேயாம்.

இனி, ''மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பெயர'' எனப் பாடங்கொண்டு, ''சிறப்பழியப் புதல்வன் புறக்கிட'' எனப் பொருள்கூறி, அதற்குத் தகடூர் யாத்திரைப் பாட்டின் பகுதியைஎடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர். அது, தாயின் மூதின் மறம் பேணினும், மகனைப் புறக்கொடைப்பழி பூணவைப்பதால்,அப்பாடத்தினும்''புதல்வற் பயந்த'' என்ற இளம் பூரணர்பழம்பாடமே பொருட்சிறப்புடைத்து.

20 மலர்தலை யுலகத்து மரபு நன்கறியப்பலர் செலச் செல்லாக்காடு வாழ்த்தொடு = விரிந்த இடத்தையுடைய

உலகத்து இயல்முறை நன்றாய் உணருமாறு பல்லோரும் மாய்ந்தொழியத் தான் ஒழியாது நிற்கும் புறங்காட்டை வாழ்த்தும் காஞ்சியுடன்;

"................ ...............................
நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
எல்லார் புறனும் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாம் தானாய்த்
தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே." (புறம் 356)

என்பது இத்துறை.

நிறையருஞ் சிறப்பில் துறைஇரண் டுடைத்தே = நிரம்பிய அரிய சீருடைய காஞ்சித் துறைகள் இருவகைத்தாம்.

குறிப்பு:— இதில் ஆன் எல்லாம் அசை. ஏ கா ர ம் ஈற்றசை; இசைநிரப்பெனினும் அமையும்.

முதலில் ஒருபத்தைக்கூறி, "நிலையொடு தொகைஇ ஈரைந்தென்ப" என எண்கொடுத்துப் பிரித்து நிறுத்தியதுடன், 'என்ப' என முற்றுவினை பெய்துமுடித்தலின் அது பிறர்கோள் கூறியதாகும். காஞ்சித்துறைஅப்பத்தே என்பது அவர் காலத்து ஒருசாரார் கொள்கையாதலின், அவற்றைத் தொகுத்துத் தனி எண் கொடுத்துப் பிரித்தார். அது தானுடன்படாப் பிறர்கோளெனற்கு 'என்ப' எனப் படர்க்கை வினைமுற்றுப்பெய்து, பின் தம் துணிபு விளக்கி மற்றொரு பத்தும் சேர்த்துக் காஞ்சித்

துறை இருவகையாய் இருபதாமென முடித்தார். இனி முத்றபத்தை ஈரைந்தாகும் எனப் பிரித்து நிறுத்தியதால் பின்கூறிய பத்தையும் பத்தெனத் தொகுத்துச் சுட்டியேனும், அல்லது முன் பத்தோடு கூட்டி எண்ணித் துறை இருபதெனச் சுட்டியேனும், இறுதியில்மொத்தத்தொகை எண் கூறுதல் வேண்டும். ஈற்றடி, ''துறை ஈரைந்தே'' என்றேனும், அன்றித் ''துறை இருவகைத்தே'' என்றேனும் முன்பாடம் இருந்து பின் அது சிதைந்து இருத்தல் கூடும் எனத் தோன்றுகிறது. இதில் பின்கூறிய துறை பத்தும் துன்பநிலை குறிப்பதால் இவை விழுமவகையாதல் வெளிப்படை; அதனால் விழுப்ப வகையாக முதற்கூறிய துறை வகை பத்தின் வேருகும் பின்பத்தும் என்பது விளங்குகிறது. இத்தன்மைவேறுபாட்டால் இச்சூத்திரங் கூறும் காஞ்சித்துறை இருபதும் ஒரு படித்தாய் நிரல்பட எண்ணமல் வகைக்குப் பத்தாய்ப் பிரித்துத் தொகுத்து இருவகைப்படுமெனத் தெரிக்கப்பட்டன.

சூத்திரம்:—25.

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே

கருத்து:—இது பாடாண் திணைக்கூறுகள் அகத்தில் கைக்கிளைத் திணைக்குப் புறனுகும்எனவும், பாடாண் திணை எட்டுவகைப்படும் எனவும் கூறுகிறது.

பொருள்:—இதன் பொருள் வெளிப்படை.

குறிப்பு:—புறத்திணைகள் ஏழனுள் முன் ஆறும் கூறி முடிந்ததனுலும், எஞ்சியபாடாண் ஒன்றே இதிற் கூறப்

படுதலானும், பிறவற்றுள் ஒவ்வொன்றைப் பிரித்துக் கூறிய முன் சூத்திரங்களிற் போலத் ''தானே'' என்னும் பிரிநிலைச் சொற்குறிப்பு ஈண்டு வேண்டாதாயிற்று. புறனே........உடைத்தே, என்பவற்றின் ஏகாரம் அசை.

மற்றத் திணைகள்போலத் தனக்கொரு தனி நிலைபெறு மல் பிறதிணைகளை நிலக்களனுகக் கொண்டு ஏற்றவிடத் தவை ஒவ்வொன்றின் பகுதியே பாடாணுய் அமையுமத னியல் கருதிப் ''பாடாண் பகுதி'' எனச் சுட்டப்பட்டது. வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண், உழிஞைப் பாடாண், தும்பைப்பாடாண், வாகைப்பாடாண், காஞ் சிப்பாடாண், புரைதீர்காமம் புல்லிய பாடாண் என்றெழு வகையிற் பாடாண் பிறத்தலின், அவ்வத் திணைப்பகுதி நீக்கிப் புகழ்ச்சிக்குரிய ஒவ்வொருபகுதியே பாடாணுமென் பது விளங்கப் பாடாண்என்னுமற் 'பாடாண்பகுதி' எனத் தெளிக்கப்பட்டது பாடாண் வகை ஒவ்வொன்றினும் அத்திணைப்பகுதி பிரித்துப் பாடாண் பகுதியை ஆய்ந் தறிய வேண்டுதலின், ''நாடுங் காலை'' எனக் கூறிய குறிப் பும் தேர்தற்குரியது. நாலிரண் டெனக் குறிக்கப் பட்டவை, பாடாண் திணை வகைகள். அவற்றின் விளக்கம் பின் ''கொடுப் போரேத்தி'' எனும் சூத்திரத்தில் கூறு கிருர்; அதையடுத்துத் ''தாவி னல்லிசை'' எனுஞ் சூத்தி ரத்தால் பாடாணின் துறைகளைவிளக்குகிருர்; முன், உழி ஞைக்கு முதலில் அதன் வகை கூறிய பிறகு அதன் துறை களை விளக்கியது போலப் பாடாண் துறைகள் பின் எட்டி றந்தன கூறுதலானும், அவற்றை இதல் எட்டெனச் சுட்டுதலமையா தாகலானும், இத்திணை வகை எட்டே பின் விரிப்பதானும், இதில் எட்டு எனுமெண் துறைத்

தொகை யென நச்சினார்க்கினியர் கொண்டது பொருந்தா தென்க. இனிப் புறத்திணை ஆறும், அன்பினைந்திணை... கைக்கிளை யாம் அகத்திணைகள் இரண்டுமாகப் பாடாண் பிறக்கும் வகை எட்டெனினு மமையும்.

இனி, கைக்கிளையிற் காதற்சிறப்பு ஒருவர்க்கேயாவது போலப் பாடாண் சிறப்பும் பொதுமையின்றித் தகவுடையார் ஒருவருக்கே உரித்தாக வருதலானும், கைக்கிளையில் காதற் கூற்றுப் பாராட்டுந் தலைவன்மாட்டாவது போற் பாடாண் கூற்றும் புகழ்வோர்தம் பக்கலிலே யமைதலானும், இரண்டினுக்கும் நிலம் பொழுது வரையறை இன்மையானும், கைக்கிளையி லிழுக்கு நீக்கித் "தருக்கியவே" சொல்லி யின்புறுதல் போலப் பாடாணில் பழிதழுவாப் புகழ்மை யொன்றே பயில்வதானும், இருதிணையு மொரு தலையாச் செந்திறமா யமைதலானும், பாடாண் கைக்கிளைக்குப் புறனாயிற்று.

சூத்திரம்:—26.

அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்று மென்ப.

கருத்து:— இது, பாடாண் திணை இயல் விளக்குகிறது.

பொருள்:—அமரர்கண் முடியும் அறுவகையானும்= போர் மறவர் (அஃதாவது பொருநர்) பாற் சென்றமை

வனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சியீருன புறத்திணை வகையாறினும் (புரை தீர்காமம் புல்லிய வகையினும்) குற்றமற்ற அகப்பகுதியில் அன்பளைந்த காதல் திணைவகையினும்; ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப = அவ்வெழுவகைத் திணைகளுள் இயல்பாக இதற்கேற்புடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணாய் அமையும் என்று கூறுவர் புறநூற் புலவர்.

குறிப்பு:— தனிநிலை பெருமல், பிறதிணைகளை நிலைக்களனுகக் கொண்டு, அவ்வவற்றில் புகழ்மைக்கேற்ற பகுதியே பாடாணுயியையுமென்பதை மேற் சூத்திரத்தில் "பாடாண் பகுதி" எனச்சுட்டி, இதில் அதன் தன்மை தெளிய விளக்கப்பட்டது. மேற்கூறி முடித்த ஆறு புறத்திணைப் பகுதிகளிலும், அகத்திணை வகைகளுள் புகழ்மையொடு பொருந்தாப் பெருந்திணை போன்ற பழிபடும் இழிகாமவகை விலக்கித் தூய காதற்பகுதிகளிலும், புகழ்மை பாராட்டுதற்கேற்ற கூறு பாடாண் எனப்பெறும். (பாடாண் = பெருமை, அஃதாவது பீடு) அவ்வத்திணைப் பொருளின் மேல் அதிற் சிறந்த ஒருவரின் புகழ் பாராட்டும் பகுதியளவே பாடாணுகும். சிறப்பெதுவும் புகழ்க்குரிய யாதாமோரொழுக்கம் பற்றியன்றி யமையாதாகலின், அச்சிறப்பின் புகழாம்பாடாணும் அவ்வத் திணைப் புறத்துப் பிறத்தலே இயல்பாகும். ஆதலின், பாடாண் பிற திணைகளின் சார்பாய்ப் புகழ்மைப் பொருட்டாயமைதல் வெளிப்படை. இனி, அகப்புறத் திணைகளனைத்தும் மக்கள் ஒழுக்கம் பற்றியவையாதலின் பாடாணும் மக்கட்குரியதே யாதல் வேண்டுமாதலானும், பண்டைச் சான்ரேர் பாடாண் பாட்டுக்களெல்லாம் மக்களில் தக்கார்

மாண்புகழாகவே வருதலானும், சூத்திரவைப்பு முறையில் தொல்காப்பியரின் மாறாத நியமப்படி இது பாடாணினியல் விளக்கம் கூறவேண்டும் சூத்திரமாதலானும், சூத்திரச் சொற்போக்கால் தொல்காப்பியர் கருத்தறிதல் உரையறமாதலானும், சூத்திரச் செம்பொருளிதுவாதல் ஒருதலை

இனி, இச் சூத்திரச் சொற்பொருளை வைப்புமுறையில் இடத்திற்கியையக்கொள்ளாமல் முன்னுரைகாரர் முரண்படத் தத்தம்விருப்பின்படி வெவ்வேறாய்க்கூறுவர். அவருரை நெடுவழக்கால் புலவரை மருட்டுதலால், மெய்ப்பொருளறிய அவருரைப்பெற்றி யாராய்தலும் பொருத்தமாகும்.

இதற்கு இளம்பூரணர் உரையாவது:—

''அமரர்கண் முடியும் கொடிநிலை கந்தழி வள்ளி புலவராற்றுப்படை புகழ்தல் பரவல் என்பனவற்றினும், குற்றந்தீர்ந்த (ஐந்திணை தழுவிய அகமான) காமத்தைப் பொருந்திய வகையினும், அவற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண்டிணையாதற்குப் பொருந்தும்''. என்பதே.

''கொடிநிலை முதலிய ஆறும், கடவுட்புகழ்ச்சியன்றிப் பாட்டுடைத்தலைவனைச் சார்த்தி வருதல், காமப்பகுதியிற் பாடும் பாட்டுடைத்தலைவனைச் சார்த்தி வருதல், என்ற இவ்விருவகையானும் ஒருவனைப் புகழ்தலால் பாடாண் பாட்டாயிற்று'' என்பது இச்சூத்திரத்தின்கீழ் இளம்பூரணர் தரும் சிறப்புரையாகும்.

இனி, இதற்கு உரைகாணும் நச்சினார்க்கினியர் கூறுவது:—முதற்கண், ''பாடாண்திணை தேவரும் மக்களும் என இருதிறத்தார்க்கே உரிய என்பார். இவ்விரண்டனுள் தேவர்பகுதி இவையென்பதுணர்த்துகிறது (இச்சூத்திரம்)'' என்று இச்சூத்திரக் கருத்தை வரைந்துகொள்ளுகின்றனர். பின்னர்த் தாம் வரைந்துகொண்ட கருத்துடன் பொருந்த, ''பிறப்பு வகையானன்றிச் சிறப்பு வகையால் தேவர்கண்ணே வந்துமுடியும் அறுமுறை வாழ்த்தின் கண்ணும், அத்தேவரிடத்தே உயர்ச்சிநீங்கிய பொருளை வேண்டுங் குறிப்புப் பொருந்தின பகுதிக்கண்ணும், மேல்பாடாண் பகுதியெனப் பகுத்து வாங்கிக் கொண்ட ஒன்றனுள்—தேவரும் மக்களும் எனப்பகுத்த இரண்டனுள்—தேவர்க்குரித்தாம் பகுதியெல்லாந் தொக்கு ஒருங்குவரும் என்று கூறுவார் ஆசிரியர்'', என்றவர் கூறினர். இதன் பிறகு தாம் கூறும் புதுப் பொருளைப் பொருத்திக் காட்டவேண்டி விரிவுரையிற் பல வருவித்துக் கூறுவர். அவையிற்றுள் இங்குச் சில கூறுதும்.

அமரரான தேவர் பரவப்படுதலேயன்றி, ''முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடைவேந்தரும் உலகு'' மாக ஆறும் பரவப்படுங்கால் அப்பராவு தேவர் கண்ணே வந்து முடியுமென்பர். அன்றியும் பராவப் பெறுந் தேவரல்லா இவ்வாறும் ''சிறப்பு வகையால் அமரர் சாதிப்பால என்றல் வேத முடிவு'' என ஓரமைதி காட்டுவர். இனி ''புரைதீர் காமம் புல்லியவகை'' என்பதில் புரையைக் குற்றமென்னாது அதற்கு மாறாய உயர்ச்சியெனக் கொண்டு, உயர்ந்த மறுமைப்பயனும் வீடுபேறு

வேண்டாமல் இழிந்த இம்மைப்பயன்களை விரும்பித் தேவர்ப் பராவுதலை ஆசிரியர் "புரைதீர் காமம் புல்லிய" தாகக் கூறினரெனக் கொள்ள வைக்கின்றூர், "ஒன்றன் பகுதி ஒன்றும்" என்றதற்கு "உரித்தாம் பகுதியெல்லாம் தொக்கு ஒருங்குவரும்" என்றுரை கூறுவர் இச்சூத்திரத் துக்கு நச்சினார்க்கினியர் கண்ட இப்பொருள் இளம்பூர ணர் உரையோடு மாறுபடுவதுடன், தொல்காப்பியர் கருத்து ஆகாமையும் சிறிது சிந்திக்கத் தெளிவாகும்.

1 முதலில், தாம் கருதிய "ஆறுவகை" யினை இந் நூலார் யாண்டு எவ்வாறு சுட்டினரென்பதை இரண்டு உரைகாரருமே விளக்கினரிலர். தாம் கூறக் கருதிய தொகைப்பொருள் இவையெனத் தாமே வகை சுட்டி விளக்காமல், உரைப்பார் உரைக்கும் வகையெல்லாம் சென்று அமையச் சூத்திரிப்பது இலக்கண நூல் நோக்குக் கும் தொல்காப்பியர் சொற்போக்குக்கும் பொருந்துவ தன்று. இந்நூலார் தாமே வரையறை செய்திலரெனில், அஃது அவர் நூலைக் கற்பவரை மயங்க வைக்கவும் மாறு கூறவும் இடந்தரும் இழுக்காய் முடியும் அவர் கூறும் அறுவகையினை அவர் நூலிலிருந்தேகண்டு தெளியாமை யானே, உரைகாரர் பலரும் பலவாறு தத்தம் மனம்போன வாறெல்லாம் மயங்கி மாறுபடக் கூறற்கிடனாயிற்று இத னாலன்றே நச்சினார்க்கினியர் ஈங்கு அறுவகையினைப் பர வும் வகையாக்காமல் பரவப்படும்செயற்கைக் கடவுட் போலிகளாம் தேவர்—பார்ப்பார்—பசு—மழை—மன்னர் உலகு என்றெண்ணினர். இதற்கு மாருக இளம்பூரணர் ஈண்டு அறுவகையை வணங்கப்பெறும் பொருள்களாக் காமல் வணக்கவகைகள் ஆறெனக்கொண்டு, "கொடிநிலை

கந்தழி வள்ளி புலவராற்றுப்படை புகழ்தல் பரவல்'' என்று கூறுவர். கற்றுவல்ல இருபேருரைகாரர் இதற்கு இவ்வாறு வெவ்வேறு பொருள் தம்முள் முரணிக் கூறுவரேல், மற்றையோர் உண்மை துணிவதெப்படிக் கூடும்? இவ்வாறு பலரும் பலவாறு கூற இடம்வைத்துத் தெளிவின்றி மயங்குமாறு தொல்காப்பியர் சூத்திரியாரென்பது ஒருதலை. அவர் தேர்ந்து தெரிக்க நுதலிய பொருளை நுவலும் இச்சூத்திரத்து அறுவகைகளை அவர் நூலிற்கண்டு தெளிவதே கற்பவர்கடனாகும்.

2 இனி, நச்சினார்க்கினியர் உரையில், நேரே பராவப்படும் பிறப்புவகையால் இயற்கைத் தேவராவார் வேறு; தேவராய்ப் பிறவாவிடினும் வைதிகர்வாய்ச் சிறப்புவகையால் தாம் பெறும் வணக்கத்தை மெய்த்தேவர்பால் உய்க்கும் பொய்த்தெய்வப் போலிகள் வேறு ஆறு எனக் கூறப்படுகிறது. எனவே, இவ்வுரை அசலும் படியுமான தெய்வப் பகுதிகளிற் சென்று சேரும் வணக்க வகையெல்லாம் ஒருங்கு தொகுத்து இச்சூத்திரங் கூறவேண்டுவது ஏழு வகையாகவும், இந்நூலார் சூத்திரத்தில் அறுவகையென மறந்து கூறினரெனத் தொல்காப்பியரைப்பழித்ததாகும்.

3. இன்னும், இயற்கை வகைப் பிறவித்தேவரன்றியும், பராவு வெறியான் மக்கள் தாமே ''விகாரவகையான்'' அமரராக்கிச் செய்யும் வாழ்த்துப்பெறும் செயற்கைப் பொய்த்தேவப் போலிகள் நச்சினார்க்கினியர் கூறுமாறு ஆறே எண்ணில் அமைவனவன்றே. புள், விலங்கு, ஊர்வன, யாறு, மலை, மரம், செடி, கொடியாகிய பொருள்களில் வாழ்த்துக்கடியப்படுவ தொன்றேனுமுண்டோ?

பாம்பு, எலி, பருந்து, மயில், மாடு, ஆல், வேல், அரசு அனைத்தையும் நாளும் நம்மவர் வணங்கக் காண்கிறோம் இது நல்ல வழிபாடெனவே கருதப்படுகிறது. கீதையும் வேதமும் 'எப்பொருளுந் தெய்வமாகும், எதன் வணக்கமும் தெய்வத்தின்பாற்சென்று முடியும்' என விளக்கியிருக்க, பசு பார்ப்பாராதி ஆறு மட்டுமே வழுத்தற்குரியன வென்பது பொருந்தாதன்றே.

4. இனி, வேதம் தமிழர் படிக்கொணாதாகவே, வேதமுடிவென உரைகாரர் கூறுவவெல்லாம் சரியெனத் தமிழ் கற்பார் கொள்ளவும், கொண்டு வாளா அமையவும் கடவரென நச்சினார்க்கினியர் கருதினர் போலும்! அவர் இங்குக் கூறிய அறுவகையினவே தேவர்க்காம் வணக்கம் பெறற்குரிய வென்று எந்த வேதம் எப்பகுதியிற் கூறியுள்ளது? இதற்குத் தெளிவான வேதவாசகங் காட்டும்வரை இதுவே வேதமுடிவென்பது துணியப்படாததாகும்.

இனி, ஆறு புறத்திணைகளினடியாகப் பிறக்கும் பாடாண் பகுதிகளுக்குச் செய்யுள் வருமாறு:—

(1) வெட்சிப்பாடாண்:—

"முனைப்புலத்துக் கன்றுடை முந்நிரைபோல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி—எனைப்புலத்துச்
சென்றதுநின் சீர்த்தி தேர்வளவ! தெவ்வர்போல்
நன்று முண்டாக நமக்கு"

—பழைய பாட்டு. நச்-உரைமேற்கோள்

"செருப்பிடைச் சிறுபரலன்னன்" எனும் புறப்பாட்டும் (257), "முட்காற்காரை" எனும் உலோச்சனுர் புறப்பாட்டும் (புறம். 258), "நறவுந் தொடுமின்" எனும் பேராலவாயர் பாட்டும் (புறம். 262), "குயில்வாயன்ன" எனும் ஔவை புறப்பாட்டும் (புறம். 269), வெட்சியின் வகையாம்.

(2) வஞ்சிப்பாடாண்:—

"வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்தினர்க் கீத்துமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கல மான்றேர் உடனீத்தான் ஈத்த
படைக்கலத்திற் சால பல,"

—தகடூர். புறத்திரட்டு-1257.

"காலனும் காலம் பார்க்கும்" எனும் கோவூர்கிழார் புறப்பாட்டும் (புறம். 41). "வல்லாராயினும்" எனும் காரிக்கண்ணனுர் பாட்டும் (புறம். 57) வஞ்சிப்பாடாண் வகையாதலறிக.

(3) உழிஞைப்பாடாண்:—

"வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி யொதுங்காதார் யாவரவர் — மஞ்சுசூழ்
வான்றேய் புரிசைப் பொறியு மடங்கினவால்
ஆன்றோ ரடக்கம்போ லாங்கு."

—பெரும்பொருள் விளக்கம் புறத்திரட்டு 1329

"இரும்பனை வெண்டோடு" எனும் கோவூர்கிழார் பாட்டும் (புறம் 45), "மணிதுணர்ந்தன்ன மாக்குரல் நொச்சி" எனும் மோசி சாத்தனார் பாட்டும் (புறம் 272) "நீரறவறியா" எனும் காமக்கண்ணியார் பாட்டும் (புறம். 271) உழிஞைப் பாடாணுதல் காண்க.

(4) தும்பைப்பாடாண்:—

"இன்கடுங் கள்ளின் ஆமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே, ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே,
நல்கினும் நல்கா னாயினும் வெல்போர்ப
போரருந் தித்தன் காண்கதில் லம்ம;
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே." —புறம். 80

"யாவி ராயினும் கூழை தார்கொண்
டியாம்பொருது மென்ற லோம்புமின்; ஓங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோ ளென்னையைக் காணா வூங்கே."

—புறம் 88

(5) வாகைப்பாடாண்:—

"நீர்மிகிற் சிறையு மில்லை; தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலு மில்லை;

வளிமிகின் வளியு மில்லை; ஒளிமிக்
கவற்றோ ரன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்; போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ அளியர்அவ னளியிழந் தோரே,
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் கலங்வரு வோரே.'' —புறம். 51

இன்னும், ''இமிழ் கடல் வளைஇய'' எனும் குடபுலவிய ஞர் பாட்டும் (புறம். 19) வாகைப்பாடாண் பகுதியாகும்.

''இரும்பனம் புடைய லீகை'' எனும் பரணர் பாட்டும் (பதிற்று. 42), ''வாங்கிரு மருப்பீற்றீந்தொடை'' எனும் கபிலர் பாட்டும் (பதிற்று. 66) ஒழுகுவண்ணச் செந்துறைப் பாடாணுதலறிக.

(6) காஞ்சிப் பாடாண்:—

''அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார், யா மெந்தையு மிலமே.''

—புறம் 112

இது, பாரியின் யாக்கை நிலையாமையும் செல்வநிலை யாமையுங் கூறுதலிற் காஞ்சியாய்ப், பாரி புகழ் குறித்த மையாற் பாடாணுமாயிற்று.

"நோகோ யானே, தேய்கமா காலை,
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்?
உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டல் மரீஇ யோனே." —புறம். 234

இன்னும், இவ்வெள்ளெருக்கிலையார் புறப் பாட்டில் வேள் எவ்வியின் கொடைவென்றி வேளாண்மையும் அவனிறந்தற்கிரங்கலு முடன்கூறலால், இது காஞ்சிப் பாடாணாயிற்று.

(7) இனிப் புரைதீர் காமம் புல்லிய பாடாண், குற்ற மற்ற கைக்கிளையினும் அன்பொத்த ஐந்திணை மருங்கி னும் பிறக்கும்.

அதற்குச் செய்யுள்—

(அ) கைக்கிளைப் பாடாண் வருமாறு:—

"பெண்மை யுணராப் பெதும்பை யெழில்நறவம்
கண்வாய் மடுத்துக் களித்தவளை யண்மித்தன்
உள்ளத் துறைந்தொளிரு மோவியநீ மண்ணில்நடை
கொள்ளத் தகுமோ கொடுமையெனும் வள்ளலையச்
செல்வி சிரித்துச் சிறகிலேன் நான்பறக்குங்

கல்வியறி யேனிரண்டு காலுடையே னாதலினால்
மெல்ல நடக்கின்றேன் வெகுள்வானே னென்னவவன்
கல்லா மழலைசெவிக் கண்டென்னும் எல்லாநின்
பொல்லாப் புருவச் சிலைகுனித்துப் போர்விழியால்
கொல்லா தருளிக் கொடுமைதவிர்த் தில்லோடென்
நெஞ்சத்தை யாள நினையாயோ நீயல்லால்
தஞ்சமிலேன் என்றிரக்குந் தன்கொடைமை எஞ்சாதான்
அஞ்சொற் பொருளை யறியாதவள் மயங்க
அஞ்சிப் பொறுக்கவென வல்லாந்து கெஞ்சும்
உலகாளு மன்னன் உளமார்ந்த காதல்
விலகாத வேளாண்மை வேட்டு.''

(ஆ) இருவயினொத்த தூயகாதற் பாடாண்:—

''வையக மலர்ந்த'' எனும் பெருங்குன்றூர் கிழாரின் பதிற்றுப் பத்து (88-ஆம்) பாட்டில்,

''.................. .......... .................
சேணுறு நல்லிசைச் சேயிழை கணவ!
மாகஞ் சுடர மாவிசும் புகக்கும்
ஞாயிறு போல விளங்குதி பன்னாள்;
— பதிற்றுப்பத்து. 88

எனவருவது ஒழுகுவண்ணச் செந்துறைப்பாடாண். ''நல்லிசைச் சேயிழை கணவ'' என்றதனால் புரைதீர் காமம் புல்லிய பாடாணாயிற்று. இதுவே போல, 'மீன்வயினிற்ப'

எனும் (90-ஆம்) பாட்டிலும் புரைதீர் காமம் புல்லிய பாடாண் வருதலறிக. அது வருமாறு:—

"...........................................
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை
வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ!
நின்னுள்
திங்க ளனைய வாக திங்கள்
யாண்டோ ரனைய வாக; யாண்டே
ஊழி யனைய வாக; ஊழி
வெள்ள வரம்பின வாகென வுள்ளிக்
காண்கு வந்திசின் யானே, செருமிக்
குருமென முழங்கு முரசிற்
பெருநல் யானை யிறைகிழ வோயே." —பதிற்று. 90

சூத்திரம்:—27.

"வழங்கியன் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்,
முன்னோர் கூறிய குறிப்பினும், செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே."

கருத்து:—இது, சில பாடாண் துறைகளில் இயற்பா விடத்துப் பயிலும் இசைப்பா வகை கூறுகிறது.

பொருள்:—வழங்கியன் மருங்கில் = பல பிறதிணைப் பகுதிகள் பாடாணாய்ப் பயிலுமிடத்து; வகைபட நிலைஇ =

அதனதன் கூறுபட நின்று; பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் = வாழ்த்தலும் புகழ்தலும் நுதலுமிடத்தும்; முன்னோர் கூறிய குறிப்பினும் = பண்டைச் சான்றோர் செந்துறை வழக்குச் சுட்டும் பிறவிடத்தும்; செந்துறை வண்ணப் பகுதி வரைவின்று = இயற்பாக்களேயன்றி இசைவகை வண்ணக் கூறுகளும் விலக்கப்படா.

குறிப்பு:—''ஆங்கு'' உரையசை. ஏகாரம் ஈற்றசை. உம்மைகள் எண் குறிப்பன. செந்துறையாவது, இசைத் தமிழ்ப்பாட்டு வகை. வண்ணம் என்பது இசைக்குரிய ஓசை வேறுபாடு. பிறதிணைகளிற் போலப் பாடாணிலும் இயற்பாக்கள் பெரிதும்வழங்கும்; எனில், இங்குக்குறித்த சில பாடாண் வகைகளுக்கு மட்டும் இயற்பாக்களேயன்றி இசைப்பா வண்ணக்கூறுகளும் வந்து பயில்வதுமுண்டு என்பதே இச்சூத்திரக் கருத்தாகும். அது, ''வண்ணப் பகுதி வரு''மெனக் கூறாது, ''வரைவின்று'' என்றதனால் விளங்கும். பாடாணில் பெரிதும் பயில்வன இயற்பாக் களே; இசைப்பா வண்ணவகை சிறுவரவிற்றே; அதுவும் இங்குக் குறித்த வகைகளில் மட்டுமேயாம் இதில் முன்னோர் கூறிய குறிப்பென்றது, பரவலும் புகழ்தலுமல்லாப் பிறதுறைகளை; குறித்த அவ்விரண்டிலும் செந்துறை வண்ணம் சிறப்புடைத்தாகும்; மற்றைய பாடாண் துறை களில் பண்டைச் சான்றோர் செந்துறைக்குரியவெனக் குறித்தவற்றிற்கே இசைப்பா வண்ணம் ஏற்புடைத்து; அல்லனவெல்லாம் இயற்பாக்களே ஏற்குமென்க.

புகழ்ச்சிப் பாடாண் வகைக்கு ஒழுகுவண்ணச் செந் துறைப் பாவகை வருமாறு:—

"அட்டா னனே குட்டுவன்; அடுதொறும்
பெற்ற னரே பரிசிலர் களிறே;
வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்து
வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவில்
சொரிசுரை கவரும் நெய்வழி புராலிற்
பாண்டில் விளக்குப் பருஉச்சுட ரழல
நன்னுதல் விறலிய ராடுந்
தொன்னகர் வரைப்பினவ னுரையா னவே,"

—பதிற்றுப்பத்து, செய் 47

இதில், செங்குட்டுவன் கொடையும் வென்றியும் பரணர் புகழ்தலால் இவ்வொழுகுவண்ணச் செந்துறைப் பாவகை ஏற்புடைத்தாயிற்று.

இனி, வாழ்த்துப்பாடாண் வகைக்கு வண்ணச் செந்துறை வருமாறு:—

''பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ!
ஆண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர்
கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும்
கல்லா வாய்மைய னிவனெனத் தத்தங்
கைவல் இளையர் நேர்கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிதும்

இதழ்கவி னழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்பநின் பெயர்வா ழியரோ,
நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தருந் தீநீர் விழவில்
பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோ டுண்டினிது நுகருந்
தீம்புன லாய மாடுங்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே"
—பதிற்றுப்பத்து. செ. 48

செங்குட்டுவனைப் பரணர் பாடிய இப்பாட்டில் "பெருந்துறை மணலினும் பலவே, நின்பெயர் வாழியர்" எனவருதலால், இது வாழ்த்துப்பாடாண்; அதனாலிதற்கு ஒழுகுவண்ணச் செந்துறைப் பாவகை ஏற்புடைத்தாயிற்று.

இனி, இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருந்தாப் புத்துரைக் குறிப்பைச் சிறிதாராய்வோம். "வண்ணப் பகுதி" என்னும் தமிழியற்றொடருக்குரிய செம்பொருளை யிகழ்ந்து விலக்கி, "வண்ணம்" எனுந் தமிழ்ச்சொல்லை "வருணம்" என்னும் வடசொல்லின் சிதைவாக்கொண்டனர். கொண்டு, "வண்ணப்பகுதி வரைவின்று" என்பதற்கு, "வருணங்களின் கூறுபாடு நிகழ்ந்தன நீக்கும் நிலைமையின்று" என்று பொருள் கூறினார்.

"'வண்ணமும் தொடையும் பொரீஇ யெண்ணு' என்பவாகலானும், ஐவகை நிறத்தினையும் வண்ணமென்பவாகலானும், வண்ணமென்பது இயற்சொல்; வருண

மென்பது வடமொழித்திரிபு''—என்றவரே தெளிந்து கூறினர்; எனினும் சூத்திரத்தில் அத்தமிழ்ச் சொல்லுக்குரிய பொருளை விட்டுத் தாம் கருதிய ஆரிய மரபைப் புகுத்தி மரபு பிறழப் புத்துரை கூறுவர். இஃதவர் மனப்பாங்கிருந்தவாறு. பட்டாங்கே இயலடைவில் நிரல் நிரையே சொற்கிடந்தவாறு கண்ணழிப்பின், சூத்திரச் செம்பொருள் தெளிதலெளிது. அதைவிலக்கிச், சுண்ணம் மொழிமாற்று முதலிய அரிய மாட்டேற்று மத்துக்களால் கலக்கி, எவ்வாற்றானும் ஒவ்வாப் புதுப் பொருள் காணத் துணியு மிவரியல்பிற்கிது நல்ல சான்று. சொற்றொடர் சுட்டும் செம்பொருளை இவரே குறிக்கின்றார். அதைக் கொள்ளாமைக்கிவர் இரண்டேதுக்கள் கூறுகிறார்.

(1) ''இதிற் குறித்த பாடாண் பகுதிகள் 'செந்துறை மார்க்கத்து வண்ணப்பகுதியாகிய பாடல்பற்றி வரும்' என்பது...கூறின், அவை ஈண்டுக்கூறல் மயங்கக் கூறலாம்.

(2) அன்றியும், ஏனை அறுவகைத் திணைக்கும் இங்ஙனங் கூறாது இத்திணைக்கே உரித்தாகக் கூறுதற்கோர் காரணமின்மையானும் அங்ஙனங்கூறாரென்க.''

இவற்றுள் முதலது இடம்பற்றியது. செய்யுளியற்குரிய பாட்டுவகை புறத்திணை யியலிற் கூறுதல் பொருந்தாதென்பதே, சொற்பொருளை விட்டொழிக்கவிரும்புதற்கிவர் கூறும் காரணம். இந்நூற்பா சுட்டும் பாடாண் பகுதிகள் 'செந்துறை மார்க்க வண்ணப்பகுதியாகிய பாடல்பற்றி வரு' மென்பதே நேரிய பொருளென்றுடன்

படுகிறார். ஆனாலும், செய்யுளியற்குரிய பாவகை கூறுத லால், அச்சொற்பொருளைக் கொள்ளலாகாதென விலக்கு கிறார். இஃதிவர் பொருந்தாப் புத்துரைக்குப் போதா தென்பதும், புறத்திணை யியலில் சில பாடாண் பகுதி களுக்குச் சிறந்துரியபாவகை சுட்டுவது இயலமைவுடைத் தென்பதும், தொல்காப்பியர் மரபு முறை மறவார்க் கெளிதில் தெளிவாகும். அகப்புறத்திணைகளுக்குப் பொது வான பாவகைகள் செய்யுளியலில் விளக்குவதால், திணை தோறும் அவ்வதற்குப் பாவகை கூறல் மிகையாகும். அத னால் தொல்காப்பியர் பிற புறத்திணைகளுக்குப் பாவகை தனித்தனி கூறிற்றிலர். எனில், செந்துறைப் பாடல் பிற திணைகளுக்குப் பயிலாமல், பாடாணிலும் யாண்டும் பயிலாமல், "பரவலும்-புகழ்ச்சியும்-முன்னோர் குறிப்பு மான" பகுதிகளுக்கு மட்டுமே பொருந்துமாதலின், அப் பொருத்தம் இவ்வியலிற் பாடாண்பகுதியொடு சேர்த்துக் கூறப்பட்டது. இவ்வாறு, ஏற்ற சில பிறவிடத்தும் பொதுவின்றிச் சிறப்பாகத் தனியுரிமையுடைய பாவகை களைச் செய்யுளியலிற் கூறாமல் ஆங்காங்கே சுட்டுவது இந் நூலாசிரியல்பாகும்; அகத்திணைகளுக்குக் "கலியும் பரிபாட லும் உரிய" என்றகத்திணை யியலிறுதியிலும், அதுவே போல உவமவகையான உள்ளுறையுவமத்தை உவமவிய லில் கூறாமல், பெருந்திணை ஒழியப் பிற அகத்திணைகளுக் குச் சிறப்புரிமை கொள்ளுவதால் அகத்திணையியலினும் அவ்வாறே உவமத் தொடர்புடைய இறைச்சி முதலிய சில உள்ளுறைகளைப் பொருளியலிலும் விரித்து விளக்குத லறிக. எனவே, தன்னளவில் தவறற்றதாய், எளிதிற் பொருள் தெளியப்படுவதாகும் நேரிய சொற்பொருளை

இதிற் குறித்த பாடாண் வகைக்குரிய பாவகையைச் செய்யுளியலிற் கூறாமல் இங்குத் தொடர்பு கருதிப் பாடாண் பகுதியொடு இவ்வியலிற் கூறியதால் மட்டும், மயக்கம் தருமென விலக்குமாறில்லை. எவ்வாறாயினும் பண்டைத் தமிழ்த்திணை விளக்கும் பகுதியில், யாதும் பொருத்தமற்ற ஆரியரின் சாதிபேத ஏதவேறுபாடுகளைப் புகுத்தும் நச்சினார்க்கினியர் முயற்சி வியப்பொடு வெறுப்பை விளைப்பதாகும். 'எல்லா உயிர்க்கும் பிறப் பொக்கும்' எனும் தமிழ் மரபொடு முற்று முரணுவதும் பிறப்பால் என்றுமாறாத உயர்வு தாழ்வுடையதுமான ஆரிய வருண முறைகளைப் பழைய தமிழர் புறவொழுக்கம் கூறுமிடத்துப் புகுத்த முயன்றிடர்ப்படுவதினும், பிற திணைகளுக்கும் பாடாணில் பிற பகுதிகளுக்கும் பயிலாத செந்துறை வண்ணப் பாடல் இதிற்குறித்த சில பாடாண் பகுதிகளுக்கு விலக்கில்லை என்பதைப் புறனடையாக இந் நூலாரிங்குத் தெளிக்குமுண்மை தேர்வதே பெரிதும் நயமும் பொருத்தமும் பயனுமுடைத்து.

சூத்திரம்:—28.

> ''காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.''

கருத்து:—இது, ''புரைதீர் காமம் புல்லிய பாடாண் பகுதி ஒரோவிடத்துக் கடவுளர்க்கும் விலக்கில்லை'' என்று கூறுகிறது.

பொருள்:—காமப் பகுதி = பாடாண் வகையுள் புரை தீர் காமம் புல்லிய பகுதி; கடவுளும் = (மக்களே யன்றிக்) கடவுளரும்; ஏனோர் பாங்கினும் = (தம்முள்ளும்) பிற

ரோடும்; வரையார் = கடியமாட்டார்; என்மனார் புலவர் = என்று கூறுவர் புறநூற் புலவர்.

குறிப்பு:—இதில், உம்மையிரண்டும் சிறப்புக் குறிப்பாம். மக்கட்கன்றி, கடவுளர்க்கும் தூய காதற்பகுதி பாடாணுதற்குரித்து; காதலியல்கருதா மேதகு கடவுளரும் இருதலையும் தாமாயும் ஒருதலை மனிதரோடும் காதல் கூரும் நற்காமப் பகுதியும் பாடாண் வகையாதலுண்டு என்பது குறிப்பு. புரைதீர் காமப் பாடாண் மக்களோடு தேவரும் சேர்வதுண்டுஎன்பது இந்நூற்பாக் கருத்து. தூயகாதல் பாடாணுதற்குரிய தென்பது, மேல் ''அமரர்கண் முடியும்'' என்ற சூத்திரத்தில் 'புரைதீர் காமம் புல்லிய வகையினும்' என்றதனுல் விளக்கப்பட்டது. காதல் பெரும்பாலும் இருமருங்கும் மக்கட்டலைவரிடை நிகழ்வதியல்பு. ஒரோவழி, ஒரு கடவுள் பிறகடவுளோடும் அன்றிக் கடவுளல்லாப் பிறமனிதரோடும் காதல் கொள்வதும், அது குற்றமற்றதாயின் ஏற்புழிப்பாடாண் பகுதியாவதும் செய்யுளில் கடிதலில்லை என்றிதில் கூறப்படுகிறது. மேற்பாடாணியல் விளக்கத்தில் புரையுடைக் காமமே கடியப்பட்டுக் கடவுளர் தூயகாதல் விலக்காமையாலிது வேண்டாமெனின், திணையெல்லாம் மக்களொழுக்கம்பற்றியவாதலின் பாடாண்திணை கடவுளர் தூயகாதல் பற்றி வருமோ எனும் ஐயமகற்ற இது வேண்டுமென்க. பொதுவாய்ப் பொருளெல்லாம் மக்களின் அகமும் புறமுமாய ஒழுக்கங்களைப் பற்றியனவாகும் புறத்திணை ஏழனுள் இறுதியான பாடாணும், மற்றைய போலவே மக்கட்டலைவர் மேற்ருய், ஒன்று ''அமர்கொள் மரபின்''

அறுபுறத்திணையினடியாய் வரும், அன்றி அகவகையில் புரைதீர்காமம் புல்லிவரும் இவ்விருவகையுள், "மற னுடை மரபிற் பாடாணுறும்" மக்கண் மேற்றாய்ச் செய் யுளில் வழங்கும். 'புரைதீர்காமம் புல்லிய பாடாணும்' மானிடத் தலைமக்கள் மாட்டு வருதலே பெருவழக்காம். சிறுவரவிற்றாக, காதல் கண்ணிய பாடாண் கடவுளரிடை யும் மக்களொடு கடவுள் காதல் கொள்ளுமிடத்தும் வருதலும் புலனெறி வழக்கில் விலக்கில்லை எனும் பழமரபு கூறப்பட்டது.

கடவுள் கடவுளொடு காதல்கொண்ட புரைதீர்காமப் பாடாணுக்குச் செய்யுள் வருமாறு:—

"...... ..................... ................
கண்ணொடு கண்ணிணைக் கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்."
' பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்
தொருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்."
"மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினார்,
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ."

(கம்பர்-இராமாவதாரம்-மிதிலைக்காட்சி—
செய்யுள். 35, 37, 38.)

இப் பாட்டுக்களில், திருமாலும் இலக்குமியும் பாற் கடலை விட்டுப் பிரிந்துலகில் வந்துகூடிக் காதலால் கலந்த தூயகாமப் பாடாண்பகுதி பீடுபெறுதலறிக.

இனி, கடவுள் மானிடர் மருங்கு காதலித்த பாடாண் பகுதி, முருகவேள் குறவள்ளியை மணந்தகதையாலறிக.

"...... ... ... ......ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே,"
(முருகாற்றுப்படை, வரி-100-102)

சூத்திரம்:—29.

"குழவி மங்கினும் கிழவ தாகும்"

கருத்து:—இது, புரைதீர்காமம் புல்லிய வகைத்தாய பாடாண் திணைப்பகுதி மிக்கிளஞ் சிறார்மாட்டும் சார்த்திப் பாடப்பெறுமென்று கூறுகிறது

பொருள்:—குழவிமருங்கினும் = காமஞ்சாலாச் சிறாரிடத்தும்; கிழவதாகும் = புரைதீர்காமம் புல்லியபாடாண் புலனெறி வழக்கிற் குரியதாகும.

குறிப்பு:—உம்மை சிறப்புக் குறிப்பது. காதற்செவ்வி கருதவொண்ணாப் பேதைப்பருவச் சிறார்மாட்டும் நற்காமப் பாடாண் திணை புலனெறி வழக்காற்றில் உரிமை கொள்ளும் என்பது கருத்து. காமவுணர்வு குழவிக்கின்றெனினும், அக்குழவி மாட்டுத் தூயகாதல் கொள்வா

ரன்புப் பெற்றி பற்றிய பாடாண் அக்குழவியர்மேல் சார்த்தி வருவதே இதிற் கூறப்படுவது. காமப்பருவ முடையார் சிறுரைக் காதலிக்குங் கைக்கிளைப் பாடாண் புரைதீர் காமம் புல்லியபாடாணு யடங்கும் பெற்றி மேலே கூறினர்; அத் தூய காதலால் குழவியர்பாற் சாரும் பாடாண் பகுதியை இங்குக் கூறினர்; அதனுலிது கூறி யது கூறலாகாது. இதற்குச் செய்யுள் வருமாறு:—

"பொன்திகழ்தன் மார்பென் புறந்தோயச் சாய்ந்
தென்கண்
தன்காந்த ளாற்பொத்தித் தான்சிரிக்கும்—முன்வந்தென்
கன்னத்தை முத்திக் கழுத்தைக்கை யாற்றழுவும்
என்னத்தன் என்வாழ் வினி."

இது, காமஞ்சான்ற பெண்ணியலாள் அஃதுணரா ஆண்மகவை யன்புசெய்து பாராட்டும் பாடாணுகும்.

இனி, காமஞ்சாலா இளமையோள்வயின் காளைப்பரு வத் தலைவன் தூய காதல் பாடாணுதற்குச் செய்யுள்:—

"வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்தோள்
பேரெழில் மலருண்கட் பிணையெழின் மானேக்கிற்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுப்பினய்!
நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடிக்கை வீசினை,
ஆருயிர் வெளவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்
உளனுவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
இளமையா லுணராதாய்! நின்தவ றில்லானும்,

கலைநரி ஞேய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்!

.....................................................

ஒறுப்பின்யா ஞெறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி [குழாய்!
நிறுக்குவன் போல்வல்யான், நீபடு பழியே" —கலி. 58

இதில், காமஞ்சாலாச் சிறுமியாற் புரைதீர் காதல் கூர்ந்த தலைவன் அவள் இளமையும் உயிர் வெளவும் எழிலும் பாராட்டுதலால், இது காதற் பாடாணாயிற்று.

இதற்கு நச்சினர்க்கினியர் கூறும் பொருள் பொருந்தாது. பிள்ளைத் தமிழ் போன்ற பிற்காலப் பிரபந்தப் பகுதிகளைக் குறிப்பதிச்சூத்திரம் என்பரவர். அது செய்யுளியலிலன்றி ஈண்டுக் கூறற்பாற்றன்மையானும், அத்தகைப் பிரபந்த வகைகள் தொல்காப்பியர் காலத்தின்மையானும், அது கருத்தன்மை வெளிப்படை. இளம்பூரணரவ்வாறு கொள்ளாமையறிக.

சூத்திரம்:—30.

"ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான."

கருத்து:—இது, பாடாண் திணையில் தலைமக்கள் ஊரும் உயர்குடிப்பிறப்பும் பாராட்டற்குரியன என விளக்குகிறது.

பொருள்:— ஊரொடு தோற்றமும் = தலைமக்களின் ஊர்ச்சிறப்பும் உயர்குடிப்பிறப்பும்; உரித்தென மொழிப = பாடாண் திணையில் பாராட்டுக்குரிய எனக்கூறுவர் புற நூற்புலவர்; வழக்கொடு சிவணிய வகைமையான = அப் பாராட்டு புலனெறி வழக்கொடுபொருந்தும் பகுதிகளில்.

குறிப்பு:—''ஒடு'' இரண்டில் முன்னது எண் குறிக்கும். பின்னது மூன்றும் வேற்றுமையுருபு.

இதில், அடி இரண்டும் ஒரு சூத்திரமாயமைதல் பொருளடைவாற்றெளிவாகும். காலத்தால் முந்திய இளம் பூரணரும் அவ்வாறே கொள்ளுதலால், அதுவே பழைய பாடமாவது தேற்றம். இவற்றைப் பிரித்திருவேறு நூற் பாக்களாக்கிப் பொருந்தாப் புதுப்பொருள் கூறுவர் நச் சினார்க்கினியர். தனித்துத் தன்னளவில் பின்னடி முடிந்த பொருளுதவாமை வெளிப்படை. புறத்திணை அல்லது பாடாண்வகை யனைத்திற்கும் பொதுவான புறனடை கூறுதல் கருத்தாயின், அவ்வகையனைத்துங் கூறியபின் னிறுதியிற் புறனடை கூறல் முறையாகும்; இன்னும் இதன் பின்னும் பாடாண் வகை கூறுவதால் ஈண்டிது பொதுப்புறனடை யாகாது.

அன்றியும், முதலடிக்கு இவர் கூறும் புதுப்பொருள் தமிழறமும் பழமரபும் அழியவரு மிழுக்காகும். **''ஊரிற் பொதுமகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண் திணைக் குரித்து''** எனக் கூசாது கூறுகிறார். பரத்தை ஒருத்தியே யன்றிப் பலரொடும் வாழ்வாரிருக்கலாம் அன்னாரும் அவ்வாழ்வை நாணாமல் ஊரறியக்காட்டி அதைப் பாராட்

டும் உயரொழுக்கமாகக் கருதும் பேதைமைக்காளாகார். அவ்வளவு நாணற்ற கீழ்மக்கள் உளராயின், அவர் கயமையைப் பாடாண் திணைக்குரித்தெனப்புலவர் தலைவரான தொல்காப்பியர் கொள்ளார். அக்கயவர் வாழ்வு "வரைவிலா மாணிழையார் மென்தோள் அளறுமூழ் புரையிலாப் பூரியராம் திருநீக்கபபட்டார்தொடர்பாக" வெறுக்கப்படுவதே தமிழறமரபாயிருக்க,அதைப் புலவர்புகழ்ந்துபாடும் பீடுசான்ற பாடாண் திணைப் பகுதியாக நச்சினார்க்கினியர் கூறத்துணிந்தது வியப்பாகும்; அத்துணிவு அவர் மதித்த ஒரு சில பிற்காலப் போலிப்புலவர் செய்யுட்போக்கையும், அவர்காலக் கயவர் சிலர் வாழ்க்கையையும் நோக்கியவர் கொண்டார் போலும். சொற்றொடர் சுட்டும் செம்பொருளை விலக்குதற்கு அவர் கூறும் ஏதுக்கள் போதாமையும் வெளிப்படை. அதையுமாராய்வோம்.

"இச்சூத்திரத்திற்குத் 'தலைவர் பிறந்த ஊரும் அவர் பிறப்பும்' என்று பொருள் கூறின், (1) முன்னர் 'வண்ணப் பகுதி' என்பதனுல் பிறப்புப் பெறுதலானும், (2) மரபியற் கண்ணே 'ஊரும் பெயரும்' என்னும் சூத்திரத்து ஊர் பெறுதலானும், இது கூறியது கூறலாமென்றுணர்க". இவ்விரண்டேதுக்களும் பொருளற்றன.

(1) முதலில் "வண்ணப்பகுதி" என்பது செந்துறைப் பாட்டின் இன்னேசை வண்ண வகையைச் சுட்டுவதன்றி, ஒருவர் பிறந்த வருணவகை குறியாமை "வழங்கியல் மருங்கின்" எனு மேற்சூத்திரக் குறிப்புரையில் விளக்கப்பட்டது. ஆண்டது பாடாண் தலைமக்களின் குலப்பிறப்பைச் சுட்டாமை ஒருதலை. அன்றியும், 'வரு

ணம்' பொதுவாக ஆரியநூற் சாதியாவதன்றி, ஒருவரின் உயர்குடிப் பிறப்பாகாது. பாடாணுதற்குத் தலைமக்களின் உயர்குடிப் பிறப்பே உரித்தாமன்றி, வாளா வருண வகை சுட்டல் போதாது. பிறப்பளவில் சிறப்புச் சொல்லி இறுமாக்கும் வருண வகை பழைய தமிழ்மரபுமன்று. ''ஆன்ற குடிப்பிறப்பே வேந்தவாம் பண்பாகத்'' தமிழறநூல் கூறும். ஆதலின், இதிற் பொலிவு சுட்டும் தோற்றச் சொல், பீடுடைய தலைமக்கள் பிறந்த குடிப்பெருமையைக் குறிப்பதல்லால், வேதங்கூறும் சாதியைச் சுட்டாது.

(2) இனி, ''ஊரும் பெயரும்'' எனு மரபியற் சூத்திரம் நுதலும் பொருளும் இடஇயையும் வேறு; அச்சூத்திரமே இடைச்செருகல் என்பாருமுளர். இன்னும், பின் மரபியற் சூத்திரம் ஊர் குறிப்பதால் ஈண்டைக்கேற்ற ஊர் கொள்ளலாகாதெனின், ஆண்டுப் பெயரும் மரபியற் சூத்திரம் சுட்டுவதால் இங்கிப் பகுதியில் பெயர் குறிப்பதும் பிழையாதல் வேண்டும். அதற்கு மாறாகப் பாடாண் தலைமக்களின் பெயர் கூறப்பெறுமென்பது இதையடுத்து ''மெய்ப் பெயர் மருங்கின் வைத்தனர் வழியே'' எனக் கூறப்படுகிறது. ஆகவே, பாடாண் தலைவரின் ஊரும் உயர்குடிப் பிறப்பும் பெயருமே அத்திணைப் பகுதியில் கூறுதல் மரபென்பதே இதுவும் இதையடுத்த பின் சூத்திரமும் விளக்கும் பொருளாதல் தேற்றமாகும். தலைமக்கள் அகத்திணைப் பகுதியில் ''சுட்டி யொருவர் பெயர் கொளப்பெறார்'' என விலக்கியதால், புறத்தில் புரைதீர் காமம் புல்லிய பாடாண் பகுதியில் அவர் ஊரும் குடிப் பிறப்பும் பெயரும் சுட்டுதல் விலக்கின்றென்பதை

ஈண்டைக்கேற்ப இப்புறத்திணையியலில் இயையக் கூறினர் இந்நூலார்.

இதற்கிளம்பூரணர் உரையும் சிறவாது. " 'ஊரொடு தோற்றம்' என்பது, பேதை முதலாகப் பேரிளம் பெண்ணீருக வருவது" என்றவர் கூறினர். மலைகலங்கினு நிறைநிலைகலங்காத் தமிழ் மகளிரெல்லாம் ஒரே நிலவுலாவில் உயிரினும் சிறந்த தம் நாணினுஞ் சிறந்த கற்பிழந்து காமவெறி கொள்ள வைத்துப் பழிபிறங்கும் பிற்காலப் பிரபந்தங்களை அமைப்பதற்கு இப்பொருள் கொண்டார் போலும். நிறையுடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார், அதற்கு மாருகத் தந்நெஞ்சிற் பிறரைப் புகுத்துவர் பெண்டிரெனும் புலனெறியைத் தொல்காப்பியர் நூலுட் காண முயல்வது "சுடருள் இருள் காண்ப"தாகும்.

ஊர் குறித்தல் உரித்தாகும் பாடாண் பாட்டு வருமாறு:

"அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூண்
இம்மென் முழவி னெயிற்பட்டின நாடன்
செம்மல் சிலைபொருத தோள்."

(சிறுபாணுரையீற்றுப் பழைய பாட்டு.)

"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடலென் று—கூடல்
இழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து." (முத்தொள்ளாயிரம் 73)

இனித்தோற்றம் அதாவது குடிப்பிறப்பினுயர்வுரித் தாகும் பாடாண் பாட்டு:—

"பிணிகிடந் தார்க்கும் பிறந்தநாட் போல
அணியிழை யஞ்ச வருமால்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சிறியோர் வாடை சினந்து." (முத்தொள்ளாயிரம். 95)

"வளையவாய் நீண்டதோள் வாட்கணாய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்."

(முத்தொள்ளாயிரம். 77.)

இன்னும்,

"வழுவிலெம் வீதியுள் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி." (முத்தொள்ளாயிரம். 54.)

எனவரும் காமப்பாடாண்வெண்பாவில், "கொற்கை" என்றாரும், "மாறன்" என்றுயர் குடிப்பிறப்பாந் தோற்றமும் ஒருங்குவருதலும் காண்க.

சூத்திரம்:— 31.

"மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே."

கருத்து:—இது, புரைதீர்காமப் பாடாண்பகுதியிற் றலைமக்கள் பெயருங் கூறப்பெறு மரபுண்மைசுட்டுகிறது.

பொருள்:— மெய்ப்பெயர் = தலைமக்களின் உண்மைப் பெயரை; மருக்கில் வழியே வைத்தனர் = பாடாண் பகுதியில் நெறியாக அமைத்துக் கூறினர் புறநூற்புலவர்.

குறிப்பு:—மருங்கு = பக்கம்; இங்கது பாடாண் பக்கம் குறிக்கும். அகத்திணைக்கு விலக்கப்பட்ட இயற்பெயர் காதற் பாடாண் புறத்திணையில் வருதல் புலனெறியாதலின், 'வழியே வைத்தனர்' என விளக்கப்பட்டது. ஏற்றே காரம் அசை. ''புறநூற் புலவர்'' எனுமெழுவாய் அவாய் நிலையாற் கொள்ளப்பட்டது.

மெய்ப் பெயர் குறித்தற் குரித்தாம் பாடாண் பாட்டு:—

''நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்குல்—இடுகொடி
ஓடிய மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.''

(சிறுபாணுரையீற்றுப் பழைய பாட்டு.)

சூத்திரம். —32.

''கொடிநிலை காந்தள் வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''.

கருத்து:—இது, திணைகள் மக்கள ஒழுக்கங்குறித்தே வருமாயினும், பாடாண்வகையி லொருசில தலைமக்கள்

பாராட்டுடன் கடவுட்பராவலும் தழுவிவருமரபு கூறுகிறது.

பொருள்:—கொடிநிலை, காந்தள், வள்ளி என்ற= கொடிநிலை காந்தள் வள்ளி என்னும் பெயருடைய; வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்=போர்த்துவக்கமாம் வசையற்ற வெட்சியின் ''மறங்கடைக் கூட்டிய'' சிறப்பு வகை மூன்றை முதலாகக்கொண்டுவரும் பாடாண் பகுதி மூன்றும்; கடவுள் வாழ்த்தொடு கண்ணியவரும்= கடவுட் பரவுதலுடன் பொருந்திவரும்.

குறிப்பு:-ஈற்றேகாரம் அசை.பொதுவாகப் பாராட்டு நுதலும் பாடாணின் சிறப்புவகை மூன்று, கடவுள் வாழ்த்தைத் தழுவிவருதல் குறிக்கக் கடவுள் வாழ்த்துக்கு ''ஒடு''க்கொடுத்துரைக்கப்பட்டது. போரைத் தொடங்குந் திணை வெட்சி; அதன் பொதுவகை ஆகோள்; சிறப்பு வகைகளுள் பாடாணுய்க் கடவுள்வாழ்த்துக் கண்ணுவன இதிற் குறித்த மூன்றுமேயாதலின், முற்றும்மை கூட்டப் பட்டது. இதிற் குறித்த மூன்றும் தம்மளவில் வெட்சி வகைகள். அவற்றை முதலாகக் கொண்டுவரும் பாடாண் பகுதி மூன்றே கடவுள் வாழ்த்தொடுவருமெனற்கு, ''**முதலன மூன்றும்**'' என்று கூறப்பட்டது. ''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்றதுபோல, கடவுள் கண்ணிய பாடாண்வகை இதிற்குறித்த ''மூன்று முதலன'' எனக் கொள்க. ''முதலன'' ஈண்டுக்குறிப்பு வினை; ''முதலாக வுடையன'' என விரியும்.

இனி, கொடிநிலை முதலிய மூன்றையு ''முதலன'' என்றது, அவை ''அமர்கொள் மரபுத்திணை ஏழில்

முதலாய வெட்சியில் போர்த்தொடக்க முதலில் நடை பெறுவன வாதலின், என்பாருமுளர்.

வெட்சி வகையாய் இதிற்குறித்த 'கொடிநிலை' முதலிய மூன்றும், அடுத்த சூத்திரம் கூறும் வஞ்சிவகைக் 'கொற்றவள்ளை' ஒன்றும், இங்கு முறையே அவ்வத் திணையடியாய்ப் பிறக்கும் பாடாண் வகையையே குறிக்கும் என்பதை இளம்பூரணர் நச்சினார்க்கினியரிருவரும் கூறுகின்றனர். ஆனால், இதன் முதலடியில், ''கொடிநிலை கந்தழி வள்ளி'' என்றிருவரும் பாடம் கொண்டு, கந்தழிக்கு வெவ்வேறு பொருள் கூறுவர். ''கந்தழி'' என்றொன்றை எத்திணைக்கும் துறையாகத் தொல்காப்பியர் கூறிலர்; யாண்டுமதை அவர் விளக்கவுமில்லை. பழைய சான்றோர் செய்யுட்களிலும் இப்பெயருடைய புறத்துறை எதுவும் பயிலாமையானும், இனைத்தென விளக்காதெதனையும் வாளா பெயரளவில் சுட்டி மயங்கவைப்பது தொல்காப்பியரியல்பன்றாதலானும், இதில் ''கந்தழி'' என்ற பாடம் பொருந்தாமை வெளிப்படை. அன்றியும், இதில் கடவுள் கண்ணியபாடாணாய் முடியுமெனக் குறித்த மூன்றும் 'மறனுடை மரபிற்' போர் துவக்கும் புறவொழுக்காம் ஒரேதன்மையவென விளங்க''முதலனமூன்றும்'' என்றொரு நிரலில் சுட்டப்படுதலானும், அவற்றுள் கொடிநிலையும் வள்ளியும் போர்த் துவக்கத்தில் நிகழும் வெட்சி வகைகளாய் முன்விளக்கப்பட்டனவாதலானும், அவற்றுடன் பொருந்த ஒருங்கு சுட்டப்படும் மற்றொன்று மவைபோலவே (இங்கு விளக்காமல்)முன் விளக்கப்பட்ட 'போர்த்துவக்க வெட்சிவகையாதல்' வேண்டுமாதலானும், இவ்வியலில் முன் வெட்சித்துறைகளுள் முதலில்

முருகக் கடவுள் வாழ்த்துடன் போர் துவக்குவதாய் விளக்கப்பட்டது "காந்தளா" தலானும், அதை யிங்குச் சுட்டாது விட்டுக் கடவுள் வாழ்த்தொடு வரும் வெட்சிப் பாடாண் வகை 'முதலன மூன்றும்' என முற்றும்மை கொடுத்து முடித்தது குன்றக்கூறலெனும் குற்றமாமாதலானும், கடவுள் வாழ்த்தொடு பாடாணாய் முடியும் வெட்சியல்லாப் பிறவஞ்சி வகையை இதன்பின் வேறு சூத்திரத்திற் கூறுதலாலிங்கு சுட்டிய மூன்றும் வெட்சிவகையாதலே முறையாதலானும், அத்தகைய வெட்சிவகை காந்தள் என்றன்றிக் கந்தழியென முன் சுட்டப்பெறாமையானும், இதிற் **கந்தழியிடத்தில் காந்தளே** நிற்றற்கு அமைவுடைய பாடமாதல்வேண்டும்; நாளடைவில் பொருட் பொருத்தங் கருதாமல் ஏடு பெயர்த்தெழுதும் பரிசால் அது சிதைந்து "கந்தழி" யாகி, பிறகதன் பொருத்தமாராயா துரைகாரர் தத்தமக்குத் தோற்றிய வாறு பொருளுரைக்க அப்பாடமே நிலைத்தது போலும். இயற்பொருத்தம் தேராமல் கண்டாங்குக் கந்தழிப்பாடம் கொண்டவுரைகாரரும், அவருரையால் மயங்கிய பிறரும், அதன் பொருளும் பொருத்தமும் தெளிந்து துணியமுடியாமல் தம்முள் மாறுபட்டு மறுகுவதொன்றே அப்பாடத்தியைபின்மையைத் தெளிப்பதாகும். இதை நச்சினார்க்கினியர் பாடாண் பரிசழித்து அருவான கடவுளாக்குவர்; அது பாடாண் புறத்துறையாகாமையை ஆன்றோர் பழைய செய்யுட்களில் ஆட்சியின்மை வலியுறுத்தும். இளம்பூரணர் கந்தழியியல்பை விளக்காமல் ',அன்றெறிந்தானு" மெனும் வெண்பாமாலைப் பாட்டைக் காட்டியமைவர் அப்பாட்டு உழிஞை வகையாதலொன்றே, வெட்சிவகை குறிக்குமிங்கது பொருந்தாமை துணியப் போதிய சான்றாம்.

இனி, (i) 'கொடிநிலை' வெட்சிப் பாடாணுய்க்கடவுள் வாழ்த்தொடு வருதற்குச் செய்யுள் வருமாறு:

1 "புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப்
போகுங்காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங்
கொடுமரமுன் செல்லும் போலும்"
(சிலப்பதிகாரம்—வேட்டுவவரி)

இதில், நிரைகருதிப் போதல் வெட்சியாதலும், அதற்குக்கொடியெடுத்து முன் செல்லுதல் "கொடிநிலை" யாதலும் காண்க.

(2) "மாற்றூர் நிரைகருதி மாறன் படைமறவர்
கூற்றிற் கொதித்தெழுந்தார் கோமான்சீர்—போற்றிக்
கயலுயர்த்திக் கொற்றவையைக் கைதொழுதார்
தங்கோன்
வியனுலகை வென்றாள்க வென்று."

இதில், வெட்சிப் பாடாண் கடவுள் வாழ்த்தொடு மாறன் கயற் "கொடிநிலை" தழுவிவருதலறிக.

(ii) வெட்சிக் காந்தள் பாடாண்தற்குச் செய்யுள்:—

"வெண்போழ் கடம்பொடு சூடி யின்சீர்
ஐதமை பாணி யிரீஇக் கைபெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் வியன்களம்."; (அகம். 98)

இதில், வெட்சி வகைக் காந்தளில் முருகக் கடவுள் வாழ்த்து வருதலறிக. இன்னும்,

"கடம்பெறிந்து சூர்தடிந்த செவ்வேளின் கைவேல்
மடம்பெரியள் சிற்றிடைச்சி வள்ளி—தடவிழிவேற்
கஞ்சமகிழ் வேணவெறி யாடி யயர்வோமால்
பஞ்சவன்கோல் பாராள்க வென்று."

எனும் வெண்பாவில், முருகக் கடவுள் வாழ்த்தோடு வெட்சி வகைக் காந்தள்-பாண்டியரின்பாடாணுய்வருதல் காண்க.

(iii) இனி, முருகனைப் பெண்டிர் பாடிப்பரவும் வெட்சி வகை வள்ளி பாடாணுதற்குச் செய்யுள்:—

"அமரகத்துத் தன்னை மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடுங்—குமரன்முன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் காரிகையார்
ஏர்க்காடுங் காளை யிவன்" (நச்—உரை மேற்கோள்)

இதில், பெண்டிர் முருகனைப்பாடும் வள்ளி எனும் வெட்சித்துறை வருதலறிக. இனி, வள்ளி பாடாணுய் வருமாறு:—

"பெருங்கட் சிறுகுறத்தி பின்மறுகும் சேயோன்
அருங்குன்றம் பாடுதுநா மன்று—கருங்கடல்மேல்
வேல்விடுத்த வேப்பந்தார் மாறன் தமிழ்வேந்தன்
கோள்வளர வாழ்த்தெடுத்துக் கொண்டு,"

இது, மகளிர் முருகனைப்பாடிப் பாண்டியனைப் புகழ்ந்து பரவுதலால், வள்ளிப் பாடாணாதலறிக.

சூத்திரம்:—33.

"கொற்ற வள்ளை யோரிடத் தான."

கருத்து:—கடவுள் வாழ்த்துக் கண்ணிய பாடாணாகும் வெட்சிவகை மூன்றை மேற் சூத்திரம் குறித்தது. இது, வஞ்சிவகைக் கொற்ற வள்ளையும் ஒரோவழிக் கடவுள் வாழ்த்தொடு பாடாணாமெனக் கூறுகிறது.

பொருள்:—வெளிப்படை.

குறிப்பு:—முன் சூத்திரம் சுட்டும் வெட்சி வகை மூன்றும் பாடாணாங்கால் எப்போதும் கடவுள் கண்ணியே வரும். அவை போலாது வஞ்சிவகைக் கொற்றவள்ளை பாடாணாங்கால் ஒரோவிடத்து மட்டும் கடவுள் வாழ்த்தைத் தழுவிவரும். எனவே, "வள்ளை" கடவுள் வாழ்த்தின்றி மக்கள் சீர்த்திமட்டுஞ் சுட்டிப் பாடாணாய் வரும் பெற்றியதென்பது பெறப்படும். திணை வேறுபாட்டோடு இத்தன்மை வேறுபாடுடைமையாலும் வள்ளை மற்றவெட்சி வகை மூன்று போலப் போர்க்கு முன்னிகழாமல் தொடங்கியபின் நிகழ்வதாலுமவற்றோடு சேர்க்காமல் பிரித்திதனைத் தனி வேறு நூற்பாவில் விளக்க நேர்ந்தது.

"களிறு கடைஇய தாட்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண்கை யாற்
கண்ணொளிர் வரூஉங் கவின்சா பத்து
மாமறுத்த மலர்மார்பிற்
றோல் பெயரிய எறும்முன்பின்
எல்லையு மிரவு மெண்ணாய், பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின், நல்ல
இல்ல வாகுப, இயல்தேர் வளவ!
தண்புனல் பரந்த பூசன்மண் மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற் பிறரகன்றலை நாடே." —புறம். 7

இது, வஞ்சிவகைக் கொற்றவள்ளை; கரிகாற் சோழன் போர்ச்செலவின் புகழும் அவன் பகைவர் நாடழிவின் பரிவுங் கூறுதலாற் கடவுள் கண்ணா வஞ்சிப்பாடாணாயிற்று. இனிக் கொற்றவள்ளை, கடவுள் கண்ணிய பாடாணாதற்குச் செய்யுள்:—

"நேரார் நிலமழிய நீள்மதிலூர் தாமெரியப்
போர்மேல் வழுதிபடை போவதற்கு—கார்குறுதும்
நெற்றி விழியோனை நேர்ந்தவன்றாள் பாடுதுநாம்
கொற்றந் தரவுலக்கை கொண்டு"

இதில், கண்ணுதற் கடவுளை வாழ்த்திப் போர்மேற் செல்லும் பாண்டியன் தமிழ்ப் படையைப் பாராட்டி

நெற்குறும் பெண்டிர் பாடுதலாலிது வள்ளைப் பாடாணாதலறிக.

சூத்திரம் — 34.

"கொடுப்போ ரேத்திக் கொடார்ப் பழித்தலும்,
அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்,
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்,
கண்படை கண்ணிய கண்படை நிலையும்,
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்,
வேலி னோக்கிய விளக்கு நிலையும்,
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு முளவென மொழிப"

கருத்து:—இது, முன் "பாடாண் பகுதி—நாடுங்காலை நாலிரண்டுடைத்து" எனச் சுட்டிய பாடாண் வகைப் பொருள் எட்டினியலும் பெயரும் கூறுகிறது.

பொருள்:—(1) கொடுப்போரேத்தி = கொடுக்கும் வள்ளல்களைப் புகழ்தலும்;

குறிப்பு:—இதில் "ஏத்தி" எனுமெச்சத்தை ஏத்தல் வினை எனப் பெயராக்கிவேறு பிரித்தெண்ணல் வேண்டும்; "வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடைந்துடன் மாண்டதரசு" எனுங் குறளில், ஐந்தெனும் 'எண்

கருதிக் ''கற்றறிதலை''க் கற்றலும் அறிதலுமாகப் பிரித்தெண்ணியதுபோல. இதற்குச் செய்யுள்:—

''பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்;
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே'' (புறம் 107)

பொருள்: (2) கொடாஅர்ப் பழித்தலும் = பற்றுள்ளத்தால் ஈயா திவறியாரை இகழ்தலும்;

குறிப்பு:— ஈயார் பழியும் ஈவோர் புகழாமாதலின், அதுவும் பாடாணாயிற்று. அதற்குச் செய்யுள்:—

''பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்று
முயங்க லான்றிசின் யானே; பொலந்தேர்
நன்னன் மருக னன்றியும் நீயே
முயங்கற் கொத்தனை மன்னே; வயங்குமொழிப்
பாடுநற் கடைத்த கதவின் ஆடுமழை
யணங்குசா லடுக்கம் பொழியுநு
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே.'' (புறம் 151)

இதில், ஈயாவிச்சிக்கோவை யிகழ்ந்து ஈயும் கண்டீரக் கோவைப் புகழ்வதறிக. ''இரவலர்புரவலை நீயுமல்லை''

என வெளிமானைப்பழித்த பெருஞ் சித்திரனார் புறப்பாட்டும் (162); ''ஒல்லுவதொல்லும்'' என்று நன்மாறனைப் பழித்த மூலங்கிழார் புறப்பாட்டும் (196), இவ்வகையின.

பொருள்:—(3) அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும் = நெருங்கிப் பொருந்திப் புகழும் இயன்மொழி வாழ்த்தென்னும் துறையும்;

குறிப்பு:— உள்ளசால் புரைப்பது இயன்மொழி. பிற்காலத்திது மெய்க்கீர்த்தி எனப்பட்டது

இதற்குச் செய்யுள்:—

அ. ''ஒன்று நன்குடைய பிறர்குன்றம் என்றும்
இரண்டு நன்குடைத்தே கொண்பெருங் கானம்;
நச்சிச் சென்ற விரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கும், அஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே.''
(புறம்—156.)

இன்னும், ''குறத்தி மாட்டிய'' எனும் கபிலர் புறப்பாட்டும் (108) பாரியை அவரடுத்தூர்ந்தேத்தியதாம்.

ஆ. ''இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆஅ யல்லன்;
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்றவன் கைவண் மையே'' (புறம் 134.)

என்பதுமது.

பொருள்—(4) செய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க்குரைத்த கடைநிலையானும் = நெடுந்தொலை வழி நடந்த வருத்தம் நீங்கப் புரவலர் தலைக்கடைக்காவலரிடம் இரவலர் கூறும் கடைநிலையும்;

குறிப்பு:— இதில், ''ஆன்''—அசை. இதற்குச் செய்யுள்:—

''வாயி லோயே! வாயி லோயே!
வள்ளி யோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே!
கடுமான் றோன்றல் நெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே; அதனாற்
காவினெங் கலனே, சுருக்கினெங் கலப்பை,
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே,
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.'' (புறம் 206)

பொருள்:—(5) கண்படை கண்ணிய கண்படை நிலையும் = இரவலன் உறக்கங் கருதிக்கூறும் ''கண்படை நிலை'' எனுந் துறையும்;

அதற்குச் செய்யுள்:—

''வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னி! நின்
ஓவா வீகையி னுயிர்ப்பிடம் பெறாஅர்,

களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்ினரே;
உலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வந்து துயில்கோடல் வேண்டுநின்
பரிசில் மாக்களும் துயில்கமா சிறிதே.''

(நச் உரைமேற்கோள்)

பொருள்:—(6) கபிலைகண்ணிய வேள்வி நிலையும்= கபிலைநிறஞ் சிறந்த ஆவைக்கருதிய வேள்வி நிலையும்;

குறிப்பு:—இதில், கபிலை என்பது அந்நிறமுடைய பசுவுக்கு ஆகுபெயர் இதனை ''ஆக்கொடை''என்பர் பழைய உரைகாரரிருவரும். இதற்குச் செய்யுள்:—

''நன்றாய்ந்த நீணிமிர்சடை'' எனும் மூலங்கிழார் புறப்பாட்டில்(166)

''காடென்றா நாடென்றாங்
கீரேழி னிடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்ணாணப் பலவேட்டும்,
மண்ணாணப் புகழ்பரப்பியும்,
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் திருந்தேந்துநிலை
என்றும் காண்கதில் லம்ம.''

என வருவதிது. இதில், பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் காட்டுப்பசு ஏழுவகை நாட்டுப்பசு ஏழுவகையாகப் பதினாலு வகைப் பசுவால்

வேட்ட புகழை மூலங்கிழார் குறித்தல் காண்க. இது பார்ப்பன வாகைப் பாடாண்.

பொருள்:—(7) வேலினேக்கிய விளக்குநிலையும் = மறத்தால் காத்து அறத்தா லோச்சும் செங்கோல் மாட்சி விளங்கும் விளக்குநிலை என்னுந் துறையும்;

குறிப்பு:—இதில், 'ஓக்கிய' என்பது ஓச்சிய என்பதன் மரூஉ. இனி, "வேலைநோக்கிய விளக்குநிலை" எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர். அதுவுமிப்பொருளே குறிப்பதாகும். இருளொழித்து ஒளியுதவும் விளக்குப் போல, நாட்டில் வேந்தர் வேலும் கோலும் தீதகற்றி நலம் தருவதை விளக்குந்துறை என்பது கருத்து. 'வேல்' காவற்கும், 'கோல்' முறைசெய்தற்கும் ஆகுபெயர்கள். இதற்குச் செய்யுள் வருமாறு:—

"இருமுந்நீர்க் குட்டமும்" எனும் புறப்பாட்டில் (20)

"செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பகைவ ருண்ணா அருமண் ணினையே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அறந் துஞ்சுஞ் செங்கோ லையே;
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை."

என வருவது இத்துறை. இன்னும், "நெல்லுமுயி ரன்றே" எனும் மோசிகீரனர் பாட்டும் (புறம். 186),

''நாடா கொன்றோ?'' எனும் ஔவை புறப்பாட்டும் (187) இத்துறையே குறிப்பன.

பொருள்:—(8) வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉவும் ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும் = வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, அவற்றுடன் ஒருங்கெண்ணப் பட்டு வரும் புறநிலை வாழ்த்து, எனும் ''வாழ்த்தியல்'' வகை மூன்றும்; கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத் தொக்க நான்கும் = (புரைதீர் செந்திறக்) கைக்கிளை வகையாய்ப் பாடாணுவனவோடுஞ் சேரக் கூட்டி, முன்னேழும்போற் றனிநிலையின்றி இனம்தொக்கு வரும் தொகைப் பரிசாலொத்த இந்நான்கும்; உள என மொழிப = முன்னேழோடும் சேர்த்தெட்டாவது பாடாண் வகையாய் எண்ணுதற்குள்ளன என்பர் புறநூற்புலவர்.

குறிப்பு:— இந்நூற்பாவில் வரும்உம்மைகள் எல்லாம் எண் குறிப்பன. செய்யுளியலில் ''புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ எனத் திறநிலை மூன்றும்'' சேர்த்தெண்ணப்பெறுவதையும், ''கைக்கிளைச் செய்யுள், செவியறி, வாயுறை, புறநிலை, என்றிவை தொகுநிலை'' என்றொரு பரிசாய்ச்சேர்ந்து வருவதையும் செய்யுளியலிற்கண்டுதெளிக. இந்நான்கும் ஒருங்கே தொகுநிலைகளாவதானும், ஒரு பரிசாய்ப் பாடாணுதற்குரியவையாதலானும், அவற்றை ஒருங்கே கூட்டி எட்டாவது வகையாயிதிலெண்ணப் பட்டன. இதற்குமாறு யிவற்றைப் பிரித்துத் தனித் தனியே நான்காக்கி, ஏத்தலையும் பழித்தலையும் ஒன்றாக்கி, ''முன்கூறிய ஆறனோடேபத்தாய்ப் பாடாண் திணைக்குரிய

துறைகள் உள'' என்பர் நச்சினார்க்கினியர். பாடாண் துறைகள் இதற்கடுத்த நூற்பாவில் கூறப்பெறுவதாலும் மற்றப் புறத்திணைகளுக்குரிய துறைகளையெல்லாம் சேர்த்தொவ்வொரு நூற்பாவிலமைப்பதும், வெட்சி, உழிஞை போன்ற சில திணைகளின் சிறப்புவகைகளை மட்டும் வேறொரு சூத்திரமாக்குவதும் தொல்காப்பியர் கொண்டாளு முறையாதலாலும், இதில் கூறுபவை பாடாண் திணையின் சிறப்பு வகைகளன்றித் துறைகளாகாமை தெளிவாகும். இன்னும், பாடாண் ''நாடுங்காலை நாலிரண்டு (சிறப்பு வகை) யுடைத்'' தென முன்னே எண் கொடுத்துத் தெளியக் கூறியதாலும், இங்கு முதலில் ஏழைத் தனித்தனி எண்ணிவிட்டுஇறுதியிலொருபரிசான இந்நான்கை ''உளப்படத் தொகைஇத் தொக்க நான்கும் உள'' எனப்பிரித்து வேறு கூறியதாலும், இது பாடாணின் சிறப்பு வகை எட்டையே சுட்டுவது தேற்றமாகும். ஏத்தலும் பழித்தலும் வெவ்வேறு பரிசுடைமைமேற்காட்டிய சான்றோர் செய்யுட்களாலறிவதாலும் அது பொருந்தாமை தெளிவாகும். இன்னும் முன் ''நாலிரண்டுடைத்து'' என்பதைத் திணைவகையன்றித் துறைகளையே சுட்டுவதாய்க் கொள்ளின், இதிலும் இதையடுத்த சூத்திரத்தும் முறையே கூறப்பெறுவன தனித்தனியே எட்டிறந்தனவாமாதலானும் அதுபொருந்தாமை ஒருதலை. அதனாலுமது தொல்காப்பியர் கருத்தாகாது.

இனி, (1) வாயுறை வாழ்த்து, பாடாணுதற்குச் செய்யுள் வருமாறு:—

''எருமை யன்ன கருங்கல் விடைதோ
றுனிற் பரக்கும் யானைய முன்பிற்

கானக நாடனை நீயோ பெரும!
நீயோ ராகலின் நின்னொன் றுமொழிவல்;
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது, காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி;
அளிதோ தானேஅது பெறலருங் குரைத்தே."

—புறம். 5.

(2) செவியறிவுறூஉ பாடாணாய் வருமாறு—

"வடா அது பனிபடு நெடுவரை" எனும் காரிகிழார் புறப் பாட்டில்,

"பணியிய ரத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே;
இறைஞ்சுக பெருமநின் சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே;
வாடுக இறைவநின் கண்ணி, ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே;
செலிய ரத்தைநின் வெகுளி, வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே;
ஆங்க வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெருமநீ நிலமிசை யானே." —புறம். 6

(3) புறநிலை வாழ்த்துப் பாடாண் செய்யுள்:—

(அ) "திங்க ளிளங்கதிர்போற் றென்றிங்க ளூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து—திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ." —பழைய பாட்டு.

(ஆ) "இமையா முக்க ணியங்குசுடர் பயந்த
உமையொரு பாகத் தொருவன் காப்பநின்
பல்கிளைச் சுற்றமொடு நல்லிதி னந்தி
நீபல வாழிய, வாய்வாட் சென்னி! நின்
னொருகுடை வரைப்பி னீழல் பெற்றுக்
கிடந்த வெழுகட லுப்பண்
அகலிரு விசும்பின் மீனினும் பலவே."
—சூத் 422-நச். உரைமேற்கோள்.

(4) கைக்கிளைப் பாடாணுக்குச் செய்யுள்:—

(அ) "இனத்தோ டினஞ்சேரு மென்னுஞ்சொ லுண்மை
மனத்துறைக்க வைத்தாய் மடவோய்-பணைத்தோணின்
கண்ணிருவேல் கண்டதுமென் கைவேல் கழலுமெனின்
எண்ணுவதென் நீயருளா யேல்.'

(ஆ) "நைவாரை நல்லார் நலிவரோ? நாளுமருள்
செய்வார், சிரியார் சிறியார்போல்;—தெய்வ
எழிலோய்! தொழுதேற் கிரங்குவதுன் பண்பின்
வழியால் மறவாயென் மாட்டு"

இவ்வெண்பாக்களில். காமஞ்சாலா இளமையோள் வயிற் காதல்கொண்ட தலைவன் அவளிளமையு மழகும் பாராட்டுதலா லிவை பாடாணுதலறிக.

சூத்திரம்:—35.

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்,
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்,
சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்,
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்.
நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபும்,
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமும்,
மன்னெயி லழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்,
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயிற் றோன்றும் இருவகை விடையும்,
அச்சமும் உவகையும் எச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே."

கருத்து:— இது, பாடாண் துறை கூறுகிறது.

பொருள்:—(1) கிடந்தோர்க்குத்தாவினல்லிசை கருதிய சூதரேத்திய துயிலெடை நிலையும் = துயிலும் புரவலர்க்குப்புரைபடா அவர் நல்ல புகழைக் கருதிக் கட்டியங் கூறுவோர் எடுத்துரைக்கும் துயிலெடை என்னும் பள்ளி எழுச்சியும்; அதற்குச் செய்யுள்:—

''கானம் பொருந்திய கயவாய் மகளிரின்
யானுறுந் துயரம் நந்திய பானாள்
இமையாக் கண்ணோ டமையாக் காத்தநின்
மூதில் முதல்வன் துயில்கொண் டாங்குப்
போற்ரு மன்னரை யெள்ளிச் சிறிதுநீ
சேக்கை வளர்ந்தனை பெரும! தாக்கிய
வண்கை யவுண னுயிர்செல வாங்கவ
னன்றுணர்ந் தாங்கு வென்றி மேய
வாடா வஞ்சி மலைந்த சென்னிப்
போராடு தானைப் பொலந்தேர் வளவ!
நின்றுயி லெழுமதி நீயும்
ஒன்ரு வேந்தர் பொன்றுதுயில் பெறவே''

—நச்—உரைமேற்கோள்.

(2) கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் = கூத்தர் முதலிய நால்வகை இரவலரும்;

[கூத்தர், பிறரொப்புக் கருதாது, பேசாமல் பாடாமல் மெய்ப்பாட்டால் அவிநயித்தாடுபவர். பாணர் இசை பாடுவோர்; இவர் தம்பாட்டும் கையாளுமிசைக் கருவியுங்

கருதி, இசைப்பாணர்—யாழ்ப்பாணர் — துடிப்பாணர் அதாவது மண்டைப்பாணர்—எனப் பலதிறப்படுவர்; யாழ்ப்பாணர் தம் யாழ்பற்றிச் சீறியாழ்ப்பாணர் அல்லது சிறுபாணர்—பேரியாழ்ப்பாணர் அல்லது பெரும்பாணர் —என்றிருவகையினராவர். இனி, பொருநராவார் நாடகத்தில் குறித்த ஒருவரைப் போல நடிப்பவர். (பொருந் = ஒப்பு). விறலி, இசைக்கேற்ப ஆடுபவள் [விறல் = உள்ளுணர்வை மெய்படக் காட்டுந் திறன். அத்திறலுடையார் விறலியர்.]

ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றிப் பெற்றபெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் = (பரிசில் பெற்று மீளுமொருவன் தன்னெதிரே பரிசில் விரும்பித் தரும்புரவலரைத் தேடிவரும் இரவலனுக்கு) வழியிடையில் தான் பெற்றுவரும் மிக்க பரிசில் வளத்தை மற்றவனுக்குத் தெரிவித்துத், தனக்களித்த புரவலன்பாற் சென்றுபெறச்சொல்லும் பகுதியும்;

இதில், கூத்தராற்றுப்படைக்கு மலைபடுகடாமும், பாணாற்றுப்படைக்குச் சிறுபாண்—பெரும்பாண்பாட்டுக்களும், பொருநராற்றுப்படைக்கு முடத்தாமக்கண்ணியார் கரிகாலனைப் பாடிய பொருநராற்றுப்படைச் செய்யுளும், விறலியாற்றுப்படைக்குப் புறநானூற்று 105, 33-பாட்டுக்களும் எடுத்துக் காட்டாகும்.

(அ) கூத்தராற்றுப்படைக்குச் செய்யுள்:—

"வான்தோய் வெண்குடை வயமா வளவன்
சான்றோர் தம்மினும் தோன்ற நல்கினன்;

சுரஞ்செல் வருத்தமொ டிரங்கி யென்றும்
இறந்தோ ரறியாப் பெருங்கலஞ் சுரக்குவன்;
சென்மதி, வாழிய நீயே; நின்வயின்
ஆடலு மகிழான், பாடலுங் கேளான்,
வல்லே வருகென விடுப்பி னல்லது
நில்லென நிறுக்குவ னல்லன், நல்லிசைப்
பெருந்தகை வேந்தர் கோலமொடு,
திருந்தா வாழ்க்கையின் வருந்து வோயே.''

—நச்—உரைமேற்கோள்

(ஆ) பாணராற்றுப்படைக்குச் செய்யுள்:—

''வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண! கேளினி நயத்திற்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டா ரகல நோக்கின மலர்ந்தே'' —புறம்—155,

(இ) பொருநராற்றுப்படைக்குச் செய்யுள்:—

''அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறு நசையுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந!

...........................................

கோடியர் தலைவ! கொண்ட தறிந!
.................. .. ... .. ......
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந!
வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி, வாழி, ஏழின் கிழவ!
பழுமர முள்ளிய பறவையின் யானுமவன்
இழுமென் சும்மை யிடனுடை வரைப்பின்
நரையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கென் னிடும்பை தீர
........... ........... ..........................
தன்னறி யளவையிற் றரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென்; வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
கரிகால் வளவன்
தாணிழல் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுது முன்னிற்கு விராயின்,
...................................... ...........
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவருஞ் செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே."—பொருநராற்றுப்படை

(ஈ) இனி, விறலியாற்றுப்படைக்குச் செய்யுள்:—
சேயிழை பெறுகுவை, வாணுதல் விறலி!
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை

வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினிர் செலினே". —புறம் 105.

(3) சிறந்த நாளினிற் செற்ற நீக்கிப் பிறந்த நாள் வயிற் பெருமங்கலமும் = பிறந்த வெள்ளணி நன்னாளில் சினமகற்றிச் சிறந்த பெருநாள் விழவயரும் பெருமங்கலம் என்னும் வெள்ளணி விழாவும்;

[பெருமங்கலம் = வெள்ளணி என்னும் பிறந்த நாள் விழா. அந்நாளில் வெள்ளையணிதலால், அஃதப்பெயர் பெற்றது. இகழும் பகைவரைக் கறுத்தலும் தவறு செய்தாரை ஒறுத்தலும் வெள்ளணி விழவொடு கொள்ளாத சினமாதலின் அவற்றை விலக்கிச், சிறைவீடு கொடை முதலிய சிறந்தன செய்வதே முறையாத லிதிற் சுட்டப் படுந் துறையாகும்.]

அதற்குச்செய்யுள்:—

(அ) "செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனாற் போந்தரமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்."
—நச்—உரைமேற்கோள்

(ஆ) "பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு"
—மதுரைக்காஞ்சி வரி—618—619.

(4) சிறந்த கீர்த்தி மண்ணு மங்கலமும் = முடி புனைந்த விழவின் நீராட்டு மங்கலமும்;

[வடநூல்களிலும் இது "பட்டாபிசேக உத்சவம்" என்ப்பாராட்டப் படுகிறது.]

இதற்குச் செய்யுள்:—

"மணிமுடி தான்சூடி வழுதியர்தென் கூடல்
அணியா தனமிவர்ந்த வந்நாள்—பணியணியான்
தாணினைந்து நீராடித் தாள்பணிவார் தார்மன்னர்,
வேணவெலா மீந்துவக்கும் வேந்து"

(5) நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபும் = உலகிய லொழுக்குயர்த்தும் புகழ்பெற்ற வேந்தனது குளிர்ந்த குடைநிழல் முறைமையும்,

அதற்குச் செய்யுள்:—

(அ) "அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானைப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளும் முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் மாறன் குடை."

(ஆ) ....................................
முரசு முழங்கு தானை மூவருள்ளும்

அரசெனப் படுவது நினதே பெரும!

...... ............. .............

ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ" வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே, கூர்வேல் வளவ!

—புறம். 35, வரி 4-21

(6) மாறூர்ச் சூட்டிய வாண்மங்கலமும் = பகைவர் பால் கொற்றங் கருதிக் கொண்டாடும் வாள்நீராட்டு மங்கல விழாவும்;

அதற்குச் செய்யுள்:—

"பார்தாங்குந் தண்குடையான் பாண்டியன்வாள்
பற்றலரின்
தார்தாங்கு மார்பிளக்கத் தாக்கியசெங் — நீர்முடையை
நீராட்டி நீக்கிநறு நெய்யணிநன் னாள்விழவைப்
பாராட்டு மாறன் படை."

(7) மன்னெயிலழித்த மண்ணுமங்கலமும் = நீண்டு நிலைத்த பகையரணெறிந்து பாழ்செய்து நீராடும் மற விழவும்;

அதற்குச் செய்யுள்:—

(அ) "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்." புறம். 15

(ஆ) "......... . ......... ...செற்றோர்
கடியரண் தொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்
உகிருடை யடிய ஓங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப்போர் வேட்டு,
வேறுபல் பூளையொ டுழிஞை சூடி
......... ......... ............... .........
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி,
வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியும் மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்.
.............................................. ...
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
அழல்வா யோரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்,
............... ..................................
வளைவாய்க் கூகை நண்பகற் குழறவும்
அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான்!

—பட்டினப்பாலை வரி, 228—270.

*[முன் உழிஞைத்துறையாகச் சுட்டிய "இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணுமங்கலம் எயிலையழியாது கைப் பற்றிய விழவாம்; இப்பாடாண்துறை, பற்றுது பகை யரணெறிந்தழித்துப் பாழ்செய்த களியாட்டைக் குறிப்ப தால் இது முன்னதின் வேறுதல் வெளிப்படை. இங்கு மங்கலம் மகிழ் கூரும் விழவைக்குறிக்கும்; மண்ணு விழ வெல்லாம் விழவயர்வார் நீராடித் தொடங்குமரபு பற்றிய குறிப்பு. எனவே, விழவுகள் மண்ணுமங்கல மெனப்பெறு தலறிக.]*

(8) பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்= இர வலர் புரவலன் தலைவாயிலை யணுகிப் புகழ்ந்து பரிசில் கேட்கும் பெற்றியும்;

*[கடைக்கூட்டு = தலைக்கடை சேர்தல். கடைஇய என்பது கடாவிய என்பதன் செய்யுட் சொல்: கடாவல்= கேட்டல்.]*

*இதற்குச் செய்யுள்:—*

*"பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்*
*கயங்களி முளியுங் கோடை யாயினும்*
*புழற்கா லாம்ப லகலடை நீழற்*
*கதிர்க்கோடு நந்தின் சுரிமுக வேற்றை*
*நாகிள வளையொடு பகல்மணம் புகூஉ*
*நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்*
*வான்தோய் நீள்குடை வயமான் சென்னி!*
*சான்ருே ரிருந்த அவையத் துற்ருேன்*

ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி யத்தை, உள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
னறிவுகெட நின்ற நல்கூர் மையே" —புறம்—266.

(9) பெற்றபின்னரும் பெருவளனேத்தி நடைவயிற் றோன்றும் இருவகை விடையும் = பரிசில் பெற்றபின்னும் (பெறுமுன் ஏத்தியது போலவே) பெற்றோன் ஈந்தோனை மீக்கூறிப்புகழ்ந்து இரவலன் தானே விடைவேண்டலும் அவனுக்குப்புரவலன் விடைதரலும் ஆகிய உலகவழக்கில் பயின்றுவரு மிருவகை விடைகளும்;

(1) பரிசிலன் விடைவேண்டற்குச் செய்யுள்:--

"........................................ ................

எல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ! சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக, வல்லே
அகறி ரோவெம் ஆயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென்."

—பொருநராற்றுப்படை. வரி 118-129

இவ்வடிகளில், பரிசிலன் பன்னாள் கரிகாற் புரவலனோ டிருந்து, தனதூர்செல்ல விடைகேட்க அவன் பிரிவுக்கு வருந்திப் பின்னும் அவன் வறுமையும் வேட்கையும் தீர ஈந்தனுப்பியது கூறுதலால், இது இரவலன் விடைகேட் குந் துறையாதல் காண்க.

(2) புரவலன் தானே விடைதரற்குச் செய்யுள்:—

"தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற, செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே; அன்னதோர்
தேற்றா ஈகையு முளதுகொல்?
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே." —புறம். 140

(10) அச்சமும் உவகையும் எச்சமின்றி நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும் காலங்கண்ணிய ஓம்படை உளப்பட = நன்னாளும் நல்லகுறி (வாய்ப்புள்) நற்சொல் (விரிச்சி) முதலிய மற்றைய வாய்ப்புக்களும் கொண்டு, தலைவனுக்கு நேரும் தீமைக்கச்சமும் நன்மைக்கு மகிழ்வும் கூர்ந்து கவனக்குறைவின்றி ஆய்ந்து ஏற்புடைய காலத்தை எண்ணிக்கூறும் வாழ்த்தடங்க;

இதற்குச் செய்யுள்:—

''காலனும் காலம் பார்க்கும், பாராது
வேலீண்டி தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே!
திசையிரு நான்கும் உற்கமுற்கவும், பெருமரத்
திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்,
வெங்கதிர்க் கனலி துற்றவும், பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்,
எயிறு நிலத்து வீழவும், எண்ணெயாடவும்,
களிறுமேல் கொள்ளவும், காழக நீப்பவும்,
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,
கனவி னரியன காணா நனவிற்
செருச்செய் முன்ப! நின் வருதிற னோக்கி
மையல் கொண்ட ஏமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்
கெவ்வங் கரக்கும் பைதல் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றால் தானே, காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவ! நிற்! சினை இயோர் நாடே'' —புறம் 41.

இதில், உற்கமுதலியன பகைவருக்குத் தீது சுட்டும் வாய்ப்புள் (உற்பாதம்). அவற்றைநோக்கிப் பகைவர்மேற் கிள்ளிபடையெடுத்துச்செல்ல, அவன்பகைவர் அஞ்சித் தத்தம் புதல்வரை முத்திமனக்கலக்கத்தைமனைவிமார்க்கு மறைப்பர். அந்நிலையிற் காற்றுக்கூடிய நெருப்புப்போல்

அவன் தகைவாரின்றி விரைந்துசென்று வென்று வீறெய்தப் பகைவர்நாடு பெருங்கலக்குறும் என்று, அவன் வென்றிப் புகழும் அவன் மாற்றார் நாடழிபிரக்கமும் கூறுதலால் இது கொற்றவள்ளைப்பாடாணாயிற்று. "மண் திணிந்த நிலனும்" எனும் புறப்பாட்டில்,

"ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலும் அளியு முடையோய்!
.......................................
பாஅல் புளிப்பினும் பக லிருளினும்,
.......................................
நடுக்கின்றி நிலியரோ வத்தை, அடுக்கத்து
.......................................
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"—புறம்2

எனவருவது பாடாண் திணையில் ஓம்படையுள்ளிட்ட வாழ்த்துத் துறையாகும்.

ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற் காலமூன்றொடு கண்ணியவருமே = உலகியலில்வரும் ஒழுக்க நோக்கால் முக்காலமுந்தழுவிப் பாடாண்துறைகள் வரும்.

குறிப்பு:— இந்நூற்பாவில் வரும் உம்மைகள் எண் குறிப்பன். "பக்கம்" என்பது இசை நிரப்பநின்றது ஈற்றேகாரம் அசை.

இதிற்கூறப்படுந் துறைகள் எல்லாம் பலதிறப்பட்ட புறத்திணைகளுக்குரிய வெனினும், அவை அவ்வத்திணைப்

பொருளோடமையாது தலைவன் புகழ் பரவல்களாயும் வருதலால் பாடாண்துறைகளாய் முடிகின்றன. அதனை லவை முன் பிறதிணைகளோடு கூறினும் ஆங்குவேறு பெருஞ்ஞேக்குடைமையின், இங்கவை கூறியன கூறும் குற்றமாகாமை தேறப்படும்.

**புறத்திணையியல் உரை முற்றிற்று.**

# சூத்திர முதற் குறிப்பகராதி


| சூத்திரம் | பக்கம் | சூத்திரம் | பக்கம் |
|---|---|---|---|
| அகத்திணை மருங்கி | 39 | தாவில் கொள்கை | 123 |
| அதுவே தானும் | 93 | தாவில் நல்லிசை | 221 |
| அமரர்கண் முடியு | 174 | தானை யானை | 113 |
| அறுவகைப் பட்ட | 125 | தும்பை தானே | 108 |
| இயங்கு படையரவம் | 79 | படையியங் கரவம் | 45 |
| உழிஞை தானே | 91 | பாங்கருஞ் சிறப்பிற் | 155 |
| ஊரொடு தோற்றம் | 197 | பாடாண் பகுதி | 172 |
| எஞ்சா மண்ணசை | 72 | மறங்கடைக் கூட்டிய | 51 |
| கணையும் வேலும் | 110 | மாற்றருங் கூற்றஞ் | 156 |
| காஞ்சி தானே | 154 | முழுமுத லரணம் | 91 |
| காமப் பகுதி | 192 | மெய்ப் பெயர் மருங்கின் | 202 |
| குடையும் வாளும் | 100 | மைந்து பொருளாக | 109 |
| குழவி மருங்கினும் | 195 | வஞ்சி தானே | 72 |
| கூதிர் வேனி | 133 | வழங்கியன் மருங்கின் | 186 |
| கொடிநிலை காந்தள் | 203 | வாகை தானே | 122 |
| கொடுப்போ ரேத்தி | 211 | வெறியறி சிறப்பின் | 56 |
| கொள்ளார் தேஎம் | 93 | வேந்துவிடு முனைஞன் | 41 |
| கொற்ற வள்ளை | 209 | | |

# இந்நூலில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள நூற்பெயர்களின் அகராதி

—※—

[எண்—பக்க எண்]


அகநானூறு 135, 207.
ஆசிரியமாலை 147, 158.
கம்ப ராமாயணம் 98, 194.
கலித்தொகை 66, 87, 197.
களவழி நாற்பது 137.
சிலப்பதிகாரம் 46, 50, 51, 54, 56, 80, 83, 85, 86, 88, 100, 106, 112, 114, 138, 139, 146, 164, 165, 207,
சீவகசிந்தாமணி 46, 80, 103, 114, 158.
தகடூர் யாத்திரை 99, 118, 164, 181.
திரிகடுகம் 151.
திருக்குறள் 65, 141, 143, 148, 149, 151, 152, 154, 155.
திருமுருகாற்றுப்படை 195.
நச்சி.உரை மேற்கோள் 180, 208, 215, 220, 222, 223, 226.
நற்றிணை 107
நெடுநல் வாடை 89, 134.
பட்டினப்பாலை 95, 229.
பதிற்றுப் பத்து 81, 82, 85, 95, 104, 106, 112, 114, 138, 183, 185, 186, 188.
பழமொழி 151.
பாரத வெண்பா 142.
புறத்திரட்டு 45, 46, 49, 116, 119, 142, 181.
புறநானூறு 48—51, 53, 62, 64—66, 68, 71, 81—85, 90, 94—97, 102, 105, 112, 115, 116, 118, 119, 121, 124, 140, 141, 146, 149—152, 158, 160—171, 181—184, 210, 212—216, 218, 219, 224, 225, 228, 230, 232—234.
புறப்பொருள் வெண்பா மாலை 62, 166.
பெருங்கதை 54.
பெரும்பாணாற்றுப்படை 60, 96, 104, 137, 145
பெரும்பொருள்விளக்கம் 97, 98, 101, 103, 135, 139, 145, 153.
பொருநராற்றுப் படை 59 224, 231.
மதுரைக்காஞ்சி 58, 80, 85, 144, 227
முத்தொள்ளாயிரம் 65, 86, 98, 115, 201, 202.
முல்லைப் பாட்டு 135.

## பிற்சேர்க்கை:

[குறிப்பு:— நாவலர் சோமசுந்தர பாரதியார் இந் நூலை 1942-இல் வெளியிட்டார். இவ்வுயரிய நூலைச் செட்டி நாட்டரசர்- அண்ணாமலைச் செட்டியாரவர்கட்குக் கையுறையாய் உரித்தாக்கி யுள்ளார் நாவலர். அதனைக் கீழே காணலாம்.]

மாட்சிமிக்க செட்டிநாட்டு மன்னர்

**உயர்திருவாளர்**

# டாக்டர் இராசா சர். அண்ணாமலைச்செட்டியார்

அவர்களுக்கு

## இப்புறத்திணையியற் புத்துரையைப்
## பாராட்டுக் கையுறையாய் உரித்தாக்கும்

# வாழ்த்துப்பா.

—○—

1. திருவிளைத் திருவையொத்த அறிவினானு மொருவனைக்
கருவில்மன்னு திருமணந்த கற்பகத்தி னுற்பவன்,
பொருவிலாத புகழினோடு புவியிலென்று மன்னனாய்
மருவிவாழ மாட்சியுற்று வழியினோர்க்கு நல்கினேன்.

2. ஆளுமன்னர் மரபினோர்தம் அறிவிலாத சிறுமையால்
நாளும்வீ றிழந்துவீழ, நன்றுசூழ மறிவுசெவ்
வேளுமெஞ்சு வினையையாளும் விறலினாலிப் புவியெலாம்
நீளும்நல்ல புகழுமன்னர் நிலையுமன்ன நிறுவினேன்.

3. இகன்மையற்ற வியல்பினால்நல் வின்சொலீர மனைஇனை
முகனமர்ந்து முறுவலோடு சிலசொலுந் திறத்தினால்
தகவுளந்து தாழ்விலாமற் சார்வுதீரத் தருதலால்
இகபரத்தி றப்பிலாச் சிறப்பையென்று மெய்தினேன்.

4. இன்னல்யாவு மடமையா லிங்கெழுவ தென்றுணர்ந்தது
துன்னலா தொழித்திடத் துணிந்தண்ணா மலைப்பெயர்
மன்னமக்க ளறிவுசால்நல் வாழ்வுறத்தன் நிதியினாற்
பன்னரும்பல் கலைகளோங்கு கழகமுண்டு பண்ணினேன்.

5. அறத்தினின்ற அசைவிலாத அறிவினல்ல ஆள்வினைத்
திறத்தினின்ற சூழ்ச்சிநன்று தேர்தலொன்று துணிவினாற்
சிறத்தலைத்தன் னுரிமைகொண்ட செம்மல்பாற்
[றொல்காப்பியர்
புறத்திணைப்புத் துறைபுணர்த்திப் புகழ்புரிந்து
போற்றுகேன்.

'மலையகம்', பசுமலை,
10—11—42.

ச. சோ. பாரதி.

# நாவலர் சோமசுந்தரபாரதியார்

# கல்வி அறப்பணிக்குழுவின் வெளியீடுகள்

## நாவலர் எழுதிய நற்றமிழ் நூல்கள்

**ஆராய்ச்சி நூல்கள்:**

திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர்தாய முறை, சேரர் பேரூர் என்னும் நான்கு அரிய ஆராய்ச்சி நூல்களின் தொகுப்பு. அழகிய கலிக்கா கட்டடம்—நாவலர் படத்துடன் — 312 பக்கங்கள் ...... **விலை ரூ. 6**

**தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை:**

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியர்பொருட்படலத்துக்கு நாவலர் கண்ட அரிய புத்துரை—அழகிய கட்டடம்—நாவலர் படத்துடன்—

அகத்திணையியல் — பக்கம் 264 .............. **விலை ரூ. 5**

புறத்திணையியல் — பக்கம் 250 ......... **விலை ரூ. 5**

மெய்ப்பாட்டியல் . ........................... (அச்சில்)

**மாரி பாயில்:**

நாவலரின் கவிப்புலமையை எடுத்துக்காட்டும் செய்யுள் நூல் ........................... (அச்சில்)

**மங்கலக்குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி:**

உலகியல், மக்கள் உளப்பாங்கு முதலியன எடுத்துரைக்கும் செய்யுள் நூல் ......... (அச்சில்)

**கட்டுரைத் தொகுப்பு:**

நாவலர் எழுதிய அரியஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ...................... (அச்சில்)

Navalar Bharathiar's English Works.. ...... ,,